84

# Asthikamatha :: :: Upakhyanam

*With illustrations*

Varakavi-Tiru
A. SUBRAMANYA BHARATI

LALITA VILAS BOOK-DEPOT
TRIPLICANE, MADRAS

Q2
N27
59624

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது

உ

செந்திலாண்டவன் திருவடிதுணை

# ஆஸ்திகமத : : : : உபாக்யானம்

## முதற்பாகம்

[சித்திரப் படங்களுடன் கூடியது]

திரு. அ. சிவாநந்தசாகர யோகீசுவரர்
மருமகரும் மாணவருமாகிய
வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதி
இயற்றியது.

நான்காம் பதிப்பு

பிரசுரகர்த்தர் :
லலிதாவிலாஸ புத்தகசாலையார்
திருவல்லிக்கேணி,
மதராஸ்.

ரைட்] 1927 [விலை அணு 6

MADRAS
P. R. RAMA IYAR AND CO.,
PRINTERS
1927

உ

செந்திலாண்டவன்

திருவடி துணை

# முகவுரை

## (நான்காம் பதிப்பு)

ஆஸ்திகமத உபாக்யானம் என்பதில் ஆஸ்திகமதம் என்பது தெய்வம் உண்டு என்று நம்பி அதனை வழிபடும் மதமாம். உபாக்யானம் என்பது சிறு கதை என்று பொருள் தருவது. ஆகவே ஆஸ்திகமத உபாக்யானம் என்பது தெய்வம் உண்டு என்கிற மத சம்பந்தமான கதை என்று பொருள் கொடுப்பதாம்.

உலகத்தில் பெரும்பான்மையர் ஆஸ்திகமதத்தினராவர். ஆஸ்திகமதத்தின ரெல்லோரும் தெய்வமுண்டென்றும், அதனை வழிபடுவோர் இகபர சுக மடைவரென்றும், செய்யும் வினைகளுக்குத் தக்கபடி புண்ய பாவங்களுண்டென்றும், புண்யத்திற்கு ஸ்வர்க்கமும் பாபத்திற்கு நரகமும் சித்திக்கும் என்றும் கூறுவர்.

இதனாலே அவர்கள் நீதி மார்க்கத்தினின்றும் எவ்வகையினும் தவறுவதற்கில்லை. தவறினால் பாவசம்பந்தமடைந்து, தெய்வகோபத்திற்காளாய், நரக துன்பத்தை அநுபவிக்க வேண்டுமன்றோ ?

இந்தியாவில் ஆஸ்திக மதத்தினர் பல ஜாதியினராய் நடை யுடை பாவனைகளிலும் ஆசார விவகாரங்களிலும் வேறுபட்டவரா யிருக்கின்றனர். ஆனால் நீதிமார்க்கத்தில்

எல்லோரும் ஒருபடித்தான நிலைமையிலேதா னிருப்பர். அதிலே வழுவுவதற்கில்லை.

நீதி என்பது பேரறிவினின்று தோன்றிய சட்டமாகும். அது தெய்வீக உண்மைகளை அறியும் அறிவைக் கொடுக்கும்; தெய்வத்தன்மையை அடையும்படி செய்யும். ஆகையினாலே நீதிமானே தேவ ஸந்நிதியில் இடம் பெறுவான். நீதிநெறியே தெய்வமறையாகும்.

ஆகவே ஆஸ்திகமதத்தின ரெல்லோரும் நீதிமார்க்கத்தில் வேறுபட்டவரல்லர். இது தமிழ்நூலாதலால் நாம் நமது தமிழ் நாட்டிலுள்ள ஆஸ்திகரையே கவனிப்போம். இந்தியர், கிறிஸ்தவர், மகம்மதியர் முதலிய இன்னோரே, இங்குள்ள ஆஸ்திகரில் பெரும்பான்மையராவர். இவர்கள் ஒருவர்க்கொருவர் பழகியே பொதுக் காரியங்களிலே உழைக்க வேண்டியவராகின்றனர். அதனாலேதான் இவர்களுள் ஒற்றுமை நிலைக்கவேண்டு மென்று பலர் பாடுபடுகின்றனர்.

கடவுள் எந்த மதத்திலும் நீதிமார்க்கத்தின் சார்பாகவே இருக்கிறார் என்பதைச் சிறுவர் உணர்வாராயின் அவர்கள் மத வெறுப்பற்றுத் தத்தம் மதக் கொள்கைகளிலே விலகாமல் நின்று, பொது விஷயங்களிலே ஒன்றுபட்டுப் பெருமை பெறுவது கூடுமென்கிற நம்பிக்கையுடன் இந்த நூல் எழுதியதாகும்.

ஆகவே தெய்வமகிமை, பெற்றோர் பெருமை, குருவின் பெருமை, பதிவிரதைகளின் மகிமை இவை முதலிய முக்கியமான விஷயங்களை எடுத்துக்கொண்டு, இந்தப் பாகத்தில் தெய்வமகிமை பெற்றோர் பெருமை இரண்டையும் ஆஸ்திகமத நூல்களிலே பெறப்படும் கதைகளின் மூலமாகவே விளக்க முன்வந்தோம்.

இந்தியருள் சைவம் வைஷ்ணவம் என்கிற உள்மத வெறுப்பொழியச் சைவ வைஷ்ணவமத நூல்களிலிருந்து விஷயத்திற்குத் தக்கபடி கதைகளை எடுத்துச் சம்பந்தப் படுத்திக் காட்டியிருக்கிறது. கிறிஸ்துவ மகம்மதிய மதங் களில் நாம் தலையிடவில்லை.

இந்த நூல் பிள்ளைகளுக் கென்றே எழுதியதாதலால் வாக்கியங்களை எழுதுவதில் எவ்வளவு கவனம் செலுத்துவது அவசியமோ அவ்வளவு தூரம் கவனம் செலுத்திச் சந்திகளும் கடின பதங்களும் எளிதிலே பொருள் விளங்காத மேற் கோள்களும் நீக்கி மிக எளியநடையில் எழுதியிருக்கிறோம்.

இந்த நூல் கவர்ன்மெண்டாருடைய அங்கீகாரம் பெற்று முதல் மூன்று பதிப்புகளில் ஆயிரக்கணக்கான புத்த கங்கள் செலவழிந்தன. இப்போது ஆண்டவன் கிருபை யினால் நான்காவது பதிப்பு வெளிவந்துள்ளன. இதனை யும் உபாத்தியாயர்கள் கவனித்துத் தத்தம் பள்ளிக்கூடங் களில் பிள்ளைகளுக்குப் பாடபுத்தகமாக உபயோகப்படுத் திப் பிள்ளைகள் நற்பயனையடையும்படி செய்வதுடன் பதிப் பித்த எமக்கும் இதுபோன்ற முயற்சியில் ஊக்கமளிப்பார்க ளென நம்புகிறோம்.

இந்த நூல் முட்டின்றி முடிய அடியார்க் கிரங்கி அருள்மழைபொழியும் ஆறுமுகப் பெருமானுடைய திரு வருளும் எமது குருநாதனின் ஆசீர்வாதமும் முன்னின்ற படியால், அவர்களுடைய திருவடிமலர் முடிசூடி அவர்களை வணங்குவோம்.

பெரியோர் இதிலுள்ள பிழை பொறுத்தருள்வர்.

குமாரவிலாசம், குமாரபுரம்
ராயப்பேட்டை, சென்னை.
21—3—27.

இங்ஙனம்,
திரு. அ. சுப்ரமண்ய பாரதி.

# பொருளடக்கம்

## 1. தெய்வமகிமை

I. கடவுள் அன்பர்க்கிரங்கும் அருளுடையவர்
(1) மார்க்கண்டேயர் ... ... 1
(2) துருவன் ... ... 5

II. கடவுள் எங்கும் விளங்குகிறார்
(1) பிரஹ்லாதன் ... ... 9
(2) அரிவாட்டாய நாயனார் ... ... 12

III. கடவுள் எல்லாமானவர்—அவரன்றி ஒன்றுமில்லை
(1) சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்தது 15
(2) அர்ஜுனன் தபசு ... ... 18

IV. அவ(கடவுள்)னன்றி ஓரணுவும் அசையாது
(1) சிவபெருமான் யக்ஷரூபமாய்த் தோன்றியது ... ... 20
(2) அர்ஜுனனும் பிராமணனும் ... 22

V. கடவுள் எல்லாம் வல்லவர்
(1) சிவபெருமான் ஆலகாலம் உண்டது ... 24
(2) காளிங்க நர்த்தனம் ... ... 26

VI. கடவுள் அன்பையே பெரிதாய் எண்ணுகிறார்
(1) கண்ணப்பர் ... ... 29

VII. எல்லாம் ஈசன் செயல்: பட்டணத்தார் ... 34

VIII. கடவுள் நல்லவர்களைக் காப்பார் (சாதுஜன ரக்ஷகர்)

(1) திரிபுர ஸம்ஹாரம் ... ... 38
(2) மகாபலி ... ... 40

IX. கடவுள் தம் அன்பரிடம் ஜாதிமதம் பாராட்டுவதில்லை

(1) நந்தனர் .. ... 42
(2) திருப்பாணாழ்வார் ... ... 44

X. கடவுள் நீதிமானுக்கு இரங்குவார்

மனுநீதிகண்ட சோழன் ... ... 47

XI. கடவுள் அன்பரை ஆபத்தில் காப்பாற்றுகிறார்

(1) கஜேந்திர மோக்ஷம் ... ... 50
(2) காரைக்காலம்மையார் ... ... 52

XII. கடவுள் அடியார்க்கு எளியவர்

(1) திருநாவுக்கரசு ஸ்வாமிகள் ... 54
(2) கணிகண்ணன் ... ... 56

XIII. கடவுள் எல்லாம் அறியவல்லவர்

(1) சிவபெருமான் ஜலந்தரனை அழித்தது 58
(2) கிருஷ்ணபகவான் பாண்டவர் சகாயனானது ... ... 60

XIV. எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத் தெய்வமடிக்கும்

(1) சூரபத்மனும் சுப்ரமண்யக் கடவுளும் 62
(2) ஸ்ரீராமனும் வாலியும் ... ... 64

தெய்வபலமே பலம்: கம்ஸவதம் ... ... 66

## 2. பெற்ஞோர் பெருமை

அல்லது

## புத்திரர்களின் கடமை

XVI. தந்தைசோல்மிக்க மந்திரமில்லை

(1) பரசுராமர் ... ... 69

(2) ஸ்ரீராமச்சந்திரன் ... ... 71

XVII. தந்தைக்கு இதந் தேடுவதே தனயனின் கடமை

(1) தருமாங்கதன் ... ... 74

(2) பீஷ்மர் ... ... 79

XVIII. தாயிற் சிறந்ததோரு கோயிலில்லை

பட்டினத்தார் ... ... 82

XIX. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

(1) புண்டரீகன் ... ... 84

(2) கௌசிகன் ... ... 89

XX. தந்தைசோல் காத்த தனயனடைந்த பெருமை

நாபாகன். ... ... 93



உ

செந்திலாண்டவன் திருவடிதுணை

# ஆஸ்திகமத உபாக்யானம்

## தெய்வமகிமை

### கடவுள் - அன்பர்க்கிரங்கும் அருளுடையவர்

(பக்தர்க் கிரங்கும் பரமதயாநிதி)

### 1. மார்க்கண்டேயர்

மார்க்கண்டேயர் மிருகண்டு என்னும் ஒரு மகரிஷியினுடைய பிள்ளை. மிருகண்டு முனிவர் காசிக்குப் பக்கத்தில் கடகம் என்கிற ஊரில் இருந்தார். அவர்க்கு நெடுநாளாகப் பிள்ளை இல்லாமல் இருந்தது. அந்தக் குறை நீங்க அவர் சிவபெருமானை நோக்கித் தவம் செய்தார். சிவபெருமான் அவர் முன்வந்து, "உனக்கு நூறு வயது வாழ்ந்திருக்கக்கூடிய பிள்ளை வேண்டுமா? பதினாறு வயது வாழ்ந்திருக்கக்கூடிய பிள்ளை வேண்டுமா?—நூறு வயதுடைய பிள்ளை பொல்லாதவனாய் இருப்பான். பதினாறு வயதுடையவன் நல்லவனாய் இருப்பான். எந்தப் பிள்ளை உனக்கு வேண்டும்?" என்று கேட்டார்.

2. மிருகண்டு "என் ஐயனே, எனக்குப் பொல்லாத பிள்ளை வேண்டாம். அதைவிடப் பிள்ளை இல்லாமலிருப்பதே நல்லது. பதினாறுவயது பிள்ளையாயிருந்தாலும் நல்ல பிள்ளையே வேண்டும்" என்று கேட்டார். சிவபெருமான் "உனக்கு உன் விருப்பப்படி நல்ல பிள்ளையே பிறப்பான்" என்று வரம் கொடுத்து மறைந்து விட்டார். ஈசுவரன் கொடுத்த வரத்தின் படியே மிருகண்டுவுக்கு ஒருபிள்ளை பிறந்

தான். அவனுக்கு அந்த மகரிஷி மார்க்கண்டேயர் என்று பெயரிட்டு அருமையாய் வளர்த்து வந்தார்.

3. மார்க்கண்டேயரை ஐந்தாவது வயதில் முனிவர் படிக்க வைத்தார்; ஏழாவது வயதில் அவருக்கு உபநயனம் செய்வித்தார். மார்க்கண்டேயர் படிப்பில் சுறு சுறுப்புடையவரா யிருந்தார்; ஆகையினால் வெகு சீக்கிரத்தில் படிக்க வேண்டிய நூல்களை யெல்லாம் படித்தார்; தாய் தந்தையர் இருவரையும் தெய்வமாக எண்ணி அவர்களிடம் பணிவாய் நடந்து வந்தார்.

4. மார்க்கண்டேயரிடம் அவருடைய தாய் தந்தையர் ஸந்தோஷ மடைந்தனர்; ஜகதீசனாகிய சிவபெருமானைத் தொழவும் பூஜிக்கவும் அவருக்குச் சொல்லி வைத்தனர். மார்க்கண்டேயர் தினந்தோறும் புஷ்பமெடுத்து வந்து சிவ பெருமானைப் பூஜிப்பார்; ஸ்தோத்திரங்களைப் பாடித் துதிப் பார்; பிறகு வேத அத்யயனம் செய்வார்.

5. மார்க்கண்டேயர் மகா புத்திசாலி; மகா சிவபக்த சிரோமணி—என்று எல்லோரும் அவரைப் புகழ்வார்கள். அப்படியிருக்கையில் அவர்க்கு வயது பதினைந்தாயிற்று. இந்தக் காலத்தில் மிருகண்டுவும் அவர் மனைவியும் அடிக்கடி துக்க மடைந்து கண் கலங்கினர். அதைக் கவனித்த மார்க்கண்டேயர் "நீங்களேன் துக்கப்படுகிறீர்கள்?" என்று கேட்டார். மிருகண்டு "அப்பா, உனக்குச் சிவபெருமான் பதினாறுவயது தான் கொடுத்திருக்கிறார். இப்போது உனக்குப் பதினாறாவது வயது பிறந்துவிட்டதல்லவா? இனி உனக்கு மரணம் வருமே என்று எண்ணித் துக்கப்படுகிறோம்" என்றார்.

6. மார்க்கண்டேயர், "இதற்காக நீங்களேன் துக்கப் படுகிறீர்கள்? சிவபெருமான் தம்மிடம் அன்புடையவர்க்கு விரும்பியவையெல்லாம் கொடுப்பவரல்லவா? அவரையே நம்

பியவர்களல்லவா நாம்? அவரை நான் இடைவிடாமல் பூஜை செய்து மரணம் வராமலிருக்கும் வழியைத் தேடுகிறேன். பிள்ளையினால் தாய் தந்தையர் ஸந்தோஷப்படுவதா? துக்கப் படுவதா? இன்று முதற்கொண்டே நான் ஈசனை நோக்கித் தவம் செய்கிறேன். தவத்தினால் ஆகாததும் உண்டோ? நீங்கள் என்னை அடைந்தது தவத்தினாலேதானே?''-என்றார்.

7. மார்க்கண்டேயரை இப்போது அவருடைய தாய் தந்தையர் இருவரும் தழுவிக்கொண்டு முத்தமிட்டனர். "அப்பா, அந்த ஜகதீசன் தந்த பாக்யந்தான் நீ. அவரு டைய திருவருளைப் பெற்றவர்க்குக் குறைவுண்டாவது ஏது? 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்'—என்று சொல்வார் களே, நீ கேட்டதில்லையா?'' என்றனர்.

8. மார்க்கண்டேயர் அந்த நிமிஷமே தாய் தந்தையரை வலம் வந்து வந்தனம் செய்தார்; "அம்மா விடை கொடுங் கள்! ஐயா விடைகொடுங்கள்!'' என்று தவஞ்செய்ய விடை கொண்டு மணிகர்ணிகை என்னும் கோவிலுக்குப் போனார்; கோவிலை வலம் வந்து, சிவபெருமானைத் தொழுதார்; தமது எண்ணத்தை முடித்துத் தரவேண்டுமென்று பகவானை வேண்டிக்கொண்டார்; அப்பால் அந்தக் கோவிலுக்குத் தென்புறத்தில் ஒரு லிங்கத்தை ஸ்தாபித்து வேறு நினைப் பில்லாமல் பூஜை செய்து வந்தார்.

9. மார்க்கண்டேயருடைய பூஜையில் சிவபெருமான் ஸந்தோஷமடைந்து அவர்க்குக் காட்சி தந்தார்; "அப் பனே, உன் எண்ணம் அறிந்தேன், உன்னை மரணத்துக்கு அகப்படாமல் காப்பாற்றுகிறேன்'' என்று வாக்குக் கொடுத்து மறைந்து போனார். பிறகு மார்க்கண்டேயர் சிவ பெருமானை ஸந்தோஷத்துடன் துதித்துக்கொண்டே வீட் டிற்குப் போனார்.

10. மார்க்கண்டேயரைக் கண்டதும் அவருடைய தாய் தந்தையர் இளங்கன்றைக் கண்ட பசுவைப்போல் ஓடி வந்து, "அப்பா வாடா! என்னய்யா வாடா!" என்று தழுவிக் கொண்டனர். மார்க்கண்டேயர் அவர்களை வணங்கி, "சிவ பெருமான் காட்சி தந்தார்; நான் அவரைக் கண்களாரத் தரிசித்தேன். 'மரணத்துக்கு அகப்படாமல் உன்னைக் காப்பாற்றுகிறேன்' என்று வாக்களித்தார். இனிக் கவலை வேண்டாம்" என்று சொல்லி அவர்கள் துக்கத்தை மாற்றினார்.

11. மார்க்கண்டேயருக்கு வீட்டிலிருக்க மனம் வரவில்லை. உடனே அவர் ஸ்தலயாத்திரை புறப்பட்டார்; பல சிவஸ்தலங்களுக்குப் போய்ச் சிவபெருமானைத் தரிசித்தார். கடைசியில் சோழதேசம் போய்த் திருக்கடையூர் என்னும் திவ்ய க்ஷேத்திரம் போனார்.

12. மார்க்கண்டேயர் அந்த ஸ்தலத்தில் சில நாள் தங்கிச் சிவபெருமானைப் பூஜை செய்துகொண்டிருந்தார். அப்பொழுது அவருக்குப் பதினாறுவது வயது முடிந்தது. அந்தக் கணக்குப்படி மார்க்கண்டேயரின் உயிரைக் கொண்டு போக யமன் வந்தான். மார்க்கண்டேயர் அப்பொழுது சிவ பெருமானைப் பூஜித்துக்கொண்டிருந்தார். அதைக் கண்ட யமன் மார்க்கண்டேயருடைய பக்கத்திலே போக மலைத்தான்; தூரத்திலிருந்தே மார்க்கண்டேயரை அழைத்தான்.

13. மார்க்கண்டேயர் அவன் பக்கம் திரும்பினார். யமன் பாசக்கயிறுடன் நின்றுகொண்டிருப்பது அவருக்கு நன்றாய்த் தெரிந்தது. உடனே அவர் சிவலிங்கத்தைக் கட்டிக்கொண்டு "யமன் வந்துவிட்டான், சம்போ, சங்கரா, மகாதேவா! என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று துதித்தார். அவருயிரைக் கொண்டுபோகத் தருணம் வந்து விட்டபடியால் தூரத்திலிருந்தபடியே யமன் பாசத்தை வீசினான்.

14. மார்க்கண்டேயர், 'ஆ! ஜகதீசா! மகாதேவா!' என்றார். என்ற அளவில் சிவபெருமான் சிவலிங்கத்திலிருந்து தோன்றி யமனை உதைத்துத் தள்ளினார்; "மார்க்கண்டேயா! பயப்படாதே! நீ என்றும் பதினாறு வயதாய் இருக்கக் கடவாய்" என்று வரம் தந்து மறைந்தார்.

15. மார்க்கண்டேயர் இப்படிச் சிவபெருமான் திருவருளால் சிரஞ்சீவியானார். இதை அவருடைய தாய் தந்தையர் அறிந்து கவலை நீங்கி அவர்களும் தவம் செய்யச் சென்றனர்.

16. அப்பால் சிவபெருமான் யமனை எழுப்பினார்; "நீ இனிமேல் என்னுடைய அன்பரிடம் செல்லாதே!" என்று புத்தி சொல்லி அவனை அனுப்பினார். யமன், "அப்படியே நடக்கிறேன்" என்று சொல்லிச் சிவபெருமானைத் தொழுது தன் உலகம் சென்றான். (ஸ்காந்தம்.)

---

கடவுள் - அன்பர்க்கிரங்கும் அருளுடையவர்

## 2. துருவன்

துருவன் உத்தானபாதன் என்னும் ஓர் அரசனுடைய புத்திரன். அந்த அரசனுக்கு இரண்டு மனைவிகள். மூத்தவளின் பெயர் ஸுநீதி; இளையவளின் பெயர் ஸுருசி. இவளுக்கு ஒரு பிள்ளை. அவளுக்கு ஒரு பிள்ளை. துருவன் ஸுநீதியின் பிள்ளை. ஸுருசியின் பிள்ளைக்கு உத்தமன் என்று பெயர். அரசனுக்கு இளையாளிடம் அதிகப் பிரியம். ஆகையினால் அரசன் அவளைத் தன் அரண்மனையிலேயே வைத்துக்கொண்டிருந்தான்; ஸுநீதியை வேறு அரண்மனையில் வைத்திருந்தான்.

2. துருவனுடைய தாய் பரமசாது; கட்டின பசுவைப் போலிருப்பாள்; பகவானிடம் அன்புடையவள். ஆகை

யினால் அவள் 'எல்லாம் ஈசன் செயல்' என்று இருந்தாள். ஸுருசி கர்வங்கொண்டவள்; தன் கணவன் தன்னிடம் அன்பாயிருப்பதனால் தன் மனம் போனபடி நடந்தாள்; ஸுநீதியை இழிவுபடுத்தி வந்தாள். ஸுநீதி அவளை ஒன்றும் சொல்வதில்லை; தன் செல்வக் குமாரனைக் கண்ணுங் கருத்துமாய்க் காப்பாற்றி வந்தாள்.

3. துருவனுக்கு ஐந்தாம் பிராயம் பிறந்தது. அப்பொழுது ஒருநாள் அவன் விளையாடிக்கொண்டே தந்தையின் அரண்மனை போனான். அரசன் அந்தச் சமயத்தில் உத்தமனைத் தன் மடியில் வைத்துக்கொண்டு ஆசனத்தில் உட்கார்ந்திருந்தான். அருகே ஸுருசி நின்றுகொண்டிருந்தாள். துருவன் அதைக் கண்டதும் 'அப்பா' என்று கூப்பிட்டுக்கொண்டே ஓடி அரசனுடைய மடியிலே உட்காரப் போனான்.

4. "துருவா, நில்லு! நீ எப்படியடா பயலே மகாராஜாவின் மடியிலே வந்து உட்காரலாம்?" என்று அவன் கையைப் பிடித்து ஸுருசி தூரத் தள்ளிவிட்டாள். துருவன் ஆத்திரத்துடன் அவளை உற்றுப் பார்த்தான். அரசன் ஒன்றும் பேசவில்லை. ஸுருசி, "அடே! ஏன் பார்க்கிறாய்? நீ ஸுருசியின் வயிற்றிலே பிறந்தவனா? இல்லை. உனக்கு இந்த வாழ்வு எப்படிக் கிடைக்கும்? நீ பகவானைக் குறித்துத் தவம் செய்! எனக்குப் பிள்ளையாகப் பிற! அப்பொழுது நீயும் உத்தமனைப்போல் இருக்கலாம். சை போ" என்று கோபித்துக்கொண்டாள்.

5. துருவன் அழுதுகொண்டே போய்த் தன் தாயாரிடம் நடந்ததைச் சொல்லித் துக்கப்பட்டான். ஸுநீதி, "அப்பா, அழாதே; என்னைப்போல் அவளும் உனக்குத்

தாய்தானே! நான் உன்னைக் கோபித்துக் கொள்வதில்லையா? அப்படி எண்ணி நீ அதை மறந்துவிடு'' என்றாள்.

6. துருவன், "அம்மா, நான் இங்கே இருக்கமாட்டேன். நம்முடைய வாழ்வு இழிவான வாழ்வு. இதில் எனக்கு விருப்பமில்லை. நான் தவஞ்செய்யப் போகிறேன். தவத்தினால் பெருமை உண்டாகுமல்லவா?'' என்று சொன்னான். ஸுநீதி, "இந்தச் சிறுவயதில் உனக்கு எப்படித் தவஞ் செய்யத் தெரியும்? தவம் செய்வதென்றால் எளிதில் முடியுமா? வேண்டாம் இந்த எண்ணம்'' என்று தடுத்தாள்.

7. துருவன், கேட்காமல் ஒரே பிடிவாதமாய்ப் புறப்பட்டுத் தவம் செய்யக் காட்டுக்குப் போனான். வழியில் நாரதர் அவனைக் கண்டு, அவன் மனவுறுதியை அறிந்து ஸந்தோஷப்பட்டார்; உடனே அவனுக்குத் திருமாலைத் தியானம் செய்யும் விதத்தை உபதேசித்தார்; தவஞ்செய்யும் வழியையும் காட்டிக் கொடுத்தார்.

8. துருவன் நாரதரை வணங்கி விடைகொண்டு புறப்பட்டு ஒரு பெரிய வனத்துக்குப் போனான். அங்கே ஓரிடத்தில் பயமில்லாமல் தைரியமாயிருந்து நாரதர் சொல்லியபடி பகவானை எண்ணித் தவஞ்செய்து வந்தான். துருவன் வேறு நினைப்பில்லாமல் ஒரே தியானமாயிருந்தான். அதனால் அவனுக்குப் பசி, தாகம், பயம் ஒன்றுமே தெரியவில்லை. அவன் கொஞ்சமும் அசையாமல் கல்லைப்போல் இருந்துவிட்டான். அதனால் மிருகங்களும் அவனை ஒன்றும் செய்யவில்லை. ஆனால் சில பூதங்கள் வந்து அவனைப் பயப்படுத்தின. அதற்கு அவன் அஞ்சவில்லை.

9. துருவன் இப்படி ஆறுமாத காலம் கடுமையான தவம் செய்தான். ஒருநாள் திருமால் அவன் தியானம் செய்து வந்த ரூபத்தோடு அவனுக்குக் காட்சித் தந்தார்.

பகவானுடைய தரிசனங்கண்ட துருவன் அப்படியே பிர மித்து நின்றுவிட்டான். பகவான், தம்மைத் துதித்துவணங்க அவனுக்கு ஞானத்தைத் தந்தார். பிறகு துருவன் துதித் தான்; வணங்கினன். பகவான் அவனிடம் சந்தோஷ மடைந்து, "அப்பா, உனக்கு என்றும் அழியாத பதவி தந்தோம். நீ இன்னும் சிலகாலம் அரசு செய்து பிறகு அங்கே வரலாம். நீ இனிப் பெருமையோடு வாழ்வாய், போ" என்று சொல்லிவிட்டு மறைந்தார்.

10. துருவன் பகவானைத் துதித்துக்கொண்டே நகரம் வந்தான். முன் வழியில் துருவனைக் கண்டுபோன நாரதர் அரசனிடம் போய் அவனைக் கண்டித்தார். அரசன் தன் குற்றத்தைத் தெரிந்துகொண்டு "துருவன் எப்போது வரு வான்; அவன் முகத்தை எப்போது காண்பேன்" என்று கவலைகொண்டிருந்தான். ஆகையினால் துருவன் வந்ததும் அவனைக் கட்டித் தழுவி முத்தமிட்டு வாழ்த்தினன்: ஸுருசியும் வாழ்த்தினள்; ஸுநீதியும் வாழ்த்தினள்.

11. துருவன் அவர்கள் மூவரையும் வணங்கினன். நகரமெல்லாம் துருவனுடைய முயற்சியைப் புகழ்ந்தது. அப்பால் அரசன் துருவனுக்கு வயது வந்ததும் பட்டங் கட்டி வைத்தான். துருவன் நீண்டகாலம் நீதிதவறாமல் அரசு செய்தான்; பெரும்புகழோடு வாழ்ந்தான். அப் பொழுது ஒருநாள் உத்தமன் காட்டிற்கு வேட்டையாடப் போய் அங்கேயே இறந்தான். அப்பால் முடிவில் துரு வன் பகவான் வாக்களித்தபடி மேலான பதவியை அடைந் தான். இன்னும் அவன் துருவ நக்ஷத்திரமாக ஆகாயத் தில் விளங்குகிறான். (பாகவதம்)

## கடவுள்—எங்கும் விளங்குகிறார்

## (ஸர்வவ்யாபி)

### 1. பிரஹ்லாதன்

ஹிரண்யகசிபு ஹிரண்யாக்ஷன் என்று இரண்டு அசுரர்கள் இருந்தனர். அவர்கள் கடவுளை நோக்கித் தவம் செய்தனர். கடவுள் அவர்களுக்கு நெடுங் கால ஆயுளைத் தந்தார்; ஒருவராலும் வெல்லமுடியாத பலத்தையும் தந்தார். அதனால் அவர்கள் கர்வங்கொண்டு மனம் போனபடி நடக்கத் துணிந்தனர்; தேவர்களுக்குப் பலவிதமான தொந்தரவுகளைச் செய்தனர்.

2. ஹிரண்யகசிபு ஹிரண்யாக்ஷன் என்ற பேர்கள் கேட்டாலே உலகம் நடுங்கும். தேவர்கள் நல்லவர்கள். அசுரர்கள் இயல்பிலேயே பொல்லாதவர்கள். அவர்களுக்கும் தேவர்களுக்கும் எப்போதும் பகையுண்டு. ஆனால் கடவுள் எப்போதும் நல்லவர் பங்கிலேதான் இருப்பார். அவர்க்குத் துன்பஞ் செய்பவர்களைத் தவறாமல் அவர் அழிப்பார், ஆகையால் கடவுள் இந்த அசுரர்களிருவரையும் தண்டிக்கச் சமயம் பார்த்திருந்தார்.

3. ஹிரண்யாக்ஷன் ஒரு கொடிய செய்கை செய்தான். அதனால் அவனை மகாவிஷ்ணு கொன்றுவிட்டார். ஹிரண்யகசிபு பிறகு மகாவிஷ்ணுவினிடம் பகை கொண்டான். அதனால் அவன், மகாவிஷ்ணுவைத் தெய்வமாக நினைத்துத் தொழுகிறவர்களைப் பிடித்துத் தண்டித்து வந்தான்; அவருடைய பெயர் சொல்வதும் கூடாதென்று கட்டளை யிட்டான்; ஹிரண்யாயநம: என்று தன் பெயரைச் சொல்லி வணங்க வேண்டுமென்று எல்லாருக்கும் விதி விதித்தான்! எல்லாரும் பயந்து அவனுடைய கட்டளைப் படியே நடந்து வந்தனர்.

4. ஹிரண்யனுக்கு ஒரு பிள்ளை பிறந்தது. அதற்குப் பிரஹ்லாதன் என்று அவன் பெயரிட்டான். பிரஹ்லாதன் நல்ல குணமுடையவன். மகாவிஷ்ணுவினிடத்தில் அவன் மிகுந்த அன்பு கொண்டான். அவன் அவரையே யாவர்க்கும் மேலான தெய்வம் என்று தெரிந்துகொண்டான்; ஆகையினால் அவரையே தனக்குத் தெய்வமாகக் கொண்டான்.

5. ஹிரண்யன் தன் மகனைப் பள்ளிக்கூடத்திலே வைத்தான். வாத்தியார் அவனுக்கு, ஹிரண்யாய நம: என்று சொல்லும்படி முதலிலே சொல்லிக் கொடுத்தார். பிரஹ்லாதன் நாராயணாய நம: என்று சொன்னான். வாத்தியார் அவனைப் பார்த்து ஆச்சரிய மடைந்தார்; "இவனுக்கு இந்த வயதில் மகாவிஷ்ணுவே தெய்வமென்பது எப்படித் தெரிந்தது? இவன் குணம் இவன் தந்தையின் குணத்துக்கு முழுவதும் வேறாயிருக்கிறதே! இது இவனுக்கும் பிறப்பிலேயே அமைந்த குணம்போல் இருக்கிறது. ஈசன் செயலை யாரறிவார்?" என்று எண்ணி அவனிடம் ஸந்தோஷங் கொண்டார்.

6. ஹிரண்யனுக்குப் பயந்து நடப்பவ ராகையால், "அப்பா அப்படிச் சொல்லாதே! சொன்னால் நீ தண்டனை அடைவாய்! நான் சொல்லிக் கொடுக்கிறபடி ஹிரண்யாய நம: என்று சொல்" என்று அவர் சொல்லிக் கொடுத்தார். அவன் அப்படிச் சொல்ல இணங்கவில்லை. அதனால் வாத்தியார் அவனை ஹிரண்யனிடம் கொண்டுபோய் விட்டு, "இவன் துஷ்டன்; தங்கள் பகைவனுடைய பெயரைச் சொல்லுகிறான்; தங்கள் பெயரைச் சொல்லமாட்டேனென்கிறான்; நல்ல வழியிலும் சொன்னேன். பயப்படுத்தியும் சொன்னேன்" என்றார்.

7. ஹிரண்யன் ப்ரஹ்லாதனைத் தன் பக்கத்தில் அழைத்து, "அப்பா, இங்கே வா. அந்த மகாவிஷ்ணு உன்னுடைய சிற்றப்பனைக் கொன்றவன்; நமக்குப் பகைவன்; அற்பன். அவனையேன் புகழ்கிறாய்? என் பெயர் எங்கும் விளங்கும்படி என் பெயரையே சொல்லு" என்று புத்தி சொன்னான். ப்ரஹ்லாதன் கேட்கவில்லை; நாராயணாய நம: என்றே சொன்னான். ஹிரண்யன் நல்ல வார்த்தை சொல்லிப் பார்த்தான்; மிரட்டிப் பார்த்தான். ப்ரஹ்லாதன் இணங்கவில்லை. அதனால் அவன் கோபங் கொண்டு, ப்ரஹ்லாதனை யானையின் காலில் மிதிபட வைத்துக்கொன்றுவிடக் கொலையாளிக்கு உத்தரவிட்டான்.

8. ஹிரண்யன் கட்டளைப்படி கொலையாளிகள் ப்ரஹ்லாதனை அழைத்துப் போய் ஓரிடத்தில் நிறுத்தி அவன் மீது யானையை ஏவினர். யானை ப்ரஹ்லாதனைக் கண்டதும் தூர விலகிப்போய் விட்டது. பிறகு ஹிரண்யன் ப்ரஹ்லாதனைக் கடலிலே தள்ளிக் கொல்லச் சொன்னான். அப்படியும் அவன் இறக்கவில்லை. அப்பால் அந்தப் பாதகன், பிள்ளையை மலையின்மேலே கொண்டுபோய் உருட்டிவிடும்படி சொன்னான். அதிலும் ப்ரஹ்லாதன் இறக்கவில்லை. ஒவ்வொரு தடவையும் அவனை பகவான் காப்பாற்றி வந்தார்.

9. ஹிரண்யன் இப்படிச் செய்யச் செய்ய பகவான் காப்பாற்றி வந்தபடியால் ப்ரஹ்லாதனுக்கு அவரிடம் இன்னும் அதிகமான அன்புண்டாயிற்று. அவன் அவரையே துதித்தான். ஹிரண்யன் என்ன செய்வான், பொல்லாத ஆத்திரங் கொண்டான். "இவனை இந்த நிமிஷமே விஷங் கொடுத்துக் கொல்லுகிறேன்" என்று சொல்லி விஷத்தைக் கொடுத்தான். ப்ரஹ்லாதன் பகவானைத் துதித்துக்

கொண்டே அந்த விஷத்தைக் குடித்தான், விஷம் அமிர்தமாய் அவனுக்கு இன்னும் திடத்தைக் கொடுத்தது.

10. ஹிரண்யன் பெருமூச்சுவிட்டு "அடே, நீ சொல்லும் அந்தத் தெய்வம் எங்கேயடா இருக்கிறது? அதனை எனக்கு இப்போது காட்டு" என்றான். பிரஹ்லாதன், நான் சொல்லும் தெய்வம் எங்கும் நிறைந்திருக்கிறது. அது இல்லாத இடமில்லை" என்றான். ஹிரண்யன் கோபங்கொண்டு தன் முன்னிருந்த ஒரு தூணைச் சுட்டிக்காட்டி "இந்தத் தூணிலிருக்குமோ அந்தத் தெய்வம்?" என்று கேட்டான். பிரஹ்லாதன், "இந்தத் தூணிலுமிருக்கும் துரும்பிலுமிருக்கும்" என்றான்.

11. ஹிரண்யன், "இந்தத் தூணிலிருக்குமோ பார்க்கிறேன்" என்று தூணைக் கையினால் குத்தினான். பகவான் அந்த நிமிஷமே நரசிங்கமூர்த்தியாக வெளிவந்து ஹிரண்யனைக் கொன்றார்; பிரஹ்லாதனைச் சகல அண்டங்களையும் ஆளும் சக்கிரேசுவரனாக்கினார். பிரகலாதன் அநேக வருஷ காலம் நீதி தவறாமல் அரசு செய்தான்; பின்பு மோக்ஷமடைந்தான். —(பாகவதம்)

---

கடவுள்—எங்கும் விளங்குகிறார்

## 2. அரிவாட்டாய நாயனார்

அரிவாட்டாய நாயனார் முதலில் தாயனார் என்று பேர் பெற்றிருந்தார்; சோழ தேசத்தில் கணமங்கலம் என்கிற ஊரிலே வசித்துவந்தார். அவர் வேளாள குலத்தில் பிறந்தார்; மிகுந்த செல்வவந்தரா யிருந்தார்; இவ்வளவுடன் சிவநேசச் செல்வராகவும் விளங்கினார்.

2. அரிவாட்டாய நாயனார் அடக்கம், பொறுமை, ஈவு, இரக்கம் முதலிய உத்தம குணங்கள் வாய்ந்தவர்.

அவர் மனைவியும் எல்லாவிதத்திலும் அவரை அநுஸரித்து நடந்து வந்தாள். அந்த மாதரசி பதிபக்தியிலே சிறந்திருந்தமையால், அரிவாட்டாய நாயனர், ஒரு குறைவுமில்லாமல் இல் வாழ்க்கையை நடத்தி வந்தார்.

3. அரிவாட்டாய நாயனர் தினந்தோறும் செந்நெல் அரிசியும் செங்கீரையும் மாவடுவும் கொண்டுபோய்ச் சிவபெருமானுக்குத் திருவமுது செய்வித்து வருவார். அப்படியிருக்கையில் அவருக்கு வறுமை உண்டாயிற்று. அந்தக் காலத்திலும் அவர் தாம் ஸ்வாமிக்குத் திருவமுது செய்யும் வழக்கத்தை நிறுத்தவில்லை; தினந்தோறும் கூலிக்கு நெல் அறுப்பார்; தமக்குக் கூலியாகக் கிடைக்கும் செந்நெல்லை யெல்லாம் ஸ்வாமிக்குத் திருவமுது செய்விப்பார்; தமக்குக் கிடைக்கும் கார் நெல்லைக் கொண்டு தாம் ஜீவனஞ் செய்வார்.

4. அரிவாட்டாய நாயனர், இப்படிச் செய்கையில் சிவபெருமான் அவருடைய பக்தியை உலகத்துக்குக் காட்டத் திருவுளங்கொண்டார்; ஆகவே அவ்வூரிலுள்ள வயல்களிலெல்லாம் செந்நெல்லே விளையும்படி செய்தார். நாயனர், அதுகண்டு மனமகிழ்ந்தார்; "இப்படிக் கிடைப்பது அடியேன் செய்த புண்ணியம்" என்று எண்ணினர்; தினந்தோறும் கிடைக்கும் கூலி நெல்லை ஸ்வாமிக்குத் திருவமுது செய்விப்பார்; தாம் பட்டினியாகவே இருப்பார்.

5. அரிவாட்டாய நாயனர் மனைவியார், அவருடைய உணவிற்கு ஓர் ஏற்பாடு செய்தாள். தினந்தோறும் தன் வீட்டுப் பின்புறத்துத் தோட்டத்துக்குப் போய் இலைக்கறி கொய்து சமைத்து வைப்பாள். நாயனர் அதை உண்டு திருப்தி அடைவார். இப்படி யிருக்கையில் தோட்டத்திலுள்ள இலைக்கறியெல்லாம் அற்றுப் போயிற்று. பிறகு அவர்

மனைவியார் தண்ணீர் வார்த்தார். நாயனார் அதைப் பானம் பண்ணிவிட்டு எப்போதும்போல் திருப்பணி செய்துவந்தார்.

6. அரிவாட்டாய நாயனார், அப்பொழுது ஒருநாள் வழக்கம்போல் ஸ்வாமிக்குச் செந்நெல்லரிசியும் செங்கீரையும் மாவடுவும் கூடையில்வைத்துச் சுமந்துகொண்டு போனார். அவர் மனைவி பஞ்சகவ்வியம் கொண்டு அவர்க்குப் பின்னே நடந்து போனாள். முன்னே சென்ற நாயனார் பசியினால் கால்கள் தள்ளாடித் தவறிக் கீழே விழுந்துவிட்டார். மனைவியார் பஞ்சகவ்வியக் கலயத்தை மூடியிருந்த தம் கையினால் அவரை அணைக்கப் போனார். அணைத்ததும் பஞ்சகவ்வியம் எல்லாம் கீழே சிந்திப்போயிற்று.

7. அரிவாட்டாய நாயனார் அதுகண்டு, "இனிக் கோவிலுக்குப் போவதினாலே பயன் யாது?" இங்கே சிந்திய செந்நெல் அரிசியையும் செங்கீரையையும் மாவடுவையும் என் ஐயன் திருவமுது செய்தருளும்படியான பாக்கியம் இல்லாமற் போயிற்றே" என்று துக்கப்பட்டார். உடனே, "இந்தப் பிறவி இனி உலகத்திலிருக்கவேண்டுமா?"—என்றெண்ணி, தமது கையிலிருந்த அரிவாளினால் தமது கழுத்தை அரியத் தொடங்கினார்.

8. அரிவாட்டாய நாயனாரின் அரிவாள் பிடித்த கையைப் பூமியிலிருந்து ஒரு கை மேலே வந்து தடுத்தது. தடுக்கவே நாயனார் பிரமித்து நின்றார். அப்பொழுது மாவடுவைக் கடிக்கும் சப்தம் பூமிக்குள் கேட்டது. நாயனார், "சிவபெருமான் அடியேன்மீது இரக்கங் கொண்டிருக்கிறார்" என்று துதித்தார். உடனே பகவான் விருஷப வாகனத்தின் மீது பார்வதி தேவியுடன் காட்சி தந்தார்; "அன்பனே, உன் அன்பினால் மனமகிழ்ந்தேன்; நீ உன் மனைவியோடு இனி முத்தி பெறுவாய்" என்று சொல்லி மறைந்தார்.

அவ்வாறே அவர்கள் முத்தி அடைந்தனர். நாயனார், அரி வாள் கொண்டு தமது கழுத்தை அரிய முயன்றா ரல்லவா? அதனால் அவர்க்கு அரிவாட்டாய நாயனார் என்று பெய ராயிற்று.—(பெரிய புராணம்)

---

கடவுள் எல்லாமானவர்—அவரன்றி ஒன்றுமில்லை

(ஸர்வாந்தர்யாமி)

## 1. சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்தது

தென் இந்தியாவில் மதுரை சிறந்த சிவக்ஷேத்ரம். இந்த ஊரில் வைகை என்கிற ஓர் ஆறு ஓடுகிறது. இதில் முன் ஒரு காலத்தில் பெரிய வெள்ளம் பெருகிற்று. அதனால் அந்தப் பட்டணத்து ஜனங்கள் பயப்பட்டார்கள். ஆற்றுக்கு அணைகட்டியாக வேண்டியது அவசியமாயிற்று. இல்லாவிட்டால் ஊரிலுள்ள வீடு வாயில்களெல்லாம் அழிந்துபோய்விடும். ஆகையினால் ஜனங்கள் அரசனிடம் போய்த் தெரிவித்துக் கொண்டனர். அரசன், உடனே ஆற்றை வந்து பார்த்தான். ஆறு பயங்கரமாகப் பெருகியது. அரசன் உடனே, மந்திரிகளைப் பார்த்து, "நமது குடிகள் ஒருவர் தவறாமல் அணைகட்ட வரும்படி பறையடித்துத் தெரிவியுங்கள்" என்று கட்டளை யிட்டான். மந்திரிகள் அப்படியே செய்தனர்.

2. ஊரில் ஒருவர் தவறாமல் எல்லாரும் கூடையும் மண்வெட்டியும் எடுத்துக்கொண்டு ஆற்றங்கரைக்கு வந்து சேர்ந்தனர். சேவகர்கள், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பங்கு அணைபோடும்படி அளந்துகொடுத்தனர். அவ்வூரில் ஒரு கிழவி இருந்தாள். அவள் பிட்டு சுட்டு ஜீவனம் செய்து வந்தாள். அவளுக்குப் பிள்ளை பெண்களுமில்லை; உறவினருமில்லை. அவள் சிவபெருமானிடம் அன்புடையவள்.

எப்போதும் அவரையே தியானித்து வருவாள். அவ ளுடைய பங்கை அடைப்பதற்கு ஒருவருமில்லை. அவள் கிழவி யாகையினால், அவளால் மண்வெட்டவும் கூடையில் கொண்டுபோய்க் கொட்டவும் முடியாது.

3. கிழவி என்ன செய்வதென்று பார்த்துக் "கூலிக் காகப் பிட்டு தருகிறேன். யாராவது என் பங்கை அணை போடுவீர்களா?" என்று கேட்டாள். கூலியாள் ஒரு வருங் கிடைக்கவில்லை. கிழவி, "ஐயோ என்ன செய்வேன்? சேவகர்கள், ஏன் உன் பங்கை அடைக்கவில்லை என்று தண் டிப்பார்களே! ஜகதீசா! கருணாகரா! உன்னைத் தவிர இந்த ஆபத்திலிருந்து என்னை யாவர் காப்பாற்றுவார்? உன்னை நம்பி இருப்பவளல்லவா நான்? என்னைக் கை விடாதே!" என்று சொல்லிச் சிவபெருமானைத் தியானம் செய்தாள். அவள் கண்களிலிருந்து நீர் பெருகிற்று.

4. சிவபெருமான் கிழவியிடம் இரக்கங் கொண்டார்; உடனே ஒரு கூலியைப்போல் வேஷம் பூண்டு கையில் கூடையும் தோளில் மண்வெட்டியும் கொண்டு கிழவியிருந்த வீட்டு வாசலிலே போய், "ஐயா கூலி, அம்மா கூலி!" என்று கூவினார். கிழவி, "ஏ கூலி, இங்கே வா; எனக்குக் கூலியாள் வேண்டும். வருகிறாயா?" என்று கேட்டாள்.

5. சிவபெருமான், "ஏ கிழவி, எனக்கு நீ கூலியை முன்னே கொடுத்துவிட வேண்டும்" என்று கேட்டார். கிழவி, "நான் கூலிக்காக பிட்டுதான் தருவேன்" என்றாள். சிவபெருமான் "தா, அதை முன்னே கொடுத்துவிடு" என் றார். கிழவி, 'தருகிறேன்' என்று அழைத்துப்போய் பிட்டு கொடுத்தாள். சிவபெருமான், "இன்னும் வேண்டும் இன் னும் வேண்டும்" என்று கேட்டுப் பிட்டை வாங்கி வாங்கி உண்டார்; பிறகு இன்னும் கொஞ்சம் வாங்கித் தமது



கந்தைத் துணியிலும் முடிந்துகொண்டார். கிழவி, "அப்பா, வா, நான் அணைகட்டவேண்டிய இடத்தைக் காட்டுகிறேன்" என்றழைத்தாள்.

7. சிவபெருமான், 'இதோ, வந்தேன்' என்று அவளோடு கூட நடந்தார். கிழவி ஆற்றங்கரைக்குப் போய் அந்த இடத்தைக் காட்டி, "அப்பா இதுதான் நாம் அடைக்க வேண்டிய பாகம்" என்று சொன்னாள். சிவபெருமான், "நீ போ, கவலைப்படாதே ஆயா; இதோ அடைக்கிறேன்" என்றார். கிழவி, "பழுது சொல்லாத படி அடைத்துவிடு. உனக்கு இன்னும் பிட்டு தருகிறேன்" என்று சொல்லிப் போய்விட்டாள்.

8. சிவபெருமான் மண்ணை வெட்டுவார்; கூடையில் கொஞ்சம் வாருவார்; உடனே அணைவாயில் கொட்டுவார்; பிறகு களைத்தவர்போல் கீழே பெருமூச்சுடன் உட்காருவார்; உடலிலுள்ள வேர்வை நீங்கக் கையினாலே விசிறிக்கொள்வார்; அப்பால் எழுந்து சுறுசுறுப்பாய் வேலை செய்வது போல் காட்டிக்கொள்வார்; அங்குமிங்கும் போவார்; கொஞ்சநேரம் ஆடுவார்; பிறகு பாடுவார்; பைத்தியக்காரனைப்போல் சிரிப்பார்.

9. அவர் அப்படியிருப்பதைப் பார்த்த சேவகர்கள் மிரட்டினால் அவர்கள்முன் பயந்தவர்போல் நடிப்பார்; பிறகு விளையாடுவார். இதனால் சேவகர்கள் கோபங்கொண்டு அரசனிடம் சொன்னார்கள். அரசன் தன் மந்திரிகளோடு அங்கே வந்து சிவபெருமானாகிய கூலியை வரவழைத்து, "ஏன் உன் வேலையைச் செய்யாமல் வீண்காலம் போக்கினாய்?" என்று கோபங்கொண்டு தன் கைப்பிரம்பினால் அவரை அடித்தான். அந்த அடி பட்டதும் சிவபெருமான் தாம் வைத்திருந்த கூடையையும் மண்வெட்டியையும் எறிந்து விட்டு மறைந்து விட்டார்.

2

10. ஆனல் அந்த அடி, அரசன்மேல் பட்டது; மந்திரிகளின்மீது பட்டது; மற்றும் அங்கிருந்தவர்கள் இல்லாதவர்கள் மேலும் பட்டது; மாடு, வீடு, மரம், மட்டை, மண், விண் எங்கும் பட்டது. எல்லாரும், உன்மீது பட்டது, என்மீது பட்டது என்று பேசிக்கொண்டு ஆச்சரியப்பட்டனர். அரசன் இவற்றைப் பார்த்து, "சிவபெருமானே கூலியாளாக வந்து திருவிளையாடல் செய்திருக்கிறார்; இல்லாவிட்டால் கூலியை அடித்த அடி இப்படி யாவர் மீதும் படுமா? சிவபெருமானே எல்லாமாக விளங்குகிறவர் என்பதை அறிந்தோம்" என்று சொல்லி ஈசனைத் துதித்தான்.

11. சிவபெருமான் திருவருளால் ஆற்றில் வெள்ளமும் அடங்கியது. சகல ஜனங்களும் சிவபெருமான் எல்லாமாய் விளங்குகிறார் என்பதை அறிந்தனர்; அவர் அன்பர்களுக்கு எளியவர் என்பதையும் அறிந்து அவரிடம் அன்புகொண்டனர்.

---

கடவுள்—எல்லாமாய் விளங்குகிறர்

## 2. அர்ஜுனன் தபசு

அர்ஜுனன் பாண்டவரில் ஒருவன். பாண்டவர் துரியோதனனால் பன்னிரண்டு வருஷகாலம் காட்டில் வசித்தனர். அப்பொழுது அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் என்கிற ஒரு தெய்வ அஸ்திரம் அடையச் சிவபெருமானை நோக்கி, ஹிமயமலைச் சாரலில் ஒருகாலில் நின்று தவம் செய்தான். அவன் அந்த அஸ்திரம் பெற்றுவிட்டால் அவனை ஒருவரும் வெல்ல முடியாது. அந்த அஸ்திரத்தினால் அவன் எல்லாரையும் ஜயித்து விடுவான். இதனால் துரியோதனன் அவனைக் கொல்ல ஓர் அசுரனை ஏவினான். அசுரன் பன்றி வடிவம் எடுத்துக்கொண்டு அர்ஜுனன் முன்னே போனான்.

2. அர்ஜுனன் தபசுக்கு வந்திருந்தாலும் அவன் தன்னைக் காத்துக்கொள்ள வில்லும் அம்பும் வைத்திருந்தான். கடவுள் எல்லாம் அறியவல்லவர். ஆகையினால் அவர் துரியோதனன் அர்ஜுனனைக்கொல்ல அசுரனை ஏவியதை அறிந்தார். உடனே அவர் வேடனாக வேஷங் கொண்டு அங்கே வந்தார்.

3. அர்ஜுனன், பன்றி தன்னை நோக்கி வருவதைப் பார்த்தான்; உடனே வில்லில் பாணத்தைப் பூட்டி எய்தான். அதே சமயத்தில் சிவபெருமானும் தமது வில்லில் பாணத்தைப் பூட்டிப் பன்றியின்மேல் எய்தார். அர்ஜுனன் விட்ட அம்பு பன்றியின் முன்பக்கமிருந்து பாய்ந்தது. சிவவேடனுடைய அம்பு பன்றியின் பின்பக்கமாய்ப் பாய்ந்தது. இருவர் அம்பெய்ததும் ஒரே காலத்தில் நேர்ந்தது. அம்புகள் பாய்ந்ததும் பன்றி இறந்தது.

4. அர்ஜுனனோடு விளையாடி அவனுக்குத் தமது தரிசனம் தர ஸ்வாமி எண்ணினார். ஆகையினால், அவர், "நான் குறிவைத்ததை நீயேன் அடித்தாய்? உனக்கு அவ்வளவு துணிவா? தவம் செய்யும் உனக்கு இந்த குறும்பு ஏன்?" என்று கேட்டார். அர்ஜுனன் "அந்தப் பன்றி என் தவத்தைக் கெடுக்க வந்தபடியால் நான் அடித்தேன். பன்றியை வேண்டுமானால் நீ கொண்டுபோ. அதைவிட்டு அதிகம் பேசினால் என் வில்லிற்கு நீ இரையாவாய்" என்றான்.

5. அர்ஜுனன் இப்படிச் சொல்லவே சிவவேடன், "நீ கர்வி என்று தெரிந்துகொண்டேன்! நீ யார்? அதை முதலிலே சொல்; பிறகு உன் வில் வல்லமையைப் பார்க்கிறேன்" என்றான். அர்ஜுனன், "நான் பாண்டவரில் ஒருவன். அர்ஜுனன் என்பது என் பெயர்" என்றான். சிவவேடன், "ஓ தெரிந்துகொண்டேன் உன் யோக்கி

யதையை! உன் குருவாகிய துரோணாச்சாரியின் விக்கிரகத்தைப் பூஜைசெய்து, வில்வித்தையிலே தேர்ந்த, ஏகலைவன் என்கிற வேடனை நீ தானே விரலை அறுத்துக்கொடுக்கும்படி செய்தவன்? எங்கள் குலத்தவனுக்கு நீ தீங்கு செய்தவனாகிறாய்! ஆதலால் உன்னோடு போர் செய்வது தகும்" என்று வில்லை உயர்த்திப் பிடித்தான்.

6. அர்ஜுனனும் தன் வில்லை உயர்த்திப் பிடித்தான். இருவரும் ஒருவர்மீது ஒருவர் பாணம் எய்து சண்டை செய்தனர். கொஞ்சநேரம் போர் புரிந்ததும் சிவவேடன், ஓர் அம்பு எய்து அர்ஜுனனுடைய வில்லின் நாணை அறுத்தான். நாண் அறுபடவே, அர்ஜுனன் அந்த வில்லின் தண்டினால் சிவபெருமான் முடிமீது ஓங்கி அடித்தான். சிவபெருமான் முடிமீது அடிபட்டதும் மூன்று புவனங்களும் சராசரங்களும் கிடுகிடென்று அசைந்தன.

7. அர்ஜுனன் அது கண்டு பிரமித்தான். அச்சமயம் சிவவேடனாக வந்த பகவான், விருஷப வாகனத்தின்மீது பார்வதி தேவியாருடன் காட்சிதந்தார். அர்ஜுனன் தன்னோடு சண்டை செய்தது இன்னாரென்று தெரிந்துகொண்டான்; உடனே வணங்கித் துதித்தான். சிவபெருமான் அவனிடம் ஸந்தோஷங்கொண்டு பாசுபதாஸ்திரம் தந்து மறைந்தார். அர்ஜுனன் உலகமெல்லாம் சிவமயம் என்பது தெரிந்து ஸந்தோஷமடைந்து தன் அண்ணனிடம் போய்ச் சேர்ந்தான். (பாரதம்)

---

அவ (கடவுள்) னன்றி ஓரணுவும் அசையாது

## 1. சிவபெருமான் யக்ஷரூபமாய்த் தோன்றியது

முன்னொரு காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் சண்டை யுண்டாயிற்று. அந்தச் சண்டையில் அசுரர்

கள் தேவர்களை ஜயித்துவிட்டனர். அதனால் தேவர்கள் பயந்து சிவபெருமானிடம் போய் முறையிட்டனர். சிவ பெருமான் "இந்த முறை நீங்கள் போய்ச் சண்டையிடுங் கள்; ஜயிப்பீர்கள். உங்களுக்கு வல்லமையுண்டாகும்" என்று அநுக்ரகம் செய்தார்.

2. தேவர்கள் பிறகு அசுரர்களை எதிர்த்துச் சண்டை செய்து வெற்றி பெற்றனர். வெற்றி அடைந்ததும் அவர் களில் ஒவ்வொருவரும் "நான் ஒரே நிலையாயிருந்து சண்டை செய்தேன்; அதனால் ஜயமுண்டாயிற்று" என்று பெருமை பேசிக்கொண்டனர்.

3. தாங்கள் ஜயமடைந்தது, சிவபெருமானுடைய திருவருளாலே என்பதை அவர்கள் மறந்தனர். ஆகையி னால் சிவபெருமான் அவர்களுக்கு நடுவே, ஒரு யக்ஷனைப் போல் தோன்றி நின்றார். அந்த யக்ஷனைப் பார்த்து தேவர்கள், "இவன் யார்? இது வரையில் நாம் நமக்குள் இவனைப் பார்க்கவில்லையே" என்று மலைத்தனர்; தங்கள் தலைவனாகிய தேவேந்திரனிடம் போய்ச் சொன்னார்கள். அவன் வாயு தேவனை அழைத்து, "நீ போய் அவனை யாவ னென்று பார்த்துவா" என்று சொல்லி அனுப்பினான்.

4. வாயுதேவன் யக்ஷனிடம் வந்து "நீ யார்?" என்று கேட்டான். யக்ஷன், "நீ யார்?" என்று கேட்டான். வாயுதேவன், "நான் வாயுதேவன். நான் நினைத்தால் இந்த உலகத்தில் எதையும் பெயர்த்து அந்தரத்தில் எறிந்து விடுவேன்!" என்று வீரம் பேசினான். யக்ஷன் ஒரு துரும் பைக் கிள்ளி அவன் முன்னே போட்டு, "இதை அப்பால் தள்ளு பார்ப்போம்" என்றான். வாயுதேவன், தன்னாலியன்ற வரையில் முயன்று பார்த்தான். அதை இருந்த இடம்விட் டுப்பெயர்க்க முடியவில்லை. அதனால் அவன் திரும்ப இந் திரனிடம் போய் நடந்ததைச் சொன்னான்.

5. இந்திரன் பிறகு அக்நிதேவனை அனுப்பினான். அவன்வந்து சிவபெருமானை, "நீ யார்?" என்று கேட்டான். பகவான், "நீ யார்?" என்று கேட்டார். அக்நி, "நான் அக்நிதேவன். நான் நினைத்தால் எதையும் எரித்துச் சாம்பலாக்கி விடுவேன்" என்று தன் வல்லமையைப் பேசினான். பகவான் "ஆனால் இந்தத் துரும்பை எரி பார்க்கலாம்" என்றார். அக்நிதேவன் தன்னால் இயன்ற வரையில் அதை எரிக்கப் பார்த்தான். எரிக்கமுடியவில்லை. அதனால் அவனும் திரும்பி இந்திரனிடம் போய் நடந்ததைச் சொன்னான்.

6. இந்திரன், "அவனாடா அவ்வளவு சாமர்த்தியவான்" என்றெண்ணிக் கோபமடைந்து, தன் வஜ்ராயுதத்தை எடுத்துக்கொண்டு பகவானை அடிக்க ஓடிவந்தான். அவன் அருகே வரும்போது சிவபெருமான் மறைந்து விட்டார். இந்திரன் பிரமித்து நின்றுவிட்டான்.

7. இப்பொழுது பார்வதிதேவியார் அங்கே அவன் முன்தோன்றி, வந்தவர் சிவபெருமான் என்பதை அவனுக்கு உணர்த்தினார்; "சிவபெருமானுடைய திருவருளால் ஜயம் பெற்றதை மறந்தீர்கள். அவர் எல்லாம் வல்ல இறைவன் என்பதை எண்ணவில்லை. அவரன்றி ஓரணுவும் அசையாது என்பதை மறந்தீர்கள். அதனால் அவர் உங்களுக்குள் உண்டான அந்த மயக்கத்தை மாற்ற யக்ஷனாக வந்தார்" என்று ஈசன் பெருமையை உபதேசித்து மறைந்தார்.

---

அவனன்றி ஓரணுவும் அசையாது

## 2. அர்ஜுனனும் பிராமணனும்

ஸ்ரீ கிருஷ்ணபகவான் துவாரகாபுரியைப் பரிபாலித்து வந்த காலத்தில் அந்தப் பட்டணத்தில் ஒரு பிராமணனிருந்தான். அவன் நல்ல ஒழுக்கமுடையவனாயும் பகவானிடம்

பக்தியுடையவனுயுமிருந்தான். அவனுக்கு எட்டுக் குழந்தைகள் பிறந்தன. எட்டுக் குழந்தைகளும் பிறந்த அப்பொழுதே இறந்து போயின. அதனால் அவன், "ஐயோ நமது தலை விதி இப்படியும் இருக்க வேண்டுமா?" என்றெண்ணி, வருத்தப்பட்டுக் கொண்டிருந்தான்.

2. அப்படி யிருக்கையில் அவனுக்கு ஒன்பதாவது குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையும் பிறந்தவுடன் இறந்து போயிற்று. அதனால் அந்தப் பிராமணன் மிகவும் துக்கமடைந்து, அந்தக் குழந்தையை எடுத்துக்கொண்டு கிருஷ்ணமூர்த்தியின் அரண்மனை முன்வாயிலிலே போய் நின்று, வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டான்; "ஐயோ இந்த அநியாயம் எங்குங் கண்டதில்லையே! நீதி தவறாத ராஜ்யத்தில் அகாலமரணம் எப்படியுண்டாகும்? இந்த என் குறைக்குக் கேள்வி முறையில்லையா?" என்று கத்தினான்.

3. அப்போது அந்த அரண்மனைக்கு அர்ஜுனன் வந்திருந்தான். அவன் பிராமணனை அழைத்து, "போனது போகட்டும். அடுத்த குழந்தை பிறக்கும்போது எனக்குத் தெரிவியும். நான் அதைக் காப்பாற்றித் தருகிறேன். நீர் துக்கப்படாதேயும்" என்று சமாதானம் சொல்லி அனுப்பினான்.

4. அப்பால் இரண்டு மூன்று வருஷங்கள் கழிந்ததும் அந்தப் பிராமணனுக்குப் பத்தாவது குழந்தை பிறக்கும் சமயம் நேர்ந்தது. அப்பொழுது அவன் அர்ஜுனனுக்குச் செய்தி தெரிவித்தான். அர்ஜுனன் பிராமணனுடன் அவன் வீட்டிற்குப்போய்ப் பிரசவ அறையில் காற்றும் வெளியேறாதபடி சரக்கூடு கட்டிவைத்தான். குழந்தை தாயின் வயிற்றிலேயே மரித்துவிட்டது. பிராமணன் அர்ஜுன

னிடம் ஓடி, "என்ன ஐயா, உமது வல்லமையின் அழகே அழகு! நன்றாயிருக்கிறது! இதுவரையில் குழந்தையைக் கொஞ்ச நேரமாவது உயிருடனிருக்கக் கண்டேன்! இந்தத் தடவை உமது பிரபாவத்தினால் அதற்குக் கூட பாக்கிய மில்லாதவனாய் விட்டேன்; இவ்வளவுதானா உம்மை நம்பி யிருந்ததற்குப் பயன்?" என்று சொல்லி அழுதான்.

5. இதைக் கேட்டதும் அர்ஜுனன் தாங்கமுடியாத அவமானமடைந்தான்; உடனே, "இனி உயிரோடிருப்பது சரியல்ல; மாய்ந்துபோவதே உத்தமம்" என்று தீர்மானித் தான்; பிறகு தீ வளர்த்து அதில் விழுந்து இறக்கத் துணிந் தான்.

6. இதை அறிந்த கிருஷ்ணபகவான் அவன் முன் தோன்றினார்; "அர்ஜுனா! தெய்வ சங்கற்பத்தை உன்னால் மாற்ற முடியுமா? நீ செய்தது வீண் பிரயத்தனம்! 'அவ னன்றி ஓரணுவும் அசையாது' என்று சொல்வார்களே! கேட்டதில்லையா? இந்த உண்மையை உனக்குக் காட்டவே நான் இந்தச் சூழ்ச்சியை ஏற்படுத்தினேன்" என்றார்.

7. அர்ஜுனன் இதைக்கேட்டதும் உண்மை தெரிந்து கொண்டு பகவானைப் பணிந்து துதித்தான். பகவானுடைய கிருபையால் பிராமணனுடைய குழந்தையும் பிழைத்தது.

(பாகவதம்)

---

கடவுள் எல்லாம் வல்லவர்

## 1. சிவபெருமான் ஆலகாலம் உண்டது

பாற்கடல் என்று ஒரு பெரிய கடலுண்டு. ஒரு காலத்தில் தேவர்களும் அசுரர்களும் அதைக் கடைந்து அமிர் தம் எடுக்கத் தொடங்கினர். கடைவதற்கு மத்தும் கயிறும்

வேண்டுமல்லவா?—அவர்கள் மந்தரகிரி என்கிற ஒரு பெரிய மலையைப் பெயர்த்துக் கொண்டுவந்து அதைக் கடலில் மத்தாக நட்டனர்; வாசுகி என்கிற ஒரு பெரிய பாம்பைக் கொண்டு வந்து அந்த மத்திலே கட்டினர்.

2. ஒரு பெரிய மலையை இரண்டு மூன்று சுற்றுச் சுற்றிக் கட்டக்கூடிய பாம்பு எவ்வளவு பெரிதாயிருக்க வேண்டும்?—அதைப் பிடித்துக் கடையத் தொடங்கியவர்களின் பலந்தான் எப்படிப்பட்டதோ?

3. தேவர்கள் ஒரு புறமும் அசுரர்கள் ஒரு புறமுமாயிருந்து கடைந்தனர். கறகறவென்று இழுத்துக் கடையவே தொந்தரவு பொறுக்கமாட்டாமல் ஸர்ப்பம் விஷத்தைக் கக்கியது. பால் தயிராக உரைவதற்காக அவர்கள் பலவிதமான செடிகொடிகளைக் கொண்டுவந்து அந்தக் கடலில் போட்டிருந்தனர். அந்தச் செடி கொடிகளிலிருந்தும் ஒருவித விஷந் தோன்றியது. இரண்டும் கலந்து ஆலகாலம் என்கிற ஒரு கொடிய விஷமாகக் கிளம்பியது.

4. அது நெருப்பாய்த் தகித்தது. அதனால் தேவர்களும் அசுரர்களும் பயந்து ஓடினர்; எல்லாம் வல்ல இறைவனாகிய சிவபெருமானிடம் போய், 'சரணம்' 'சரணம்' எங்களைக் காக்கவேண்டும்!' 'காக்கவேண்டும்!' என்று கதறி முறையிட்டனர்.

5. சிவபெருமான், "அஞ்சாதீர்கள்" என்று சொல்லி உடனே பாற்கடலுக்கு வந்தார்; விஷத்தின் கடுமையைக் கண்டு ஆச்சரியப்பட்டார்; நின்ற வண்ணத்திலேயே அந்த விஷத்தைத் தம்முடைய கையில் வரவழைத்தார். அதைக் கண்டு தேவர்களும் அசுரர்களும் ஆச்சரியப்பட்டனர். பகவான் அதை உட்கொண்டு தமது கண்டத்திலேயே நிறுத்திக் கொண்டார். தேவர்களும் அசுரர்களும் இறைவன் எல்லாம்

வல்லவன் (பகவான் எல்லாவற்றையும் செய்து முடிக்கும் சக்தியுடையவர்) என்பதை அறிந்து வணங்கித் துதித்து மகிழ்ந்தனர்.

6. ஜகதீசன் இப்படி கிருபை செய்த பிறகு அவருக்கு நீலகண்டன், காலகண்டன் என்கிற பெயர்களுண்டாயின.

---

கடவுள்-எல்லாம் வல்லவர்

## 2. காளிங்க நர்த்தனம்

1. மகாவிஷ்ணு வாசுதேவர் என்கிற யாதவ ராஜனுக்குப் பிள்ளையாகப் பிறந்தார். அவர் யசோதை என்கிற இடைச்சியினிடம் வளர்ந்துவந்தார். அவருக்குக் கிருஷ்ணன் என்று பெயரிட்டார்கள். இடைப்பிள்ளைகள் மாடு மேய்ப்பது வழக்கமல்லவா? சிறு பிள்ளையா யிருந்தபடியால் கிருஷ்ணபகவானும் அவர்களோடு சேர்ந்து மாடு மேய்க்கப் போவார்; விளையாடுவார்; பாடுவார்; புல்லாங்குழல் ஊதி மகிழ்வார்.

2. அவர் வழக்கம்போல் ஒரு நாள் மாடு மேய்க்கப் போனார். பையன்களெல்லாரும் பல்விதமாக விளையாடிக் கொண்டே யமுனாநதிக்குப் போனார்கள். கிருஷ்ணபகவானும் போனார். அந்த நதியில் காளிந்தி என்கிற ஒரு மடு இருந்தது. அது மிக ஆழமுடையது; ஆகையினால் பார்ப்பதற்குப் பயங்கரமாயிருந்தது, அதன் கரையின்மேலிருந்த மரங்களெல்லாம் எரிந்துபோயிருந்தன. அதன் மேலே படிந்து வருகிற காற்றும் நெருப்பாய் வீசியது. அதற்கு நேராக மேலே பறக்கும் பறவைகளும் அதில் விழுந்து மடிந்தன. இவற்றைப் பார்த்த இடைப்பிள்ளைகள் அதனருகிலே போகப் பயந்தனர்.

3. ஆனால் கிருஷ்ணபகவான் தைரியமாய் அதனருகே போனார். அப்போது இடைப்பிள்ளைகள், "கிருஷ்ணா, கிருஷ்ணா, போகாதே; சொல்வதைக் கேள், போனால் சாவாய்" என்று கூவித் தடுத்தனர். பகவான் புன்சிரிப்பு சிரித்துக்கொண்டே அந்த மடுவைப் பார்த்தார்; உடனே தமது ஆடையைவரிந்து கட்டிக்கொண்டு, கரையின் மீதிருந்த ஒரு மரத்தின் மேலேறி, அந்த மடுவிலே திடீரென்று குதித்தார்.

4. பகவான் குதித்தவுடன் ஒரு பெரிய ஐந்து தலை நாகம் அந்த மடுவிலிருந்து பயங்கரமாகச் சீறிக்கொண்டு வெளியே வந்தது; ஆடி ஆடி விஷத்தைக் கக்கியது. அதனுடன் வேறு பல ஸர்ப்பங்களும் கிளம்பின. கிருஷ்ண பகவான் அவைகளுக்குப் பயப்படவில்லை. இடைப்பிள்ளைகள் பயந்து, "ஐயோ! கிருஷ்ணன் செத்தான்! செத்தான்!" என்றும், "அடே கிருஷ்ணா! வாடா! கரையேறடா!" என்றும் கூவினர். பாம்புகள் கிருஷ்ண பகவானுடைய உடலைச் சுற்றிக்கொண்டு கடித்தன.

5. இதைப் பார்த்ததும் இடைப்பிள்ளைகளிலே சிலர் ஊருக்குள் ஓடி, "ஐயோ; கிருஷ்ணன் காளிந்தி மடுவில் குதித்துவிட்டான்! அவனைப் பாம்புகள் சுற்றிக்கொண்டு கடிக்கின்றன! கிருஷ்ணன் செத்தான்!" என்று கத்தினர். அதைக் கேட்டதும் இடையர்களெல்லாம், "ஐயையோ! அந்த மடுவில் விழுந்தவனும் பிழைப்பானா? அதில் காளிங்கன் என்னும் ஸர்ப்பம் விஷத்தைக் கக்கிக்கொண்டு வசிக்கிறதே! அதில் விஷ அக்நி வீசுமே! கிருஷ்ணன் எப்படி அதில் இறங்கினான்? ஏன் இறங்கினான்?" என்று கத்திக்கொண்டே ஓடி வந்தனர்.

6. தம்மைப் பாம்புகள் சுற்றிக்கொண்டதும் பகவான் சற்றுநேரம் சும்மா இருந்தார்; பிறகு தமது உடலை ஒரு தரம் குலுக்கிக்கொண்டார். பாம்புகள் சிதறி ஓடின. அப்போது காளிங்கன் என்கிற பெரிய பாம்பு கிருஷ்ணபகவானைப் பார்த்துப் படமெடுத்துக்கொண்டு சீறியது. பகவான் அதன் தலைமீது தாவி நின்று புன்சிரிப்பு சிரித்துக்கொண்டே தாண்டவம் செய்தார்.

7. இடையர்களெல்லாம் பகவானுடைய இந்த லீலையைப் பார்த்ததும் பிரமித்து மரம்போல் நின்றுவிட்டனர்; "கிருஷ்ணு, கிருஷ்ணு! கரையேறு" என்று கூவினர். அவருடைய புன்சிரிப்பைக் கண்டு ஆச்சரியப்பட்டனர்.

8. கிருஷ்ணபகவான் குதிக்கக் குதிக்க அந்தப் பாம்பு மூச்சுத் திணறிப்போய் இங்குமங்கும் ஓடியது; நெளிந்து நெளிந்து ஆடியது; சீறிச்சீறி விஷங் கக்கியது, சற்றுநேரத்தில் ஆட்டமடங்கிச் சோர்வடைந்தது. பகவான், "போதும் இதற்குத் தண்டனை" என்று எண்ணி அதைவிட்டுக் குதித்தார். "ஏ கொடிய ஸர்ப்பமே! உன்னால் எத்தனை பேர்கள் இதிலிறந்தவர்? ஓடு இதைவிட்டு! உன் குடும்பத்துடன் ஓடிவிடு! தாமதிக்காதே! இருந்தால் தப்பமாட்டாய்!" என்று சொல்லி, அதை அந்த மடுவைவிட்டுத் துரத்திவிட்டார். காளிங்கன் செத்தேன், பிழைத்தேன் என்று தன் இனத்துடன் ஓடிவிட்டது.

9. அப்பால் கிருஷ்ணபகவான் கரையேறினார்; எல்லாரும் அவரைப் புகழ்ந்தனர்; கட்டித் தழுவிக்கொண்டனர்; வீட்டுக்கு அழைத்துப்போய் எல்லாவித உபசாரங்களும் செய்தனர். அப்பால் அந்த மடுவும் பரிசுத்தமடைந்து எல்லாருக்கும் உபயோகமானது. —(பாகவதம்)

## கடவுள்-அன்பையே பெரிதாய் எண்ணுகிறர்

# கண்ணப்பர்

1. கண்ணப்பர் வேடுவகுலத்திலே அவதரித்தார். அவர் தந்தையின் பெயர் நாகன்; தாயின் பெயர் தத்தை. நாகன் வேடர்களுக்கு வேந்தனுய்ப் போத்தப்பி நாட்டிலே உடுப்பூரிலே இருந்தான். கண்ணப்பரை அவர்கள் நெடுங் காலம் தவமிருந்து பெற்றனர். பிறந்தவுடன் குழந்தையைக் கையிலெடுத்தபோது அது திண்ணென்றிருந்தது. அதனல் அவர்கள் அந்தக் குழந்தைக்குத் திண்ணன் என்று பெயரிட்டனர்.

2. கண்ணப்பர் மிகவும் செல்வமாக வளர்ந்து வந்தார். அவர்க்குப் பதினறு வயதாயிற்று. அப்பொழுது அவர் தந்தை அவரிடம் தன் அரசை ஒப்புவித்தான்; குலவழக்கப் படி காட்டிற்குப் போய் வேட்டையாடி வரும்படி அனுப்பினன். கண்ணப்பர் காட்டிற்குச் சென்று கடுமையாய் வேட்டையாடினர். அங்கே ஓரிடத்தில் ஒரு காட்டுப்பன்றி ஓடியது. கண்ணப்பர் அதைத் தொடர்ந்தார். நாணன், காடன் என்னும் இரண்டு வேடர்கள் அவரைத் தொடர்ந்து போனர்கள். நெடுந்தூரம் துரத்திக்கொண்டு போய்க் கண்ணப்பர் தமது வாளாயுதத்தினல் அந்தப் பன்றியைக் குத்திக் கொன்றார்.

3. கண்ணப்பர் இப்பொழுது களைப்படைந்தார். ஆகையினல் மூவரும் அந்தப் பன்றியுடன் அங்கு அருகில் ஓடிய பொன்முகறியென்னும் ஆற்றுக்குப் போனர்கள்; தண்ணீர் குடித்து மூவரும் களையாறினர். அந்த ஆற்றுக்குப் பக்கத்தில் ஒரு குன்று இருந்தது. கண்ணப்பர் அந்தக் குன்றிலேறிப் பார்க்க ஆசைப்பட்டார். நெருப்பு மூட்டிப் பன்றி இறைச்சியைப் பக்குவப்படுத்தக் காடனுக்குச் சொல்லிவிட்டுக் கண்ணப்பரும் நாணனும் குன்றிலேறினர்.

4. கண்ணப்பர் குன்றின் உச்சிக்குப் போனதும் ஒரு சிவலிங்கத்தைக் கண்டார்; கண்டதும் கடவுளின் அருள் நோக்கம் பெற்றூர் ; பெற்றதும் அன்புருவமானூர் ; உடனே தாயைவிட்டுப் பிரிந்த கன்றைப்போல் சிவலிங்கத்தினிடம் ஓடினூர்; ஓடித் தமது தோள்கள் அழுந்த லிங்கத்தைத் தழுவிக்கொண்டார்; ஆசையோடு முத்தமிட்டார். அவருடைய நெஞ்சம் நெருப்பின் முன்னே வைத்த மெழுகைப்போல் உருகியது; உடம்பு சிலிர்த்தது. அப்பொழுது அவர் பெருமூச்சு விட்டுக்கொண்டு நின்றூர்; பிறகு பித்தனைப்போல் ஓயாமல் சிரித்தார்; "என்னப்பனே, இந்த மலையில் ஒரு துணையுமில்லாமல் நீ தனித்திருப்பதேன்? என் மனம் பொறுக்கவில்லையே! இப்பொழுதே என்னோடு உடுப்பூருக்கு வரவேண்டும்" என்றூர்.

5. கண்ணப்பர் இப்படி அழைத்தும் கடவுள் பேசவில்லை. ஆகையினுல் அவர் "என்னப்பனே, நீ விரும்பும் இடம் இதுதான் போலிருக்கிறது! ஆனுல் உன்னை நான் இனிமேல் பிரிந்திருக்க மாட்டேன்" என்றூர். அப்படியே கடவுளை உற்று நோக்கினூர்; அவர் மீது அபிஷேகம் செய்த தீர்த்தமும் அர்ச்சித்தமலரும் வில்வத் தளிரும் இருக்கக் கண்டார்; கண்டதும் "இவை என் ஐயனுக்குப் பிரியமானவைபோல் இருக்கிறது" என்று எண்ணினூர். அப்படி செய்ய அவர்க்கு ஆசை உண்டாயிற்று. அப்பொழுது நடுப்பகல்வேளை ; அதுகண்டு கண்ணப்பர், "ஐயோ, போதாய் விட்டதே! என் ஐயனுக்குப் பசிக்குமே! இனிய சுவையுள்ள இறைச்சி கொண்டுவந்து இடவேண்டும். இதை விட்டுப் போனுல் என் ஐயனை எந்த விலங்கு வந்து என்ன செய்யுமோ?" என்று எண்ணிப் போகத் தயங்கினூர் ; பிறகு கொஞ்சதூரம் போய் மீண்டார் ; உடனே சிவபெருமானைத் தழுவிக்கொண்டார்.

6. கண்ணப்பர் இப்படி சிறிது நேரமிருந்து ஒருவாறு தேறிப் போகத் துணிந்தார்; உடனே நாணனைப் பார்த்து, "நான் போய் உழுந்து உருளும் பொழுதில் இங்கே வந்து விடுகிறேன்; வன விலங்கு வருமென்று பயப்படமாட்டேன். வந்ததானால் என்னை ஒய்யெனக் கூவு" என்று சொல்லி மலையிலிருந்து மளமள என்று இறங்கி ஆற்றுக்குப் போனார்; காடன் வசமிருந்த பன்றியைத் தம் வாளினால் அறுத்துக் கொஞ்சம் எடுத்து அம்பிலே கோத்துப் பதமாய்க் காய்ச்சினார்; அது சுவையா யிருக்கிறதா இல்லையா என்று தாமே மெல்ல மெல்லப் பல்லினால் அதுக்கிப் பார்த்து, அதைத் தேக்கிலைத் தொன்னையில் எடுத்துக் கொண்டார்; பிறகு கண்ட இலைகளையும் மலர்களையும் பறித்துத் தமது தலையிலே செருகிக் கொண்டார்; அப்பால் திருமஞ்சனத்துக்கு நீரை வாயிலே முகந்து கொண்டார்; ஒரு கையில் வில்லையும் ஒரு கையில் மாமிசத் துண்டையும் எடுத்துக் கொண்டார்.

7. கண்ணப்பர் இனி நாம் தாமதிக்கலாகாது என்று வேகமாக மலையேறினார்; என் ஐயனுக்குப் பசிக்குமே என்று பதைத்தார்; குஞ்சுக்கு இரையூட்ட ஓடும் தாய்ப் பறவையைப் போல் ஓடினார்; ஓடிச் சிவலிங்கத்தின் முடிமீதிருந்த மலர்களைத் தமது செருப்புக் காலால் தள்ளினார்; வாயிலே கொண்டு வந்த தீர்த்தத்தை உமிழ்ந்து நீராட்டினார்; தமது முடியிலே கொண்டுவந்த மலர்களையும் தழையையும் எடுத்துப்போட்டு அர்ச்சித்தார்; இறைச்சியைத் தொன்னையோடு முன்னே வைத்து நல்ல வார்த்தை சொல்லி ஊட்டி மகிழ்ந்தார்; பிறகு அன்று பகலும் இரவும் தம்முடைய கையில் வில்லைப் பிடித்துக் கொண்டு அங்கேயே காத்திருந்தார்; மறுநாள் விடிந்ததும் வேட்டையாடப் புறப்பட்டார்.

8. கண்ணப்பரின் இந்தச் செய்கைகளைக் கண்டு நாணனும் காடனும் "இவனுக்குத் தெய்வப்பித்து பிடித்து விட்டது" என்று தீர்மானித்துத் தங்கள் அரசனிடம் சொல்லப் போய்விட்டனர். கண்ணப்பர் கண்ட இந்தச் சிவலிங்கத்தை சிவகோசரியார் என்கிற அந்தணர் தினம் விதிப்படி பூஜைசெய்து வருகிறார். அவர் வழக்கப்படி பூஜைக்கு வந்தார்; தாமிட்ட மலரை நீக்கி யிருப்பதையும் ஸந்நிதியில் இறைச்சி சிந்திக் கிடப்பதையுங் கண்டு "அந்தோ, என் ஐயனை அசுசிப்படுத்தியவன் யாவனோ தெரியவில்லையே!" என்று துக்கப்பட்டார்; எல்லாவற்றையும் நீக்கிவிட்டுச் சுத்தப்படுத்தி வழக்கப்படி பூஜை செய்து போனார்.

9. கண்ணப்பர் வேட்டையிலிருந்து வந்து தமது பூஜையைச் செய்து, மறுநாள் வேட்டைக்குப் போனார். அப்பால் அந்தணர் வந்தார்; அவர் பார்த்துக் கோபங் கொண்டார். "யாருக்கு வந்த கேடுகாலமிது? ஸந்நிதியை இப்படி அசுசிப்படுத்தி யிருக்கிறது. எவனோ பாவி இங்கு அலைகிறான். அவனைக் கண்டு பிடிக்கவேண்டும்" என்று எண்ணி, என்ன செய்வதென்று துக்கப்பட்டார். சிவபெருமான் அன்றிரவு அவர் கனவிலே தோன்றி, "அவையெல்லாம் என் அன்பனுடைய செய்கைகள். நாளையதினம் நீ மறைந்திரு. அந்த அன்பனையும் அவனுடைய அன்பையும் நீ காண்பாய்" என்று சொல்லி மறைந்தார்.

10. கண்ணப்பர் மறுநாள் வேட்டையிலிருந்து வருமுன்பே, சிவகோசரியார் போய்த் தமது பூஜையைச் செய்துவிட்டு ஒரு பக்கத்தில் மறைந்தார். பிறகு கண்ணப்பர் தமது வழக்கப்படி வந்து பூசையைத் செய்யத் தொடங்கினார். அப்பொழுது சிவபெருமானுடைய வலக்கண்ணில் இரத்தம் பெருகியது. அதைக் கண்ட கண்ணப்பர், தம்

வாயில் கொண்டுவந்த நீர் சிந்த ஐயோ என்று பதறினர். அவர் கையில் கொண்டுவந்த ஊன் சிதறியது. அம்பும் வில்லும் கையிலிருந்து நழுவின. உடனே வெட்டுண்ட மரம்போல் அவர் விழுந்து விட்டார்; பிறகு எழுந்து கண்ணைப் பார்த்து இரத்தத்தைத் துடைத்தார். அது நிற்கவில்லை. உடனே அவர் ஓடிப் பச்சிலை கொண்டுவந்து கண்ணிலே பிழிந்தார். இரத்தம் நிற்கவில்லை. "ஐயோ நான் இதற்கென்ன செய்வேன்!" என்று எண்ணி அவர் பிரமித்து நின்றார். அப்பொழுது அவர் மனத்தில் ஊனுக்கு ஊன் என்னும் பழமொழி நினைவுக்கு வந்தது. உடனே அன்பர் தமது கண்ணை அம்பினாலே பெயர்த்து இறைவனுடைய கண்ணிலே அப்பினர். அந்த நிமிஷமே சோரி நின்றது.

11. கண்ணப்பர் அதைக் கண்டு மகிழ்ந்தார்; தோள் தட்டிக் குதித்தார்; உடம்பெல்லாம் குலுங்க நகைத்தார்; கைகொட்டி வாயில் வந்ததைப் பாடினர்; துள்ளினர்; உடனே வந்து சிவலிங்கத்தைப் பார்த்தார்; அப்பொழுது சுவாமியின் மற்றொரு கண்ணில் இரத்தம்வரக் கண்டார். அன்பர் மறுபடி துக்கமடைந்தார்; உடனே தமக்குக் கைவந்த மருந்தை எண்ணி மனந்தேறினர்; சோரி பெருகும் கண்ணைத் தெரிந்து கொள்வதற்காகச் சிவபிரானுடைய கண்ணில் தமது செருப்புக்காலை ஊன்றி, தம் கண்ணில் அம்பை வைத்தார்.

12. "கண்ணப்பா! நில்லு! நில்லு!" என்று கூவிக் கொண்டே சிவபெருமான் தமது கரம் நீட்டி அவர் கரத்தைப் பிடித்துக் கொண்டார். இப்பொழுது கண்ணப்பர் அம்பை விட்டெறிந்து சிவபெருமானின் அடிபணிந்தார். சிவகோசரியார் கண்டு ஆச்சரியப்பட்டுக் "அன்போடு செய்வதெதையும் கடவுள் ஆநந்தமாய் ஏற்றுக் கொள்கிறர்;

அன்பையே அவர் பெரிதாகக் கொள்கிறார்" என்றுணர்ந்து அவரைப் பணிந்தார்; கண்ணப்பரைத் தழுவிக்கொண்டு மகிழ்ந்தார்; கண்களில் நீர் தளும்பக் காங்குவித்து நின்றார். சிவபெருமான் "கண்ணப்பா, உன் அன்பை, சிவகோசரியாருக்குக் காட்டவே கண்ணில் சோரி பெருகும்படி செய்தேன்!" என்றார். அப்பொழுது ஆகாயத்திலிருந்து மலர்மாரி பொய்தது. தேவதுந்துபி முழங்கியது. சிவபெருமான், "கண்ணப்பன் என் வலப்பால் மருவுக" என்று கண்ணப்பரை ஆட்கொண்டார். அன்று முதலாகத் தான் திண்ணன் என்னும் அவர்க்குக் கண்ணப்பர் என்று பெயர் வழங்கலாயிற்று. —(பேரிய புராணம்)

---

எல்லாம் ஈசன் செயல்

## பட்டணத்தார்

1. பட்டணத்தார் சிறந்த சிவபக்தர்: மகான்; துறவி. அவர் ஒருநாள் அவிநாசி என்கிற ஓர் ஊரிலிருந்தார். அன்றிரவில் அவர்க்குப் பசி அதிகமாய் உண்டாயிற்று. அப்பொழுது அவர் மௌனவிரதம் கொண்டிருந்தார். அதனால் அவர் ஒரு வீட்டிற்குப் போய்த் தலை வாயிலில் நின்று கை தட்டினார். அந்த வீட்டுக்காரன் மூர்க்கன். ஆகையினால் அவன் பட்டணத்தாரை யாரோ போக்கிலி என்றெண்ணித் தடிகொண்டு அடிக்க வந்தான்.

2. பட்டணத்தார் நின்ற இடம் விட்டு அசையாமல் சிவ சிவ என்று தியானித்தார். அப்பொழுது அடுத்த வீட்டுக்காரன் ஓடிவந்து மூர்க்கனைத் தடுத்தான்; "அட பேதையே, இவர் சிறந்த சிவயோகி யாயிற்றே! பெரியவராயிற்றே! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்?"

என்று கடிந்துகொண்டான்; ஸ்வாமிகளை அழைத்துப் போய்த் திருவமுது படைத்துப் பசியாற்றி உபசரித்தான்.

3. பட்டணத்தார் அப்போது சிவபெருமானைத் தியானித்தார்; உடனே,

"இருக்கும் இடந்தேடி என்பசிக்கே அன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தால் உண்பேன்—பெருக்க
அழைத்தாலும் போகேன் அரனே என்தேகம்
இளைத்தாலும் போகேன் இனி"

என்று பாடிச் சபதம் செய்து கொண்டார். பிறகு அவர் மகாளம் என்கிற பட்டணத்துக்குப் போனார்; அந்தப் பட்டணத்துக்கு அடுத்த காட்டிலிருந்த பிள்ளையார் கோவிலிலேபோய் அவர் நிஷ்டையிலிருந்தார்.

4. பட்டணத்தார் பிள்ளையாரின் பக்கத்தில் விக்ரகம் போல் வீற்றிருந்தார். அன்றிரவு சில திருடர்கள் அங்கே வந்து பிள்ளையாரைத் தொழுது, "நாங்கள் அரசனுடைய அரண்மனையில் திருடப் போகிறோம். நீ துணையிருக்க வேண்டும். காரியம் கைகூடினால் உனக்கு விலை உயர்ந்த பொருள் ஏதேனும் தருகிறோம்" என்று பிரார்த்தனை செய்துகொண்டனர்; உடனே திருடப் போய்ச் சில நேரத்துக்கெல்லாம் திரும்பிவந்து "பிள்ளையாரே, உன்னுடைய துணையால் காரியம் கைகூடியது" என்று சொல்லி, விலை உயர்ந்த முத்து மாலை ஒன்றைப் பிள்ளையாருக்குச் சாத்தினர். நல்ல இருட்டுக் காலமாகையினால் அவர்கள் சாத்திய மாலை பட்டணத்தார் கழுத்தில் விழுந்தது.

5. பட்டணத்தார் நிஷ்டையில் தம்மைமறந்திருந்தார். ஆதலால் அவருக்குத் திருடர் வந்ததாவது தமது கழுத்தில் மாலை போட்டதாவது ஒன்றும் தெரியவில்லை. மறுநாள் காலையில் அப்பட்டணத்து அரசனுடைய சேவகர்கள் சிலர்,

திருடனைத் தேடப் புறப்பட்டனர். அவர்கள் தங்கள் வழி மேலிருந்த பிள்ளையார் கோவிலைக் கவனித்தனர்.

6. பட்டணத்தார் கழுத்தில் முத்துமாலையுடன் உட்கார்ந்திருப்பதை அவர்கள் கண்டனர் ; கண்டதும், "அகப் பட்டான் திருடன்! அகப்பட்டான் திருடன்!" என்று கூவி அவரைப் பிடித்துக்கொண்டனர் ; கண்டபடி அவரை இழுத்து அலைத்தனர்; தங்களுக்குத் தோன்றியபடி எல்லாம் அவரைத் துன்பப்படுத்தினர். ஸ்வாமிகள் அப்பொழுது நிஷ்டை கலைந்து விழித்துக்கொண்டு இராஜசேகவர்களைப்பார்த்தார் ; ஒன்றும் செய்யாமல் சிவசிவ என்று தியானித்தார்.

7. பட்டணத்தாருடைய மகிமையை அவர்கள் என்ன கண்டார்கள் ? ஸ்வாமிகள் பேசாமலிருக்கவே சிலர், "இவன் பெரிய மாயக்கள்ளன்" என்றனர். சிலர் வஞ்சக நடிப்புடையவன்" என்றனர். சிலர் "இவன் கள்ளுண்டு மயங்கியிருக்கிறான்" என்றனர். சிலர் "உன்னைச்சேர்ந்த மற்றவர்கள் எங்கே? சொல்லு: இல்லாவிட்டால் உன்னுயிர் போய்விடும்" என்றனர். "அடே நீ பித்தனோ உன்மத்தனோ!" என்று சிலர் அதட்டினர்.

8. பட்டணத்தார் ஒன்றுக்கும் அசையவில்லை; சிவசிவ என்றே தியானித்துக் கொண்டிருந்தார். இதனால் சிலர் "இவர் கள்ளரல்லர், யாரோ பெரியவர் ; சிவபக்தர் ; இது நிச்சயம்; இல்லாவிட்டால் இவ்வளவு துன்பத்திற்கும் சும்மா இருப்பாரா ? ஆகையால் இவரை விசாரித்து அறியவேண்டும். கொடுமை செய்வது கூடாது. அது பாவமாகும். அரசனிடம் கொண்டுபோவோம்" என்றனர்.

9. பட்டணத்தாரைச் சேவகர்கள் முதலிலே கண்டு திருடனெனப் பிடித்தார்களல்லவா ? அப்பொழுதே சிலர் அரசனிடம் ஓடித் "திருடன் அகப்பட்டான்; இதோ முத்து

மாலை" என்று முத்துமாலையை அவனிடம் காட்டினர். அரசன் "திருடனைக் கழுவிலேற்றி விடுங்கள்" என்று உத்தரவிட்டான். அவர்கள் ஓடிவந்து அரசனுடைய கட்டளையை மற்றவர்களுக்குக் கூறினர். அவர்கள் அரசனுடைய கட்டளைப்படி அவரைக் கழுகுமரத்திற்கு அழைத்துச் சென்றனர்.

10. பட்டணத்தார், கழுமரத்தருகே போனதும் நகைத்தார்; சிவ சிவ என்றார்; உடனே;—

என்செய லாவது யாதொன்று மில்லை இனித்தெய்வமே
உன்செய லேயென் றுணரப்பெற்றேன் இந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோவிங்ஙனே வந்து மூண்டதுவே

என்று பாடினார். பாடியவுடன் கழுமரம் பற்றி எரிந்தது. இந்த அதிசயத்தைக் கண்ட சிலர் ஓடி அரசனுக்குச் சொன்னார்கள். அரசன் "ஐயோ, யாரோ பெரியவருக்குத் தீங்கு செய்து விட்டேனே பாவி!" என்று ஓடிவந்து பட்டணத்தடிகள் பாதத்தில் விழுந்து, பணிந்து, "தீர விசாரியாமல் செய்துவிட்டேன் பாவி! என் பிழையைப் பொறுத்தருள வேண்டும்" என்று வேண்டினான்.

11. பட்டணத்தார் அரசன்மீது இரக்கங்கொண்டு அவனுக்கு நல்ல சிவஞானம் உண்டாகும்படி அருள் செய்தார். அவன் உடனே தன்னுடைய அரசு, மக்கள் மனைவி எல்லோரையும் விட்டுத் துறவியானான்; அவனே பத்திரகிரியார் என்ற மகானாய் விளங்கியவன்.

———

கடவுள் நல்லவர்களைப் காப்பார்

சாதுஜனரக்ஷகர்

## திரிபுரஸம்ஹாரம்

1. தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலினி என்று மூன்று அசுரரிருந்தனர். அவர்களுடைய அன்னை அவர்களின் க்ஷேமத்திற்காகப் பரமசிவனை நோக்கித் தவஞ் செய்தாள். பரமசிவன் அவளுக்குக் காட்சி தந்து, "உனக்கு என்ன வரங் வேண்டும்?" என்று கேட்டார்.

2. அவள் "ஐயனே, என்னுடைய மூன்று புத்திரரும் என்றும் அழியாதிருக்க வரந் தரவேண்டும்" என்று கேட்டாள். சிவபெருமான் "அது முடியாத காரியம்; வேறு எந்த வரமாவது கேள்" என்றார். அவள், "ஸ்வாமி, அப்படியானால் இரும்பு, வெள்ளி, பொன், இவற்றினாலாகிய மதில்களை உடைய மூன்று புரங்களை அளிக்கவேண்டும். அவை மூன்றும் அவர்கள் நினைத்த இடத்திற்கு ஆகாய வழியே போய் இறங்கவேண்டும். அவர்களுக்கு அழிவுவுண்டானால், மூன்று புரங்களும் எப்போது ஓரிடத்திலே சேருகிறதோ அப்போது ஒரு க்ஷணத்தில் எவனாவது அவர்களை அழிக்கவேண்டும். இப்படிப்பட்ட வரம் வேண்டும்" என்று கேட்டாள். சிவபெருமான் "அப்படியே தந்தோம்" என்று வரம் தந்து மறைந்தார்.

3. ஈசுவரன் கொடுத்த வரத்தின்படியே அசுரர் மூவரும் மூன்று புரங்களைப் பெற்றனர். அவை அவர்கள் நினைத்த இடத்திற்கு ஆகாய வழியே ஓடி இறங்கின. இதனால் அவர்கள் கர்வங்கொண்டு தங்கள் மனம்போனபடி தேவர்கள் எல்லாருக்கும் துன்பம் செய்தனர். அவர்களை எதிர்த்துச் சண்டை செய்ய ஒருவரும் முன்வரவில்லை. தவிர

அவர்கள் புரங்களுடன் திடீரென்று இறங்குவதினால் அநேக ஊர்கள் அப்படியே அழிவதுமுண்டு.

4. இப்படிப்பட்ட பாதகர்களை ஒழித்துவிட வேண்டுமென்று தேவர்கள் தீர்மானித்தனர். அவர்களால் இந்தக் கொடியவர்களை என்ன செய்யமுடியும்?— ஒன்றும் செய்ய முடியாதாகையினால் எல்லாரும் சேர்ந்து, சிவபெருமானிடம் போய் சொல்லிக்கொண்டனர். சிவபெருமான் எல்லாம் வல்லவரானாலும், "எனக்கு இரதமா, குதிரையா, படையா என்ன துணையிருக்கிறது? அவையில்லாமல் நான் அவர்களை எப்படி சண்டை செய்து வெல்வது?" என்று சொன்னார்.

5. அதைக் கேட்டதும் தேவரெல்லோரும் "எப்படி திருவுள்ளமோ அப்படி நடக்கிறோம்" என்றனர். சிவபெருமான் உடனே பூமியைத் தேராகக் கொண்டார்; சூரிய சந்திரர் இருவரையும் இரண்டு சக்கரங்களாகக் கொண்டார்; நான்கு வேதங்களையும் நான்கு குதிரைகளாக்கினார். பிரம தேவர் ஸாரதியானார். ஈசன் மேருமலையை வில்லாக்கிக் கொண்டார். ஆதிசேஷன் நாண் ஆனான். திருமால் பாணமானார். அக்கினி தேவன் பாணத்தின் சிகையானார்.

6. இப்படியாகச் சிவபெருமான் சண்டைக்கு எழுந்தார். அப்பொழுது தேவரெல்லாரும் தம்மாலாயே திரிபுரம் அழியப்போவதாக எண்ணிக் கர்வங் கொண்டனர். சிவபெருமான் அந்தச் சமயம் பார்த்து, வில்லின் நாணை இழுத்து, குணத்தொனி செய்தார். அந்த ஓசை கேட்டு எல்லாரும் நடுங்கினர். உலகமெல்லாம் நிலைகுலைந்தன. அசுரர் மூவரும் அஞ்சி ஓரிடத்தில் தம் தம் புரத்தோடு ஒன்று கூடினர். இதுதான் சமயம் என்று கண்ட சிவபெருமான் அந்தப் புரங்களை நோக்கி நகைத்தார். நகைத்த அளவில் மூன்று புரங்களும் எரிந்து சாம்பலாயின. இதனால் சிவ

பெருமானுக்குத் திரிபுரதஹனன், திரிபுராஸம்ஹாரன், திரிபுராந்தகன், புராரி என்கிற பெயர்களுண்டாயின.

7. தேவரெல்லோரும் பிறகு கர்வம் நீங்கிச் சிவபெருமானை வணங்கித் தம் தம் இடத்துக்குச் சென்றனர்.

---

கடவுள்—நல்லவர்களைக் காப்பார்

## 2. மகாபலி

1. மகாபலி என்று ஓர் அசுர சக்கரவர்த்தி இருந்தான். அவன் பிரஹ்லாதனுடைய பேரன்: வேத சாஸ்திரங்களெல்லாம் அறிந்தவன்; இணையிடற்ற வீரன்; செல்வத்திலும் ஒப்புயர்வற்றவன்; ஒழுக்கந் தவறுதவன்; யார் எதை விரும்பிக் கேட்டாலும் தடை சொல்லாமல் அதைக் கொடுப்பதென்கிற விரதம் கொண்ட கொடையாளி. கொடுக்கும்போது இவர் பகைவர் இவர் நண்பர் என்று அவன் பார்ப்பதில்லை.

2. மகாபலி இவ்வளவு நல்லவனு யிருந்தாலும் தேவர்களிடத்தில் மாத்திரம் பகைகொண்டிருந்தான்; அவர்களைப் பல வழியிலும் துன்பப்படுத்தி வந்தான். தேவர்கள் சாதுக்கள்; அதாவது நல்ல நடவடிக்கை யுடையவர்கள்; நியாய வழியிலே நடப்பவர்கள்; அடாது செய்ய அஞ்சுவார்கள்; தெய்வபக்தி யுடையவர்கள். ஆனுல் அசுரர்கள் இவர்களுக்கு முற்றும் மாறுன குணமுடையவர்கள். அவர்களில் நல்லவர்கள் ஒரு சிலரே இருப்பார்கள். இருந்தால் ஹிரண்யனுடைய பிள்ளை பிரஹ்லாதன் இருந்தானல்லவா? அப்படி அத்தி பூத்ததுபோல் இருப்பார்கள்.

3. மகாபலி செய்யும் துன்பம் தேவர்களால் பொறுக்க முடியாததாய்விட்டது. அவர்களெல்லாரும் மகாவிஷ்ணு

வினிடம் போய் முறையிட்டனர். மகாவிஷ்ணு துஷ்ட நிக்ரஹமும் சிஷ்ட பரிபாலனமும் (கெட்டவர்களைச் சங்கரித்து நல்லவர்களைப் பாதுகாப்பதும்) செய்பவரல்லவா? ஆகையினால் பகவான் சாதுக்களாகிய தேவர்களிடம் இரக்கங் கொண்டார்; உடனே, "நீங்கள் போங்கள்; உங்கள் கலக்கந் தீர விரைவில் அவனுடைய துடுக்கை அடக்குகிறோம்" என்றார். தேவர்கள் சந்தோஷத்துடன் பகவானைப் பணிந்து சென்றனர்.

4. மகாபலி ஒழுக்கம் தவறுதவனுகையினால், அவனைப் பகவான் தந்திரத்தினால் வெல்ல எண்ணினார். அதற்காக அவர் காசிப முனிவரின் மனைவியாகிய அதிதி தேவிக்குப் பிள்ளையாகப் பிறந்தார்; மிகவுஞ் சிறிய குறள் வடிவமாய் அவதரித்தார். காசிபர் அந்தக் குழந்தையைத் திருமாலின் அவதாரமென ஞானதிருஷ்டியால் தெரிந்துகொண்டார்; அந்தக் குழந்தைக்கு **வாமனன்** என்று பெயரிட்டார். வாமன மூர்த்தியை அவர் அருமை பெருமையாக வளர்த்து வந்தார்.

5. மகாபலி அடிக்கடி யாகம் செய்வது வழக்கம். அப்படி ஒரு சமயம் அவன் ஒரு பெரிய யாகம்செய்தான். அப்பொழுது வாமனமூர்த்தி தக்க வயதை அடைந்து, சகல சாஸ்திரங்களிலும் வல்லவராயிருந்தார். ஆகையினால் அவரும் அந்த யாகத்துக்குப் போக எண்ணி, மகாபலி தம்மை மதிக்கும்படி வேஷங் கொண்டார்; ஊர்த்துவபுண்டரம் மௌஞ்சி, கிருஷ்ணாஜினம் இவற்றைத் தரித்துக்கொண்டார்; ஒரு கையிலே கமண்டலமும் ஒரு கையில் குடையும் கொண்டார்; பாதங்களில் பாதுகை அணிந்தார்; உடனே ஆசிரமத்திலிருந்து புறப்பட்டுச் சிறுநடை நடந்து மகாபலியின் யாகசாலைக்குப் போய்ச் சேர்ந்தார்.

6. மகாபலி, அவரை வந்தனஞ்செய்து, வரவேற்று, ஆசனத்தில் உட்காரவைத்து, "ஸ்வாமி, தாம் இங்கே வந்தது என் பாக்கியம்! தமக்கு வேண்டியதென்ன?" என்று கேட்டான். வாமனர், "வள்ளலே, எனக்கு வேண்டுவது என் காலளவால் மூன்றடி நிலந்தான்; வேறொன்றும் அதிகமாயில்லை" என்றார். மகாபலி, "அப்படியே தந்தேன்" என்று நீரை அவர் கையில் வார்த்தான்.

7. மகாபலியிடம் தானம் வாங்கியதும் வாமனமூர்த்தி ஆகாயம் அளாவ வளர்ந்தார்; ஓரடியால் பூமியை அளந்தார்; மற்றோரடியால் ஆகாயத்தை அளந்தார்; அப்பால் இடமில்லாமையால் மூன்றாவதடியை மகாபலியின் சிரசிலேயே வைத்தார். அவன் பாதாளத்திலே அழுந்திப் போனான். பகவான் அவனை அங்கேயே சிறை செய்து சாதுக்களாகிய தேவர்களை இரக்ஷித்தார்.

---

கடவுள்—தம் அன்பரிடம் ஜாதிமதம் பாராட்டுவதில்லை.

## நந்தனார்

1. நந்தனார் ஒரு புலையர். அவர் சோழதேசத்தில் ஆதனூரிலே வசித்தார். அவர் ஜாதியிலே புலையராக இருந்தாலும் சிவபெருமானிடத்தில் அன்புடையவரா யிருந்தார்; நிலத்தை உழுது பயிர் செய்து ஜீவனம் செய்து வந்தார்; ஒருவருடைய பேச்சுக்கும் போகமாட்டார்; எது வந்தாலும் எது போனாலும் எல்லாம் ஈசன் செயலென்று எண்ணியிருப்பார்.

2. நந்தனார் சிவாலயத்துக்கு வேண்டிய பேரிகைகளுக்கும் மத்தளங்களுக்கும் தோலும் வாரும் கொடுத்து வந்தார்; தினந்தோறும் ஆலயத்துக்குப் போய் முன் வாயில் புறத்திலேயே நின்று பாடுவார்; அன்பினால் ஆடுவார். ஒரு

நாள் அவர் திருப்புன்கூர் என்கிற சிவக்ஷேத்திரத்துக்குப் போனார். அங்கே அவர் ஸ்வாமியை நேரே தரிசனம் செய்ய விரும்பினார்.

3. நந்தனாரிடத்தில் ஸ்வாமிக்கு இரக்கம் உண்டாயிற்று. உடனே, ஸந்நிதியிலிருக்கும் நந்தி கொஞ்சம் விலகியது. பிறகு நந்தனார் செவ்வையாக ஸ்வாமி தரிசனஞ் செய்து மகிழ்ந்தார்; துதித்தார்; சிவபெருமானுடைய கருணையை எண்ணி ஆநந்தமடைந்தார்; பிறகு ஊருக்கு வந்ததும் அதே நினைப்பாக இருந்தார்.

4. நந்தனார் நடக்கும்போதும் இருக்கும்போதும் படுக்கும்போதும் எப்போதும் சிவபெருமானையே தியானித்துக் கொண்டிருப்பார். ஒருநாள் அவர்க்குச் சிதம்பரம் போக வேண்டும் என்கிற எண்ணம் உண்டாயிற்று. பிறகு அவர், "நாளைக்கே போவேன்! நாளைக்கே போவேன்" என்று தினம் சொல்லிக்கொண்டே இருந்தார். அதனால் அவருக்கு "நாளைப்போவார்" என்று ஒருபெயர் உண்டாயிற்று.

5. நந்தனார், நாளைப்போவரான பின்பு, ஒருநாள் புறப்பட்டுச் சிதம்பரத்துக்குப் போனார். அங்கே போனதும் "அந்தோ! ஆலயத்திற்குள்ளே போய் ஸ்வாமியை எப்படித் தரிசிப்பேன்? இந்த இழிந்த பிறப்பு அதற்குத் தடையாயிருக்கிறதே!" என்று கவலைப்பட்டார்.

6. நந்தனாருடைய கவலையை நீக்க ஈசன் திருவுளம் கொண்டார்; அன்றிரவு அவருடைய கனவிலே தோன்றி, "அன்பனே, நீ அக்நிப் பிரவேசஞ்செய்து பரிசுத்தனாவாய்! பிறகு நமது ஸந்நிதானம் வந்து தரிசிப்பாய்! அது உனக்கு நாளையதினம் கிடைக்கும்" என்று சொல்லி மறைந்தார். அப்பால் அன்றிரவே பகவான் தில்லைவாழந்தணர்களுடைய கனவிலே தோன்றினார்; "என் பக்தன் நந்தனாரை அக்நிப்

பிரவேசம் செய்வியுங்கள். நாளைக்கு அவன் என்னைத் தரிசிக்கட்டும்" என்று சொல்லி மறைந்தார்.

7. நந்தனர் எப்பொழுது பொழுது விடியுமென்று காத்திருந்தார். பொழுது விடிந்ததும் தில்லைவாழந்தணர் நந்தனரிடம் வந்து, ஈசன் கட்டளையைச் சொன்னார்கள். நந்தனர் "அடியேன் உய்ந்தேன்" என்று சொல்லி அவர்களை வணங்கினர். அந்தணர் பிறகு கோபுரவாயிலுக்கு முன்னே ஒரு குழியில் தீ வளர்த்தினர்.

8. நந்தனர் அந்த அக்நிகுண்டத்தை வலம் வந்து, சிவபெருமானை மனதிலே தியானஞ்செய்து, அதில் குதித்தார். குதித்தவுடனே அவர் அதிலிருந்து ஒரு முனிவராய் வெளிப்பட்டார். பிறகு அந்தணர் அவரைத் தம்முடன் கனகசபைக்குள் அழைத்துப் போயினர். அங்கே போனதும் நந்தனர் மறைந்து போனர். சிவபெருமான் அவரைத் தமக்குள் ஐக்கியமாக்கிக் கொண்டார். —(பெரிய புராணம்.)

---

கடவுள்-தம் அன்பரிடம் ஜாதிமதம் பாராட்டுவதில்லை.

## 2. திருப்பாணழ்வார்

1. திருப்பாணழ்வார் விஷ்ணு பக்தர். அவர் திரிசிரபுரத்துக்குச் சமீபமாயுள்ள உறையூரிலே அவதரித்தார். அவரை, பஞ்சம ஜாதியில் பாணர் குலத்தைச் சேர்ந்தவன் ஒருவன் வளர்த்து வந்தான். ஆழ்வார் பாணர் குலத்திற்குரிய பாடல்களை யெல்லாம் கற்றுக் கொண்டார். ஆகையினல் அவர்க்குப் பாணர் என்கிற பெயர் உண்டாயிற்று. அவர் எப்போதும் ஸ்ரீ ரங்கநாதனையே வழிபட்டு வந்தார். அவர் தாழ்ந்த ஜாதியினராய் இருப்பதுபற்றிக் கோவிலுக்குப் போவதில்லை; நந்தனரைப் போல் வெளியிலிருந்து கும்பிடுவது வழக்கம்.

2. திருப்பாணாழ்வார் ஒரு சமயம், காவேரிக் கரையிலிருந்தே ஸ்ரீரங்கம் இருக்கும் திக்கை நோக்கிக் கைகுவித்துக் கும்பிட்டுப் பாடிப் பாடித் துதித்துக் கொண்டிருந்தார். அச்சமயம் ஸ்வாமியின் அபிஷேகத்துக்கு பட்டர் ஜலமெடுக்கப் போனார். அவர் ஆழ்வாரை இன்னாரென்று அறியார். யாரோ பஞ்சமன் என்று எண்ணித் "தூரவிலகிப் போ" என்றார். ஆழ்வார் போகவில்லை. பக்கத்திலிருந்தவர்கள் அவர்மீது கற்களை எறிந்தனர்.

3. திருப்பாணாழ்வார் கண்ணை மூடிக்கொண்டு பக்தியினால் தம்மையே மறந்து பாடுகின்றார். ஆதலால் தம்மீது கற்கள் விழுந்தது அவர்க்குத் தெரியவில்லை. ஆழ்வார்மீது கல் விழுந்த அச்சமயம் பெருமாளுடைய நெற்றியிலிருந்து இரத்தம் பெருகியது; பெருமாளுக்கு அருகே இருந்தவர்கள், "ஐயோ, என்ன பிழை நேர்ந்திருக்கிறதோ தெரியவில்லையே" என்று எண்ணி, பயந்து பகவானை விழுந்து விழுந்து கும்பிட்டனர்; மனங்கலங்கி ஒன்றும் தெரியாமல் தவித்தனர்.

4. திருப்பாணாழ்வாரைக் காக்கப் பெருமாளுக்குக் கிருபையுண்டாயிற்று. பகவான் ஜலமெடுக்கப் போன பட்டருடைய கனவிலே அன்றிரவு தோன்றி, "பாணன் என்னுடைய பக்தன்! ஜாதியைப் பாராமல் அவனை என்னுடைய ஸந்நிதிக்கு, உன்னுடைய தோளிலே தூக்கிக் கொண்டுவா!" என்று சொல்லி மறைந்தார். பட்டருக்குப் பாணரின் பெருமை இப்பொழுதுதான் தெரிந்தது.

5. திருப்பாணாழ்வார் மறுநாளும் காவேரிக் கரைக்கு வந்து அப்படியே பகவானைப் பாடிக் கும்பிட்டார். பட்டர் தமக்குப் பகவான் கனவிலே சொன்னதைச் சில பக்தர்களுக்குச் சொன்னார். எல்லாரும் ஆச்சரியத்துடன் காவேரிக்கு

வந்தனர்; பாணர் கண்களிலே நீர் பெருக நின்று பகவானைத் துதிப்பதைப் பார்த்தனர்; "ஆகா! பரமபக்தர்! பரமபக்தர்" என்று புகழ்ந்து மகிழ்ந்தனர்.

6. திருப்பாணாழ்வார் எதையும் கவனிக்கவில்லை; தம்மையே மறந்து துதித்துக் கொண்டிருந்தார். பட்டர் ஸ்நானம் செய்துவிட்டு அவரிடம் போய், "கோவிலுக்கு எழுந்தருள வேண்டும்!" என்றார். பாணர் திடுக்கிட்டுக் கண் திறந்து பார்த்தார். அருகே பட்டர் இருக்கவே, ஹரி! ஹரி! என்று தூரவிலகினார். பட்டர் அவரை நெருங்கி, "கோவிலுக்கு எழுந்தருள வேண்டும்!" என்றார்.

7. திருப்பாணாழ்வார், "நான் பஞ்சமன்! கோவிலுக்குள் வரத்தகாதவன்" என்றார். பட்டர் "உம்மைத் தோளிலே தூக்கிக்கொண்டு ஸந்நிதிக்குவரும்படி பெருமாள் என் கனவிலே உத்தரவிட்டார். அதை நான் எப்படிக் கடப்பேன்? நீர்தான் அதை எப்படி மீறுவீர்? இருவராலும் முடியாது. ஏறிக்கொள்ளும் செல்வோம்" என்று கூறிக் குனிந்தார்.

8. திருப்பாணாழ்வார், என்ன சொல்வார்! "ஐயோ பிராமணராகிய பட்டருடைய தோளின்மேல் எப்படி ஏறி உட்காருவது" என்று எண்ணி அஞ்சினார். அவர் தேகம் நடுங்கியது. உள்ளம் பதறியது. வாய் பேச முடியவில்லை. கண்களிலிருந்து நீர் பெருகத் தொடங்கியது. ஆகையால் அவர் ஒன்றுந் தோன்றாமல் கை குவித்தபடியே நின்றுவிட்டார்.

9. திருப்பாணாழ்வாருடைய இந்த நிலைமையைக்கண்ட எல்லாரும் பிரமித்து விட்டனர். பட்டர் தாமே தமது தோளிலே அவரைத் தூக்கிக் கொண்டார். இப்பொழுது தாம் தாம் என்று மேளவாத்தியம் முழங்கியது. பக்தர்கள்

அநேகம்பேர் வந்து கூடினர். பட்டர், கருடாழ்வார் பகவானைக்கொண்டு செல்வதுபோல், ஆழ்வாரைக்கொண்டுபோய்க் கோவிலில் பெருமாள் முன்னே இறக்கினர்.

10. திருப்பாணாழ்வார் ஸந்நிதியை அடைந்தவளவில் கை குவித்தபடி பரமாநந்த வடிவமாய் நின்றார். பிறகு க்ஷணநேரத்தில் அவர் பகவானோடு கலந்துகொண்டார். ஆழ்வாரை ஒருவரும் காணவில்லை. எந்த ஜாதியாராயிருந்தாலும் பக்தரை பகவான் இரக்ஷித்து நல்ல கதி கொடுக்கிறார் என்பதை எல்லாரும் தெரிந்துகொண்டனர்.

---

கடவுள்—நீதிமானுக்கு இரங்குவார்

## மநுநீதிகண்ட சோழன்

1. சோழ தேசத்தில் திருவாரூர் என்று ஓர் ஊரிருக்கிறது. அது சிறந்த சிவக்ஷேத்திரம். அந்த அழகிய ஊரிலிருந்து மநுநீதிகண்ட சோழன் என்பவன் சோழதேசத்தை ஆண்டுவந்தான். அவன் ஒழுக்கத்திலே சிறந்தவன்; நீதிமான்; சிவபக்தன்; குடிகளிடத்தில் அருளும் அன்பும் உடையவன்.

2. அவனுக்கு ஒரு புத்திரனிருந்தான். அவன் சிறுவயதிலேயே படிக்கவேண்டியவைகளை யெல்லாம் படித்தான்; படித்தபடி நல்ல நடவடிக்கை தவறாமல் நடந்து வந்தான்; சிவபெருமானிடத்தில் அன்புடையவனானான்.

3. அவன் ஒருநாள் தேரேறிச் சிவபெருமானைத் தரிசிக்க ஆலயத்துக்குப் போனான். தேர் போய்க்கொண்டிருந்தது. அப்பொழுது ஒரு பசுங்கன்று துள்ளிக் குதித்து ஓடிவந்து, தேர்க்காலில் அகப்பட்டுக்கொண்டு இறந்தது. அதைக் கண்டதும் இராஜகுமாரனுக்கு உள்ளம் பதைத்தது.

உடல் நடுங்கியது. "ஆகா! கொடிய பழி வந்து சேர்ந்ததே!" என்று அவன் துக்கப்பட்டான்; உடனே இரதத்திலிருந்து, இறங்கி என்ன செய்வதென்று ஏங்கினான்.

4. இவன் இப்படியிருக்கையில் தாய்ப்பசு அலறிக்கொண்டே ஓடி அரண்மனை வாயிலிலே கட்டியிருந்த ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் முட்டி அடித்தது. அந்தச் சத்தம் கேட்டதும் அரசன் வெளியே வந்தான்; பசு கண்ணீர் சோர நிற்கக் கண்டு, உடனே தன் மந்திரிகளைப் பார்த்து விசாரித்தான். அவர்கள் நடந்ததைச் சொன்னார்கள். அரசன், "ஐயோ இந்தப் பாவம் எப்படித் தொலையும்?" என்று சொல்லி மனம் சோர்ந்தான்; பசுவின் முகத்தைப் பார்த்துப் பரிதாபப் பட்டான்.

5. மந்திரிகள் "வேந்தே, சாஸ்திரத்தில் கோவதை செய்தவனுக்குப் பிராயச்சித்தம் விதித்திருக்கின்றது. அந்தப் பிராயச்சித்தத்தைத் தமது குமாரனுக்குச் செய்விக்க வேண்டும். இதுதான் நீதி" என்றனர்.

6. அரசன், "மந்திரிகளே, நீங்கள் சொல்லும் பிராயச்சித்தம் கன்றை இழந்து கதறும் இந்தப் பசுவின் துக்கத்தை மாற்றுமா? மாற்றாது. ஆகையினால் நானும் என்னுடைய மகனை இழக்கிறேன்; இந்தப் பசுவைப் போல் நானும் வருந்துகிறேன். இதுதான் நீதி" என்று சொன்னான். உடனே சிவபெருமானைத் தியானம் செய்தான். மந்திரிகள் வேறு ஒன்றும் பேசாமல் பயந்து நின்றனர்.

7. அரசன் தன் மகனை அந்த நிமிஷமே தன் முன் வரவழைத்தான். மகன் முகவாட்டத்துடன் வந்து தந்தையை வணங்கி நின்றான். அரசன் அவனிடம் தன்னுடைய தீர்மானத்தைச் சொன்னான். மகன் மகா புத்திமான்; ஆதலால்

அவன் "இது நியாயம்! தகுந்த தண்டனை" என்று கூறித் தலை குனிந்து கும்பிட்டான்.

8. அரசன் மந்திரிகளில் ஒருவனைப் பார்த்து, "இவனைக் கொண்டுபோய்த் தேர்க்காலின் கீழேகிடத்தித் தேரை நடத்தக் கடவாய்" என்று கட்டளையிட்டான். மந்திரி அந்தப் பரிதாபமான தண்டனையைச் செய்ய மனம் வராமல் தன்னுயிரையே மாய்த்துக் கொண்டான்.

9. அரசன், "நீதியைக் காப்பதே என் கடமை" என்று தன் மகனைத் தானே அழைத்துக்கொண்டு போய்த் தேர்க் காலிலே கிடத்தி, தேரை அவன்மீது நடத்தினான். நடத்தியவுடன் சிவபெருமான், விருஷபத்தின்மீது அரசனுக்குக் காட்சி தந்து, "வேந்தே, உன் நீதிமுறையைக் கண்டு ஸந்தோஷமடைந்தோம். உன்னுடைய நீதியை உலகத்துக்குத் தெரிவிக்கவே இந்த சம்பவம் நடந்தது! நீ பரிசுத்தனாய்" என்று சொல்லி மறைந்தார்.

10. சிவபெருமான் மறைந்தவுடனே, பசுங்கன்றும் மந்திரியும் அரசனுடைய மகனும் உயிர்பெற்று எழுந்தனர், தேவலோகத்திலிருந்து தேவர்கள் புஷ்பமாரி பெய்தனர். தேவதுந்துபி முழங்கியது. எல்லோரும் ஆநந்தமடைந்தனர். அரசன் சிவபெருமானுடைய திருவருளை எண்ணி மனமுருகி நின்று துதித்தான்; பிறகு தன் மகனைத் தழுவிக் கொண்டான்; பசுங்கன்றைத் தடவிக் கொடுத்தான். கன்று பசுவினிடம் ஓடிப் பால் குடித்தது. எல்லாரும் மிகுந்த ஆச்சரியத்துடன் தத்தம் இருப்பிடம் போனார்கள். வருஷந்தோறும் இது உற்சவமாக அந்த ஊரில் இன்றும் நடந்து வருகிறது. (பெரியபுராணம்)

---

கடவுள்-அன்பரை ஆபத்தில் காப்பாற்றுகிறர்

(ஆபத்பாந்தவர்)

## கஜேந்திர மோக்ஷம்

1. இந்திரத்துய்மன் என்னும் ஓர் அரசனிருந்தான். அவன் நெடுங்காலம் அரசு செய்தான்; பிறகு தவஞ்செய்யக் காட்டிற்குப் போனுன்: காட்டில் இரம்மியமான ஓரிடத்தில் தவச்சாலை அமைத்துக்கொண்டான்; அதிலிருந்து மனதைப் பகவானிடம் செலுத்தித் தவம் செய்தான்.

2. இந்திரத்துய்மனிடம் ஒருநாள் அகஸ்தியர் வந்து, "நீயார்?" என்று கேட்டார். அவன் அவரை, இன்னுரென்று தெரிந்துகொள்ளாமல் அவசரமாய், "நீ யார் என்னை விசாரிக்கிறவன்? என் தவத்தைக் கெடுக்க வந்தாயோ? சை போ அப்பாலே" என்ருன்.

3. இந்திரத்துய்மன் இப்படி அகங்காரத்துடன் பேசவே அகஸ்தியர் கோபங்கொண்டார்; அவன் முகத்தைப் பார்த்து, "அடே இந்திரத்துய்மா, உன்னை நான் அறியமாட்டேனு? நீ எப்படி இருக்கிருய் என்று அறிய உன்னை விசாரித்தேன். நீ மரியாதை இல்லாமல் துடுக்காய்ப் பேசினுய். ஆதலால் வெறிகொண்டு திரியும் மதயானையாய் உழலக் கடவாய்" என்று சாபமிட்டார்.

4. இந்திரத்துய்மன் "ஸ்வாமி, தம்மை நான் இன்னுரென்று தெரிந்து கொள்ளவில்லை. என் பிழையை மன்னிக்க வேண்டும். தாம் யார்?" என்று கேட்டான். அகஸ்தியர், "நான் அகஸ்தியர்; அடக்கம் எப்போதும் நன்மையைத் தரும் என்பதை நீ மறந்தாய்! அதனுல் வந்தது இந்தத் துன்பம்!" என்ருர்.

5. இந்திரத்துய்மன், "ஸ்வாமி, "எப்படியிருந்தாலும் என் பிழையைப் பொறுத்துக்கொள்ள வேண்டும். நான்

யானையானாலும் எனக்குக் கடவுளுடைய நினைவு எப்போதும் இருக்கும்படி அருள்புரியவேண்டும்'' என்று கேட்டான். அகஸ்தியர், "அரசனே, நீ விரும்பியபடி உனக்கு ஜகதீசனைத் தியானிக்கும் ஞானமிருந்து கொண்டிருக்கும். யானை வடிவமாய் இருக்கும்போதே பகவான் உனக்குக் காட்சி தருவார். அப்பொழுது உன் சாபம் நீங்கும்'' என்று சொல்லிப் போய் விட்டார்.

6. இந்திரத்துய்மன் உடனே ஒருபெரிய யானையானான். அந்த யானை பிறகு அந்தக் காட்டிலிருந்த யானைகளுக்கெல்லாம் ராஜாவாயிற்று; கஜேந்திரன் என்று பெயர் பெற்றது. ஒரு சமயம் எல்லா யானைகளுடனும் கஜேந்திரன் ஒரு குளத்துக்குப்போய் நீர் விளையாடியது. அப்பொழுது கஜேந்திரனுடைய காலை அந்தக் குளத்திலிருந்த ஒரு முதலை பிடித்துக்கொண்டது.

7. முதலை உள்ளுக்கிழுக்க யானை மேலுக்கிழுக்க இரண்டுக்கும் பலமான சண்டை உண்டாயது. கஜேந்திரன் தன்னால் இயன்ற வரையில் தன்னை விடுவித்துக்கொள்ள முயன்றது. முடியாமல் போகவே பகவானைத் தியானித்தது; தன் துதிக்கையை உயர நீட்டிக்கொண்டு, "ஆபத்து வேளையில் அன்பரைக் காக்கும் ஆதிமூலமே! இரக்கம் சிறிதுமில்லையா உனக்கு?'' என்று கதறிற்று.

8. பகவான் எங்கும் இருப்பவரல்லவா? கஜேந்திரன் கதறுவது அவர் செவியிலே படாமலா போகும்? பட்டதும் கருடவாகனத்தின்மீது சங்கு சக்கர பீதாம்பரதாரியாய் அங்கே வந்து, "அஞ்சாதே'' என்று கஜேந்திரனுக்கு அபயந் தந்தார்; முதலையின்மேல் தமது சக்கரத்தை விடுத்து அதைச் சங்கரித்துக் கஜேந்திரனைக் காப்பாற்றினார். கஜேந்திரன் பிறகு முத்தி அடைந்தது. —(பாகவதம்)

59624

## 2. காரைக்காலம்மையார்

1. காரைக்காலம்மையார் தனதத்தன் என்னும் ஒரு வைசியனுடைய பெண். தனதத்தனுக்குப் பிள்ளையில்லை. ஆகையால் அவன் காரைக்காலம்மையாரை அவருடைய கணவனுடன் தன் வீட்டிலேயே வைத்துக்கொண்டான். காரைக்காலம்மையாருக்குத் தனதத்தன் வைத்த பெயர் புனிதவதி. அவர் காரைக்காலிலே வசித்து வந்தபடியால் அவர்க்குக் காரைக்காலம்மையார் என்கிற பெயர் உண்டாயிற்று.

2. காரைக்காலம்மையார் சிவபெருமானிடம் அன்புடையவர். ஆகையால் அவர் தம் வீடு தேடிவரும் அடியார்களுக்கு அன்போடு அன்னமிட்டு உபசரித்து வந்தார். அப்படியிருக்கையில் ஒரு நாள், காரைக்காலம்மையாரின் புருஷன் பரமதத்தனைப் பார்ப்பதற்காகச் சிலர் வந்தனர். அவர்களில் ஒருவன் அவனிடம் இரண்டு மாம்பழம் கொண்டு வந்து தந்தான். அந்தப் பழங்களை அவன் காரைக்காலம்மையாரிடம் கொடுத்தான்.

3. காரைக்காலம்மையார் அந்தப் பழத்தை வாங்கி வைத்த பின்பு, சிவனடியார் ஒருவர் வந்தார். வந்தவர் பசிக்கிறது என்று உண்ண அவசரப்பட்டார். காரைக்காலம்மையார், உடனே இலையைப்போட்டு, இலையில் மாம்பழத்தி லொன்றை வைத்து அன்னமிட்டார். சிவனடியார் ஸந்தோஷமாகத் திருவமுது செய்து போனார். அப்பால் அம்மையாருடைய கணவன் போஜனத்துக்கு வந்தான். அம்மையார் அவனுடைய இலையில் ஒரு மாங்கனியை வைத்துப் போஜனமிட்டார். அவன் அப்பொழுது "இன்னொரு மாம்பழத்தையும் கொண்டுவந்து வை" என்று கேட்டான்.

4. காரைக்காலம்மையார் என்ன செய்வதென்று பயந்து, சிவபெருமானைத் தியானித்தார். அவர் கையில் ஒரு மாங்கனி வந்து விழுந்தது. அதைக் கணவனுக்குப் படைத்து, அம்மையார் ஸந்தோஷப்பட்டார். பரமதத்தன் அந்தக் கனியை உண்டான். அது முன்னையதிலும் அதிகச் சுவையா யிருந்தது. அதனால் அவன் "இது நான் முன் தந்த மாங்கனியல்ல. இது வேறு, அது எங்கே? இது ஏது?" என்று கேட்டான்.

5. காரைக்காலம்மையார் பயந்துகொண்டே, "நாதா, முன் தாம் தந்த இரண்டு கனிகளிலே ஒன்றைச் சற்று முன் வந்த சிவனடியார்க்குப் பறிமாறிவிட்டேன். நீர் அதைக் கேட்டபடியால் பயந்து சிவபெருமானைத் தியானித்தேன். அவர் திருவருளினால் இந்தக் கனி என் கையிலே வந்து விழுந்தது!" என்றார். பரமதத்தன் நகைத்து, "இதை நான் நம்பவில்லை. இப்பொழுது இன்னொரு கனி வரவழைப்பாயானால் உன் பேச்சை நம்புவேன்" என்றான்.

6. காரைக்காலம்மையார், "நாதா, சற்று முன் திருவருள் செய்த சிவபெருமான் இப்பொழுது கைவிடுவாரா? கைவிடமாட்டார்" என்று சொல்லி ஈசனைத் தியானித்தார். முன்போலவே ஒரு மாம்பழம் அவர் கரத்தில் வந்து விழுந்தது. அதை அம்மையார் தமது கணவன் கையிலே கொடுத்தார். கணவன் ஆச்சரியத்தோடு அதை வாங்கினான். வாங்கிய பழம் உடனே அவன் கையிலிருந்து மறைந்துவிட்டது. அவன் தன் மனைவியை அன்று முதல் தெய்வமாக எண்ணினான்.

—(பெரியபுராணம்)

கடவுள்—அடியார்க்கு எளியவர்

## திருநாவுக்கரசு ஸ்வாமிகள்

1. திருநாவுக்கரசு ஸ்வாமிகள் என்று ஒரு சிவபக்தர் இருந்தார். அவர் வேளாளர்; திருவாய்மூரிலே அவதாரஞ் செய்தவர். அவர், சிவபெருமானிடத்தில் அன்புடையவராகையினால், எங்கெங்கே சிவஸ்தலங்களிருக்கின்றனவோ அங்கெல்லாம் போய்க் கோவிலை அன்போடு வலம் வருவார்; துதிப்பார்; தொழுவார்.

2. அப்படிப்பட்ட அவர் ஒரு சமயம் திருப்பைஞ்ஞீலி என்னும் க்ஷேத்திரத்திற்குக் கால் நடையாகச் சென்றார். இது திரசிரபுரத்துக்கு வடக்கே பிரம்பலூர் போகும் வழியில் ஒரு காட்டிலிருக்கிறது. ஸ்வாமிகள் போகும்போது வழியில் அவருக்குப் பசியும், தாகமும், இளைப்பும் உண்டாயின. அப்பொழுது வெயில் தாங்கமுடியாமல் காய்ந்தது. ஆனாலும் ஸ்வாமிகள் ஒன்றையுமே கவனியாமல் சிவபெருமானைத் தியானித்துக்கொண்டே நடந்தார்.

3. சிவபெருமான் எல்லாம் உணரவல்லவர். ஆகையினால் அவர்க்குத் தம்முடைய பக்தராகிய ஸ்வாமிகள் வழியில் இப்படிக் கஷ்டப்படுவது தெரிந்தது. உடனே ஸ்வாமிகளுடைய வருத்தத்தை நீக்க, பகவான் திருவுள்ளங்கொண்டார். சிவபெருமான் எல்லாம் வல்லவரல்லவா? ஆகையினால் அந்த வழியில் ஒரு பெரிய மரத்தை உண்டாக்கி நிழலைத் தந்தார்: அதன் பக்கத்தில் ஒரு குளத்தையும் உண்டாக்கினார்; பிராமண ரூபங்கொண்டு ஒரு கட்டுச்சோற்று மூட்டையுடன் அந்த மரத்தடியிலே போய் நின்றார்.

4. ஸ்வாமிகள், அந்த இடத்திற்கு வந்ததும் மரத்து நிழலிலே போய் நின்று, "பரமசிவம்! பரமசிவம்" என்றார்.

அப்பொழுது அந்தணர் அவர் முன்னே போய், "ஸ்வாமி, வழிநடந்த நீர் மிகவும் களைத்துப்போயிருப்பதாக அறிகிறேன். என்னிடம் கட்டமுதிருக்கிறது. இதை இந்தக் குளத்தில் வைத்துக்கொண்டு உண்டு பசியாறும்" என்று சொல்லித் தம்மிடமிருந்த கட்டமுதைக் கொடுத்தார்.

5. ஸ்வாமிகள் அதை வந்தனத்தோடு பெற்றுக்கொண்டார்; 'சிவபெருமானுடைய திருவருள் இது' என்று எண்ணி ஸந்தோஷமடைந்தார்; அவரைத் தியானம்செய்து கொண்டே குளத்தில் இறங்கிக் கைகால் முகங் கழுவிக் கொண்டார்; நெற்றியில் சிவசிவ என்று ஜபித்துத் திருநீறணிந்தார்; பிறகு அந்தக் கட்டமுதை உண்டு நீரருந்திக் கரையேறி மாத்து நிழலுக்கு வந்தார்.

6. காற்று இப்பொழுது மனோகரமாக வீசியது. ஸ்வாமிகள் ஆயாசந்தீர்ந்து ஆனந்தமாயிருந்தார். அப்பொழுது அந்தணர், "இனி நீர் எங்கே போகப் போகிறீர்?" என்று கேட்டார். ஸ்வாமிகள், "நான் திருப்பைஞ்ஞீலிஎன்னும் சிவஸ்தலத்திற்குப் போகிறேன்" என்றார். அந்தணர், "ஓகோ அப்படியா, நானும் அங்கேதான் போகிறேன். அதுதான் என்னுடைய ஊர்; போகலாம்" என்றார்.

7. பிறகு இருவரும் சற்றுநேரம் அங்கிருந்து விட்டுப் அப்பால் புறப்பட்டுப்போனார்கள். திருப்பைஞ்ஞீலிக்குச்சமீபமாய்ச் சென்றதும் அந்தணராகவந்த சிவபெருமான் திடீரென்று மறைந்துவிட்டார். ஸ்வாமிகள் உடனே திடுக்கிட்டு நின்று, இவையெல்லாம் சிவபெருமானுடைய செயல்கள் என்று அறிந்து மகிழ்ந்தார். அப்பொழுது அவர் தேகம் சிலிர்த்தது. சற்றுநேரம் அந்த இடத்திலேயே நின்று சிவபெருமானைத் துதித்துப் பிறகு கோவிலுக்குப் போனார்.

---

## 2. கணிகண்ணன்

1. கணிகண்ணன், ஜாதியிலே வேளாளன். அவன் தன் சிறுவயதிலே திருமழிசையாழ்வார் என்னும் ஒரு விஷ்ணு பக்தருக்குச் சிஷ்யனானான். திருமழிசை யாழ்வார் காஞ்சிபுரத்தில் வசித்தார். அப்பொழுது கணிகண்ணன் அவர்க்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தான். அவன் தினந்தோறும் உபாதானமெடுத்து உண்டு காலங்கழித்து வந்தான்.

2. கணிகண்ணன் தன் குருவினிடத்திலும் பகவானிடத்திலும் சிறந்த அன்புடையவனாயிருந்தான். அவனை எல்லாரும் விரும்பி மரியாதையாக நடத்திவந்தனர். அவன் ஒரு வீட்டுக்குப் போய்க் காலை வைக்குமுன்பே உபாதானம் கிடைத்துவிடும். அவனை ஒருசமயம் காஞ்சீபுரம் அரசன் பல்லவராயன் கண்டு, "உன் குருவை நான் தரிசிக்க விரும்புகிறேன்; அவரை ஒரு நாள் அரண்மனைக்கு அழைத்துவா" என்றான்.

3. கணிகண்ணன், "அவர் இங்கே வரமாட்டார்" என்றான். "ஆனால் என்னை அவரிடம் அழைத்துக்கொண்டு போ" என்றான். "கணிகண்ணன், அவரிடம் தாம் விரும்புவது என்ன?" என்று கேட்டான். அரசன், "நான் கிழவனாய் விட்டேன்! எனக்கு வந்த இந்தக் கிழத்தனத்தை நீக்கி என்னை நல்ல யௌவனனாக்கவேண்டும். அது அவரால் முடியும். அவரைப் பார்க்கவேண்டும்" என்றான்.

4. கணிகண்ணன், "இது வீண் ஆசை. ஆதலால் அவர் இதற்கு இணங்கார். சொல்லப் போனால் வீணாசைக் காரராகிய உம்மை அவர் கண்ணாலே கூடப் பார்க்கமாட்டார்" என்றான். அரசன், "அது போகட்டும்; நீயாவது

ஒரு பாட்டுப்பாடி என் கிழத்தனத்தை மாற்று" என்று கேட்டான். கணிகண்ணன் அதற்கு இணங்காமல் பகவான் மீது ஒரு பாட்டுப் பாடினான். அதைக் கேட்ட அரசன் கோபங்கொண்டு "எனக்கு நன்மை செய்யாத நீ இந்த ஊரிலே இருப்பது கூடாது" என்று உத்தரவிட்டான். கணிகண்ணன் அதற்குக் கொஞ்சமும் அஞ்சவில்லை; தன் குருவாகிய ஆழ்வாருக்குப் பணிவிடை செய்வதற்கு இல்லையே என்று வருந்தி, அவரிடம் முகவாட்டத்துடன் சென்றான்.

5. கணிகண்ணனுடைய முகம் வாடியிருப்பதைக் கண்ட அவன் குரு, "உன் முகம் வாடியிருக்கக் காரணம் என்ன?" என்று கேட்டார். கணிகண்ணன் நடந்ததைச் சொல்லி, "ஸ்வாமி, இனிமேல் நான் எப்படி தங்களுக்கு ஊழியம் செய்யப் போகிறேன். அதற்கில்லையே என்கிற வருத்தம் என்னை வருத்துகிறது" என்று கண்கலங்கினான். உடனே ஆழ்வார் "வருந்தாதே" என்று கோவிலுக்குள்ளே போய்,

> "கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
> மணிவண்ணா நீகிடக்க வேண்டா—துணிவுடைய
> செந்நாப் புலவனும் போகின்றேன் நீயும் உன்றன்
> பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்."

என்று பாடினார். உடனே ஸ்வாமி அவ்வூரைவிட்டுப் புறப்பட்டார்.

6. "கணிகண்ணா, ஸ்வாமி, புறப்பட்டு விட்டார். வா நாம் போவோம்" என்று ஆழ்வாரும் தம் சிஷ்யனுடன் புறப்பட்டு அந்த ஊரைவிட்டு நீங்கினார். பிறகு அரசனுக்கு அநேக கஷ்டங்கள் உண்டாயின. ஊரிலுள்ளவர்களும் பல விதமான துன்பமடைந்தனர். அரசன் ஆழ்வாரையும் கணி

கண்ணனையும் தேடிக் கண்டுபிடித்துக் தான்செய்த பிழைகளை மன்னிக்கும்படி வேண்டினான்.

கணிகண்ணனும் ஆழ்வாரும் அரசன்மீது இரக்கங் கொண்டனர். ஆழ்வார்,

"கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டும் — துணிவுடைய
செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயும் உன்றன்
பைந்நாகப் பாய்விரித்துக் கொள்"

என்று பாடினார். ஸ்வாமி உடனே ஊருக்குத் திரும்பினார். அரசன் மேள வாத்தியத்துடன் அவர்களை அழைத்துக் கொண்டு திருவெஃகாவுக்குப் போனான். ஸ்வாமி கோவிலில் எப்போதும்போல் விளங்கினார். ஸ்வாமிக்கு அப்பொழுது முதல், சொன்னவண்ணம் செய்த பெருமாள் என்று பெயருண்டாயிற்று. ஸ்வாமி ஆழ்வார் சொன்னபடி நடந்தாரல்லவா ?

7. கணிகண்ணன் பெயர் பிறகு எங்கும் பிரசித்தமாயிற்று. இராஜ்யம் செழிப்படைந்தது. ஜனங்கள் குறைவில்லாமல் வாழ்ந்து வந்தனர். பல்லவ அரசனும் ஆழ்வாருக்குச் சிஷ்யனானான்.

---

### கடவுள்—எல்லாம் அறிய வல்லவர்

(ஸர்வ சாக்ஷியாய் விளங்குகிறார்.)

## 1. சிவபெருமான் ஜலந்தரனை அழித்தது

ஒரு சமயம் சிவபெருமானுடைய வேர்வையிலிருந்து ஒருவன் தோன்றினான். அவன் ஜலந்திரன் என்கிற பேர் பெற்றான் ; மகா பராக்ரமசாலியாக விளங்கினான். அதனால் அவன் தேவதச்சனாகிய மயனைக் கொண்டு தனக்கு ஒரு நக

ரம் அமைத்துக்கொண்டான்; காலநேமி என்பவனுடைய புத்திரி பிருந்தை என்பவளை மணஞ்செய்து கொண்டான்.

2. அவன் தன்னுடைய ஆண்மையினுல் தேவர்களையும் அசுரர்களையும் வென்றுன்; தவிர தன்னை எதிர்ப்பவர் எவரையும் சண்டையில் வென்று தனக்கு அடிமைகளாக்கிக் கொண்டான்; இப்படி ஒருவர் பாக்கியில்லாமல் எல்லாரையும் வென்றுன்.

3. அப்பால் பரமசிவனிடம் சண்டைசெய்து அவரையும் வெல்வதென்று புறப்பட்டான். கடவுள் எல்லாவற்றையும் அறியவல்லவராகையினுல் ஜலந்தரன் சண்டைக்குப் புறப்பட்டதையும் அறிந்தார்; உடனே அவர் ஒரு பிராமணக் கிழவனுக வடிவங்கொண்டு, ஜலந்திரன் புறப்பட்டு வரும் வழியிலே போய் அவன் முன்னே நின்று, "நீ யாரப்பா? எங்கே போகிருய்?" என்று கேட்டார்.

4. ஜலந்திரன், கர்வத்துடன், "நான் ஜலந்திரன்! சிவபெருமாளுேடு சண்டைக்குப் போகிறேன்" என்றுன். பிராமணராக வந்த சிவபெருமான் நகைத்து, "அப்படியா! ஆனுல் நான் இங்குக் கீழே விருத்தவடிவாய் ஒருகோடு கிழிக்கிறேன். அந்த இடத்தைப் பெயர்த்து எடு; எடுப்பாயானுல் நீ சிவபெருமானை வெல்வாய்! இல்லாவிட்டால் வெல்லமாட்டாய்!" என்று கூறித் தமது திருவடியால் நிலத்தில் விருத்தவடிவாய் ஒரு கோடு கிழித்தார்.

5. ஜலந்திரன் "இதுதானு பெரிது? இதை எடுக்க மாட்டேனு?" என்று, அதைப் பெயர்த்தெடுத்துத் தலையின்மீது வைத்துக் கொண்டான். அது அவனை அப்பொழுதே இரண்டு பிளவாகப் பிளந்து கொன்றது. இதைக்கண்ட எல்லாரும் ஸந்தோஷ மடைந்தனர். சிவபெருமான் உடனே அவர்களுக்குக் காட்சி தந்து மறைந்

தார். அந்தணராக வந்தவர் சிவபெருமானென்று அறிந்த தேவர்களும் மற்றவர்களும் அவரை வணங்கித் துதித்தனர்.

---

கடவுள்—எல்லாம் அறியவல்லவர்

## 2. கிருஷ்ண பகவான் பாண்டவர் சகாயனானது

1. பாண்டவர்கள் வனவாசத்தை முடித்து வெளிப்பட்டனர். அவர்களுக்கு அவர்களுடைய ராஜ்யத்தைக் கொடுக்கத் துரியோதனனுக்கு விருப்பமில்லை. ஆகையினால் அவன் அவர்களோடு சண்டை செய்து அவர்களை அழிக்கத் தீர்மானித்தான். அதற்கு வேண்டிய சேனைகளைத் திரட்டினான்; பிறகு கிருஷ்ணபகவானுடைய துணையையும் பெற எண்ணங் கொண்டு அவரிடம் புறப்பட்டுப் போனான்.

2. பகவான் எல்லாம் அறியவல்லவ ராகையினால், துரியோதனன் இப்படிப் புறப்பட்டு வருவதை அறிந்தார். பகவான் எப்போதும் நல்லவர்களுக்குத் துணை செய்வார்; துஷ்டர்களுக்குத் துணை செய்யமாட்டார். ஆகையினால் அவர் பாண்டவர்களுக்குத் துணைசெய்யத் தீர்மானித்தார்; உடனே பாண்டவர்களிலே சமர்த்தனான அர்ஜுனனுக்குத் துரியோதனன் தமது துணை பெறுவதற்காக வரும் செய்தியைச் சொல்லி அனுப்பினார்; தாம் படுக்கை யறையிலே போய்க் கட்டிலில் சயனம் செய்து கொண்டு நித்திரை போவதுபோல் இருந்தார்.

3. படுத்துக் கொள்ளுமுன் காவலாளிகளைப் பார்த்து, துரியோதனன் வந்தால் தடைசெய்யாமல் விட்டு விடும்படி அவர் சொல்லி யிருந்தார். பிறகு சற்று நேரத்திற்கெல்லாம் துரியோதனன் வந்தான். காவலாளிகள் அவ

னைத் தடுக்கவில்லை. "போகலாம், தடையில்லாமல் போகலாம்" என்றனர். துரியோதனன் படுக்கை அறையிலே பிரவேசித்துப் பகவானைப் பார்த்தான்.

4. பகவான் நித்திரை செய்வதைக் கண்டு, "விழித்துக் கொள்ளட்டும், பார்ப்போம்" என்று எண்ணி உட்கார இடம் பார்த்தான். பகவானுடைய திருவடிக்குப் பக்கத்தில் ஒரு நாற்காலி இருந்தது. அதைக் கண்டதும், "இது இவருடைய கால் பக்கத்தி லிருக்கிறது. இராஜாதி இராஜனாகிய நாம் இவருடைய காலின்கீழ் உட்காருவதா" என்று எண்ணி அதை எடுத்து அவருடைய தலைப்பக்கம் போட்டு உட்கார்ந்து கொண்டான்.

5. அப்பால் கொஞ்சநேரத்துக் கெல்லாம் அர்ஜுனன் வந்தான். அவன் பகவானுடைய கால்பக்கமாய் உட்கார்ந்தான்; அவருடைய அழகிய திருவடிகளை மெதுவாய்ப் பிடித்தான். பகவான் உடனே நித்திரை நீங்கி எழுந்தவர்போல் எழுந்தார். எதிரில் அர்ஜுன னிருக்கவே ஒன்றும் அறியாதவர்போல், "அர்ஜுனா, வா! என்ன விசேஷம்? இந்த வேளையில் வரக் காரணமென்ன?" என்று கேட்டார்.

6. அர்ஜுனன், "தாமறியாததா?—நடக்கப் போகிற யுத்தத்தில் தாம் எங்களுக்குத் துணையாயிருந்து காப்பாற்ற வேண்டும்" என்று கேட்டான். கிருஷ்ணபகவான், "நான் யுத்தத்தில் ஆயுதமெடுக்க மாட்டேன்! வேண்டுமானால் உனக்கு ஸாரதியாக இருக்கிறேன்" என்றார். அர்ஜுனன், "அதுவே போதும்" என்றான்; உடனே "அதோ துரியோதன அண்ணா வந்திருக்கிறார்; தலைப் பக்கத்தி லிருக்கிறார்" என்றான்.

7. கிருஷ்ணபகவான் ஒன்றுமே அறியாதவர் போல் "எங்கே எங்கே!" என்று தலைப்பக்கம் திரும்பினார்.

துரியோதனன் இருப்பதைப் பார்த்து, "வந்த விசேஷ மென்ன? ஏன் காத்திருக்க வேண்டும்? என்னை எழுப்பி யிருக்கப்படாதா?" என்று கேட்டார். துரியோதனன், "தூக்கத்தில் எழுப்புவது நல்லதல்ல என்றிருந்தேன். அதனாலென்ன? யுத்தத்தில் உமது துணையை நான் விரும்புகிறேன்" என்றான்.

8. கிருஷ்ணபகவான், "நான் அர்ஜுனனுக்குச் சொன்னதை நீ கேட்டிருந்தா யல்லவா? ஆதலால் நான் எப்படி உனக்குத் துணை செய்வேன்? அவனுக்கு முன்பே வாக் களித்து விட்டேன். ஆனால் உனக்குச் சில சேனைகள் தருகிறேன்" என்றார். துரியோதனன், "சரி அப்படிச் செய்தாலும் போதும்" என்று ஒப்புக்கொண்டு விடை கொண்டான். பிறகு அர்ஜுனனும் "பகவான் எல்லாம் அறியவல்லவர்; ஆதலால் முன்பே நடக்கப் போவதை அறிந்து நமக்குக் கிருபை செய்தார்" என்பதை உணர்ந்து ஸந்தோஷமாய் அவரிடம் விடைகொண்டான்.—(பாரதம்)

---

எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத் தெய்வமடிக்கும்

## 1. சூரபத்மனும் சுப்ரமண்யக்கடவுளும்

1. சூரபத்மன், சிங்கமுகன், தாரகன் என்று மூன்று அசுரர்கள் தோன்றினர். அவர்கள் மூவரும் சிவபெருமானை நோக்கி, எவரும் செய்வதற்கு அரிய கடுமையான தவஞ் செய்தனர். அதனால் அவர்களிடம் சிவபெருமான் ஸந்தோஷ மடைந்து, அவர்கள் விரும்பிய வரங்களை யெல்லாம் தந்தார். அந்த வர மகிமையினால் அவர்கள் ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கும் அதிபதியாயினர்; எவராலும் வெல்ல முடியாத பலம் பெற்றனர்.

2. இப்படி ஸம்பத்தையும் அதிகாரத்தையும் ஆற்றலை யும் பெறவே அவர்கள் தங்களுக்கு மிஞ்சியவர்கள் எவரு மில்லை யென்று கர்வங் கொண்டனர்; தேவர்களை யெல் லாம் அடிமைக ளாக்கிக் கொண்டு பல வழியிலே அவர்க ளுக்குத் துன்பஞ் செய்தனர்; செய்யத் தகாத வேலைகளை யெல்லாம் செய்யும்படி ஏவி அவர்களை இழிவு படுத்தினர்; அநேகரைச் சிறையிலிட்டுப் பெரும்பாடு படுத்தினர்.

3. இப்படியாகவே, தேவர்களெல்லாம் சிவபெருமானை அடைக்கலமாய் அடைந்து, தங்கள் குறைகளைச் சொல்லிக் கொண்டனர். சிவபெருமான், தேவர்களைக் காக்க இரக்கங் கொண்டு ஆறு திருமுகங்கள் கொண்டார். அவருடைய ஆறு நெற்றிக் கண்களிலிருந்தும் ஆறு அக்நிப் பொறிகள் உண்டாயின.

4. அந்தப் பொறிகளைச் சிவபெருமான் கட்டளைப்படி வாயுதேவனும் அக்நிதேவனும் கையில் ஏந்திக்கொண்டு போய்க் கங்கையினருகே சரவணப் பொய்கையில் விட்ட னர். அந்தப் பொறிகள் ஆறும் ஆறு குழந்தைகளாயின. அப்பால் உமாதேவியார் அந்த ஆறு குழந்தைகளையும் சேர்த்தெடுத்தார். உடனே அந்த ஆறு குழந்தைகளும் ஆறு முகமும் பன்னிரண்டு கரமும் ஓர் உடலுமுடைய ஒரு குழந்தையாயின.

5. சிவபெருமான் அந்தக் குழந்தைக்கு ஸ்கந்தன் என்று பெயரிட்டார். ஸ்கந்தனுக்கு ஆறுமுகம் அமைந்த படியால் ஆறுமுகன் என்றும் ஷண்முகன் என்றும் பெய ருண்டாயது. சரவணப் பொய்கையிலே பிறந்தபடியால் அவர்க்குச் சரவணபவன் என்று ஒரு பெயருண்டாயிற்று.

6. சரவணபவனிடம் சிவபெருமான் ஒரு வேலாயுதம் கொடுத்துச் சூரபத்மன் முதலியவர்களை ஜயித்து வரும்படி

அனுப்பினர். ஷண்முகப்பெருமான், உடனே சூரபத்மன் முதலியவர்களோடு சண்டைக்குப் போனர்; வீரபாகு என்பவரைத் தூதனுப்பித் தேவர்களைச் சிறையிலிருந்து விடுவிக்கும்படி நியாயம் சொல்லிப் பார்த்தார். அவர்கள் சமாதானத்துக்கு வரவில்லை; சிவபெருமானுடைய திருக்குமாரரின் வல்லமையை அறியாமல் சண்டை செய்தனர்.

7. சண்டையில் முதலில் தாரகனும் சிங்கமுகனும் இறந்தனர். சூரபத்மன் மகா மாயாவி. ஆதலால் அவன் ஸ்கந்த ஸ்வாமியோடு பல பல வடிவமாக மாறி மாறி வந்து போர் செய்தான். முடிவில் ஒரு பெரிய மாமரமாக நின்றான். அதை ஸ்வாமி இரண்டு கூறுகப் பிளந்தார். உடனே ஒரு கூறு மயிலாயிற்று; ஒரு கூறு சேவலாயிற்று. இரண்டும் போருக்கு வந்தன. ஸ்வாமி மயிலைப் பிடித்து அடக்கி வாகனமாக்கிக்கொண்டார்; சேவலைப் பிடித்தடக்கிக் கொடியாக்கிக் கொண்டார்.

8. இப்படி அசுரர்களை அழித்து, ஸ்வாமி தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்தார். தேவர்கள், 'எளியாரை வலியாரடித்தால் வலியாரைத் தெய்வமடிக்கும்,' என்பது கண்டோம் என்று மகிழ்ந்தனர்; ஆறுமுகக் கடவுளைத் துதித்து வணங்கித் தத்தம் பதவியை அடைந்து சுகமாக வாழ்ந்தனர்.

—(ஸ்காந்தம்)

---

எளியாரை வலியாரடித்தால் வலியாரைத் தெய்வமடிக்கும்

## 2. ஸ்ரீராமனும் வாலியும்

1. வாலியென்பவன் மகா பலசாலியான ஒரு வானர வீரன். அவன் கிஷ்கிந்தை என்கிற பட்டணத்திலே வானரர்களுக்கு அரசனயிருந்தான். அவனுக்கு ஸுக்ரீவன் என்று ஒரு தம்பியிருந்தான். அவனும் பலசாலியான வானரன்.

2. இவர்களிருக்கும் இடத்திற்கு மாயாவி என்கிற ஓர் அசுரன் வந்தான். அவன் வாலியை எதிர்த்துச் சண்டை செய்தபடியே நெடுந்தூரம் ஓடி ஒரு சுரங்கத்திலே புகுந்தான். வாலியும் அதனுள்ளே புகுந்தான். வாலி அதனுள் புகும்போது ஸுக்ரீவனை அந்தச் சுரங்க வாயிலின் அருகே ஜாக்கிரதையாய்க் காத்துக்கொண் டிருக்கும்படி சொல்லிவிட்டுப் போனான். ஸுக்ரீவன் ஒரு வருஷகாலம் வரையில் அந்த வாயிலிலேயே காத்துக்கொண்டிருந்தான். பிறகு அந்தச் சுரங்கத்திலிருந்து இரத்தம் பெருகி வெளியே வந்தது. அதனால் வாலி இறந்து விட்டதாய் எண்ணி, ஸுக்ரீவன் மிகவும் துக்கப்பட்டான்; மாயாவி வருவா னென்று பயந்து அந்தச் சுரங்க வாயிலைப் பாறைகொண்டு மூடிவிட்டுக் கிஷ்கிந்தைக்குப் போனான்.

3. கிஷ்கிந்தாபுரி ஜனங்கள் ஸுக்ரீவனுக்குப் பட்டம் கட்டிவைத்தனர். ஸுக்ரீவன் நீதியாய் அரசு செய்தான். மகா பலவானான தன் அண்ணன் வாலி இறந்ததைப்பற்றி அடிக்கடி எண்ணி, அவன் வருந்தினான். அப்படியிருக்கை யில் வெகு நாட்களுக்குப் பின் வாலி சுரங்கவாயிலைத் திறந்து கொண்டு கிஷ்கிந்தைக்கு வந்தான்; ஸுக்ரீவன் அரசு செய்வதைப் பார்த்து, தன்னைத் தன் தம்பி வஞ்சித்து விட்ட தாகத் தீர்மானித்தான்; உடனே அவனை அடித்து ஊரை விட்டுத் துரத்திவிட்டுத் தான் அரசனானான்.

4. ஸுக்ரீவன் உண்மையில் நடந்ததைச் சொல்லி வணங்கிக் கேட்டுக்கொண்டும் வாலி, அவனை நம்பவில்லை. ஆகையினால் ஸுக்ரீவன் ரிசியமூகம் என்கிற பர்வதத்துக்கு ஓடிப்போய் வஸித்தான். அங்கே அவனுக்கும் தசரத மகாராஜாவின் புத்திரனாகிய ஸ்ரீராமமூர்த்திக்கும் சிநேக முண்டாயிற்று. ஸுக்ரீவன் ஸ்ரீராமமூர்த்தியினிடம் தன்

குறைகளைச் சொல்லி, "காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டிக்கொண்டான்.

5 ஸ்ரீராமமூர்த்தி மகா விஷ்ணுவினுடைய அவதார மல்லவா? அவர் துஷ்டர்களை அழிக்கவும் நல்லவர்களைக் காக்கவும் அவதரித்தவர்; ஆகையினால் ஸுக்ரீவனைக் காப்ப தாக வாக்களித்தார். அவருடைய பலத்தால் ஸுக்ரீவன் வாலியோடு சண்டைக்குப் போனான். வாலிக்கும் அவனுக் கும் பெரிய சண்டை நடந்தது. அப்போது ஸ்ரீராமமூர்த்தி ஒரு பாணம்விட்டு வாலியைக் கொன்று ஸுக்ரீவனைக் கிஷ் கிந்தாபுரிக்கு அரசனாக்கினார். —(இராமாயணம்.)

---

தெய்வபலமே பலம்

## கம்ஸவதம்

1. கம்ஸன் என்று ஒரு யாதவ அரசனிருந்தான். அவன் மகா கொடியவனாய் எல்லாருக்கும் பொல்லாதவனா யிருந்தான். அவன் ஒரு சமயம் தன் தந்தையைச் சிறை செய்துவிட்டுத் தானே அரசனாய் விட்டான். அவனுக்கு அவனுடைய தங்கை தேவகி என்பவளுடைய எட்டாவது பிள்ளையால் மரணம் என்று அசரீரி கூறியது.

2. கம்ஸன் அதற்காகத் தங்கையையும் அவள் புரு ஷன் வசுதேவரையும் சிறையில் அடைத்துவைத்தான்; பின் அவர்களுக்குப் பிறந்த ஆறு குழந்தைகளையும் கொன்றான். ஏழாவது குழந்தையைப் பகவான் வசுதேவருடைய இன் னொரு மனைவியின் கர்ப்பத்தில் மாற்றிவிட்டார். அதனால் அதைக் கம்ஸனாலே கொல்ல முடியவில்லை.

3. கம்ஸன் கொடியவனாதலால் அவனைக் கொல்ல மகா விஷ்ணுவே தேவகிக்கு எட்டாவது பிள்ளையாகப் பிறந்தார். அவர் கோகுலாஷ்டமியன்று இரவில் சந்திரோதய காலத்

தில் அவதரித்தார். பகவான் அன்றிரவு கம்ஸனையும் சிறைச் சாலைக் காவலாளிகளையும் அயர்ந்து நித்திரை போகும்படி செய்துவிட்டார்.

4. கம்ஸன் வருவானே என்ன செய்வதென்று வசுதேவர் பயந்து பகவானைத் துதித்தார். சிறைச்சாலைக் கதவு தானே திறந்துகொண்டது. வசுதேவர் அந்தக் குழந்தையை எடுத்துக்கொண்டு கோகுலத்திற்குப் போனார். கோகுலமென்பது வடமதுரைக்குப் பக்கத்திலிருந்த ஓர் இடைச்சேரி. அங்கே வசுதேவருடைய நண்பர் நந்தகோபர் என்கிற இடையர்கோமான் வசித்து வந்தார். அவர் மனைவி யசோதையினிடம் வசுதேவர் அக்குழந்தையைவிட்டுவிட்டு, யசோதைக்கு அப்பொழுது பிறந்திருந்த குழந்தையை எடுத்துக்கொண்டு, மதுரைக்கு வந்து சிறைச்சாலைக்குள் போய்விட்டார். பிறகு சிறைச்சாலைக் கதவு எப்போதும் போல் மூடிக்கொண்டது.

5. கம்ஸனும் விழித்துக் கொண்டான். காவலாளரும் விழித்துக் கொண்டனர். கம்ஸன் சிறைச்சாலைக்கு வந்தான். வசுதேவர் அவனிடம் தாம் கோகுலத்திலிருந்து கொண்டு வந்த குழந்தையைத் தந்தார். அது பெண்குழந்தை. அவன் அதை வாங்கி ஒரு பாறையில் அடிக்கப் போனான். அது அவன் கையிலிருந்து மேலே கிளம்பிக் காளியாகமாறி, "உன்னைக் கொல்லுகிறவன் வேறிடத்திலிருக்கிறான். அவனைத் தேடிக் கொல்" என்று சொல்லி மறைந்துவிட்டது.

6. கம்ஸன் பிறகு அந்தக் குழந்தையைக் கண்டுபிடித்துக் கொல்ல, பல படியாக முயற்சி செய்தான். அது எப்படி முடியும்? பகவானை வெல்ல இவனாலாகுமா? யசோதையினிடம் வளர்ந்த பகவானுக்குக் கிருஷ்ணனென்று பெயரிட்டனர். வசுதேவருடைய மற்றொரு மனைவி ரோகிணி

என்பவளும் கோகுலத்திலேதான் இருந்தாள். அவளிடம் பகவான் தேவகியின் ஏழாவது குழந்தையைச் சேர்ப்பித்தா ரல்லவா? அது பலராமன் என்னும் பெயரோடு வளர்ந்து வந்தது.

7. கம்ஸனை வதஞ்செய்ய வந்தவர்களென்று அவர் களைப் பற்றிக் கோகுலத்தில் ஒருவர்க்கும் ஒன்றும் தெரி யாது. ஆனால் குழந்தைகளின் பேச்சாலும் அவர்கள் செய் யும் லீலைகளாலும் அவர்களைத் தெய்வப் பிறவிகள் என்று எல்லாரும் எண்ணியிருந்தனர். கிருஷ்ணனும் பலராமனும் இடைப் பிள்ளைகளோடு இடைப்பிள்ளைகளாய்க் கூடியிருந்து மாடு மேய்ப்பார்கள்.

8. கம்ஸனுடைய சபைக்கு ஒருநாள் நாரதர் வந்தார். அவர், கிருஷ்ணனையும் பலராமனையும் இன்னாரென்று கம்ஸ னுக்குத் தெரிவித்துவிட்டுப் போய்விட்டார். கம்ஸன் அவர் களைக் கொல்வதற்காகப் பல அசுரர்களை ஏவினான். அசுரர் கள் கழுதை வடிவமாகவும் குதிரை வடிவமாகவும் மாட்டின் வடிவமாகவும் வந்தனர். அவர்களை யெல்லாம் பலராம கிருஷ்ணர்கள் விளையாட்டாகக் கொன்று விட்டனர்.

9. கம்ஸன் பலராம கிருஷ்ணர்களுடைய சாமர்த்தி யத்தை அறிந்தபின், அவர்களைத் தந்திரமாய்க் கொல்லத் தன் அரண்மனைக்கு வரவழைத்தான்; அவர்கள் வரும் போதே வாயிற்படியில் ஒரு பெரியயானையை வைத்திருந்து, அவர்கள்மீது ஏவும்படி யானைப்பாகனுக்கு உத்தரவிட்டிருந் தான். அவன் அப்படியே செய்தான். கிருஷ்ணன் அந்த யானையையும் பாகனையும் அந்த க்ஷணமே ஒரு சிரமமு மில்லாமல் கொன்று உள்ளே சென்றான்.

10. கம்ஸன் அரண்மனை முன்வாசலில் இரண்டு மல்லர் களை வைத்திருந்தான். அவர்கள் பலராம கிருஷ்ணர்களை

மல்யுத்தத்திற்கு அழைத்தார்கள். பலராம கிருஷ்ணர்கள், அந்த மல்லர்களோடு மல்யுத்தம் செய்து, அவர்களை எல்லாரும் ஆச்சரியமடையக் கொன்று கைகொட்டினர்; பிறகு இந்த வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்ற கம்ஸன்மேல், கிருஷ்ணன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, அவனைக் கீழே தள்ளிக் குத்திக் குமுக்கிக் கொன்று வீர கர்ச்சனை கர்ச்சித்தான்.

11. கம்ஸன் இப்படி மடியவே எல்லாரும், "பகவானுக்கு முன்பு இவனுடைய பலம் செல்லுமா? தெய்வபலமே பலம்! அவனன்றி ஓரணுவும் அசைவதுண்டா? கம்ஸன் மூடாத்மா! ஆனதினால் பகவானை அவன் எதிர்த்து நாசமானான்" என்று பேசிக் கம்ஸனை இகழ்ந்தனர்; பகவானைத் துதித்தனர். பகவான் பிறகு வசுதேவரையும் தேவகியையும் சிறையிலிருந்து விடுவித்தார். அவர்கள் சுகமடைந்தனர். பகவான் பிறகு உலகத்தில் அநேக லீலைகளைச் செய்தார்.

—(பாகவதம்)

---

பெற்றோர் பெருமை

அல்லது

புத்திரர்களின் கடமை

தந்தைசொல் மிக்க மந்திரமில்லை

## 1. பரசுராமர்

1. பரசுராமர் ஜமதக்கினி என்னும் முனிவருடைய கடைசிப் பிள்ளை. ஜமதக்கினி முனிவர்க்கு நான்கு பிள்ளைகள். நால்வரும் வேத சாஸ்திரங்களை நன்றாய் ஓதி உணர்ந்த விவேகிகள். முனிவர் வழக்கம்போல் ஒருநாள் ஹோமம் செய்யத் தொடங்கினர். முனிவருடைய மனைவி ஹோமத்

திற்குத் தீர்த்தம் கொண்டுவர ஆற்றுக்குப் போனாள். ஆற்றிலே கந்தர்வர்கள் விளையாடிக்கொண் டிருந்தனர். அந்த வேடிக்கையைப் பார்த்துக்கொண்டு அவள் அங்கே நின்றுவிட்டாள். அதனால் ஹோமவேளை தவறியது. முனிவர் தம் மனைவியின் மீது கோபங்கொண்டார்.

2. பரசுராமர் முதலிய நால்வரும் தந்தையின் கோபங் கண்டு என்ன செய்வாரோ என்று பயந்தனர். முனிவர் அவர்களைப் பார்த்து, "உங்கள் தாயார் வந்ததும் அவளை வாளால் வெட்டிக் கொன்று விடுங்கள். அவள் செய்த குற்றம் மன்னித்தற்கு அரியது" என்று கட்டளையிட்டார். அதைக் கேட்டதும் பரசுராமர் தமையன்மார் முகத்தைப் பார்த்தார். அவர்கள் மூவரும் முனிவரை வணங்கி, "பெற்று வளர்த்த தாயைக் கொல்லத் துணியும் பிள்ளைகளுண்டா ? அது தருமமா ? நாங்கள் அந்தக் கொடுங்கொலை செய்யத் துணியோம்" என்றனர். முனிவர் கோபங்கொண்டு பரசுராமரைப் பார்த்தார்.

3. பரசுராமர், "தந்தை எல்லாமுணர்ந்த பெரியவர். நியாயமில்லாமல் பாப காரியத்தைச் செய்ய அவர் கட்டளையிடுவாரா ? இடமாட்டார். தவிர, 'தந்தைசொல் மிக்க மந்திரமில்லை' என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்" என்றெண்ணித் "தமது கட்டளையின்படி நடக்கக் காத்திருக்கிறேன்" என்றார்.

4. "பரசுராம, ஹோமம் நிறைவேறுமற் செய்த உன் தாயையும் என் கட்டளையை மறுத்த உன் தமையன்மார்களையும் இப்பொழுது நீ வெட்டிவிட வேண்டும். என்ன சொல்லுகிறாய் ?" என்று முனிவர் கேட்டார். பரசுராமர் "இதோ காத்துக் கொண்டிருக்கிறேன்" என்று வாளைக் கையிலெடுத்தார். இதற்குள் தாயாரும் தீர்த்த மெடுத்துக்கொண்டு

வந்தாள். வந்ததும் அவள் தன் குற்றமுணர்ந்து தன் பிள்ளையின்முன் தலை குனிந்து நின்றாள். பாசுராமர் தமது தாயையும் தமையன்மார்களையும் வெட்டித் துண்டாக்கினார். எவரும் செய்தற்கரிய செய்கையல்லவா இது? இதனால் முனிவர் மகிழ்ந்து பரசுராமரைத் தழுவிக்கொண்டு, "உனக்கென்ன வரம் வேண்டும்? கேள்" என்றார்.

5. பரசுராமர் தந்தையைப் பணிந்து, "என் தாயாரையும் என் அண்ணன்மார்களையும் பிழைப்பிக்கவேண்டும். நான் செய்த இந்தச் செய்கையைப்பற்றி அவர்களுக்கு நினைப்பே இருப்பது கூடாது. நான்விரும்பும் வரங்கள் இவைகளேயாம்" என்றுசொன்னார். முனிவர், "அப்பா மகனே! உன்னிடம் எனக்கு என்றுமுண்டாகாத ஸந்தோஷமுண்டாயிருக்கிறது. சொன்ன சொற்கேளாத பிள்ளைகளும் பிள்ளைகளாவாரோ? பரசுராமா, நீ புத்திசாலி, நல்லவரமே கேட்டாய்! ஸந்தோஷம்! அப்படியே தந்தேன்!" என்றார்.

6. பரசுராமரின் தாயாரும் தமையன்மார்களும் உடனே உயிர்பெற்றெழுந்தனர். பரசுராமர் அவர்களை வணங்கி அவர்களிடம் ஆசீர்வாதம் பெற்றார். —(பாரதம்)

---

தந்தை சொன்மிக்க மந்திரமில்லை.

## 2. ஸ்ரீராமச்சந்திரன்.

1. ஸ்ரீராமச்சந்திரன் தசரத சக்கரவர்த்தியினுடைய மூத்தபிள்ளை. தசரதனுக்குக் கௌஸல்யை, கைகேயி, ஸுமித்திரை என்கிற மூன்று மனைவிமார்கள். அவர்களுள் கௌஸல்யையின் புத்திரன் ராமச்சந்திரன். கைகேயிக்கும் பரதன் என்று ஒரு புத்திரனிருந்தான். ஸுமித்திரைக்கும் லக்ஷ்மணன் சத்ருக்னன் என்று இரண்டு பிள்ளைகள். பரதன் ஸ்ரீராமச்சந்திரனுக்கு நேர் இளையவன்.

2. ஸ்ரீ ராமச்சந்திரன் இளவரசுப் பட்டங் கட்டத் தக்க வயதை அடைந்தான். அவனுக்குவிவாகமும் ஆயிற்று. அவனிடம் சகல நல்ல குணங்களும் பொருந்தியிருந்தன. ஆகையினால் தசாதன் தன் குல வழக்கப்படி அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்ட யத்தனித்தான். இந்தச்செய்தி கைகேயியிக்குத் தெரிந்தது. அவள் தன் மகன் பரதனுக்குப் பட்டமில்லாமற் போகிறதே என்று கோபங் கொண்டாள்; அதன்மேல் ஓர் அறையிலே போய் அலங்கோலமாய்ப் படுத்துக்கொண்டாள்.

3. ஸ்ரீராமச்சந்திரன் பிள்ளைகள் நால்வரிலும் மூத்தவன்; ஆகையினால் அவனுக்குப் பட்டம் கிடைக்கிறது—என்று கைகேயி அறிவாள். அறிந்தவளாயிருந்தும் மந்தரையென்கிற தன்னுடைய தாதியின் பேச்சைக் கேட்டு அவள் வீணே கோபங்கொண்டாள். தசாதன் அவளைப் பார்க்கவந்தான். அவள் அலங்கோலமாய்ப் படுத்திருப்பதைக் கண்டு, "ஏன் இப்படி படுத்திருக்கிறாய்? உனக்கு என்ன வேண்டும்? கேள் தருகிறேன்" என்றான். அவள் பதிற்பேசவில்லை. தசாதன், "ஏன் பேசாமலிருக்கிறாய்? நீ இப்படி யிருப்பதனால் என் மனம் வருந்துகிறது. உனக்கு வேண்டியதைக் கேள். ஸத்தியமாகத் தருகிறேன்" என்றான்.

4. "ஸ்ரீராமச்சந்திரனுக்குப் பட்டங்கட்டப் போகிறீர்களல்லவா? அதை மாற்றி அவனைப் பதினான்கு வருஷம் காட்டுக்கு அனுப்பவேண்டும். பரதனுக்குப் பட்டங்கட்ட வேண்டும். இந்த இரண்டு வரங்களும் எனக்குத் தரவேண்டும்"—என்று கைகேயி சிறிதும் அஞ்சாமல் கேட்டாள். தசரதன் கேட்டதைத் தருகிறேன் என்று ஸத்தியம் செய்திருக்கிறானல்லவா? அதனால் அவன் அதை மறுக்க முடியாமல், "ஸ்ரீராமனையா காட்டுக்கு அனுப்பவேண்டு மென்

றிருய் ? ஐயோ!" என்று சொல்லி அப்படியே மூர்ச்சையானுன்.

5. ஸ்ரீராமச்சந்திரா! ஸ்ரீராமச்சந்திரா!—என்று அழைத்துக்கொண்டே அரசன் சற்று நேரத்திற்கெல்லாம் எழுந்தான்; கைகேயியைப் பார்த்து, "என் கண்மணியாகிய ஸ்ரீராமச்சந்திரனைக் காட்டுக்கனுப்பாதே! வேறு எதை வேண்டுமானுலும் கேள், தருகிறேன்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். கைகேயி, 'நாதா, ஸத்தியம் செய்துவிட்டு ஏன் அந்தப்படி நடக்க மயங்குகிறீர் ?" என்று கேட்டாள். தசரதன் மறுக்க முடியாதவனுய் உடனே ஸ்ரீராமனை வரவழைத்தான்.

6. ஸ்ரீராமச்சந்திரன் வந்து தந்தையையும் சிற்றன்னையையும் வலம் வந்து வணங்கி நின்றுன். கைகேயி, "ராமா, நீ பதினுன்கு வருஷம் வனவாசம் செய்தல் வேண்டும். இது உன் தந்தையினுடைய கட்டளை. பரதனுக்குப் பட்டம் கட்ட நிச்சயித்து விட்டார்கள்" என்றுள்.

7. ஸ்ரீராமச்சந்திரன், "அம்மா, ஸந்தோஷம்! இதோ அந்தக் கட்டளையைச் சிரங்குனிந்து ஏற்றுக்கொண்டேன். தந்தையினுடைய கட்டளையென்று சொல்லவேண்டுமா? தம்முடைய கட்டளையானுல்தானென்ன? மறுப்பேனு? அம்மா நீங்கள் தீயிலே குதி என்றுலும் நான் குதிப்பேன்! கடலிலே விழு என்றுலும் நான் விழுவேன்! விஷத்தைக் குடி என்றுலும் நான் குடிப்பேன்" என்று சொல்லித் தந்தையையும் தாயையும் வலம் வந்து பணிந்து, காட்டிற்குப் புறப்பட்டான்.

8. ஸ்ரீராமச்சந்திரனை, மந்திரியும் குருவும் எவ்வளவோ நியாயம் எடுத்துச் சொல்லி, காட்டிற்குப் போகவேண்டாமென்று தடுத்தனர். அவன் "எனக்குப் பிதிர்வாக்கிய பரிபாலனந்தான் பெரிது! தந்தை சொல் மிக்க மந்திரமில்லையல்லவா ?" என்று சொல்லிக் காட்டிற்கே புறப்பட்டான்.

9. ஸ்ரீராமச்சந்திரன் காட்டிற்குப் போனான் என்னும் செய்தி கேட்டதும் தசரதன், "ஆ ராமா! காட்டிற்குப் போனாயா! ராமா!" என்றலறிக்கொண்டே இறந்துபோனான். அவனுக்குப் பிள்ளைகளிடத்தில் அவ்வளவு அன்பிருந்தது. ராமன் காட்டில் பதினான்கு வருஷத்தையும் சுகமாகக் கழித்தான்; பிறகு நகரத்துக்குவந்து பட்டங் கட்டிக்கொண்டான். இப்படிப் பிதிர்வாக்கிய பரிபாலனஞ் செய்த ஸ்ரீராமச்சந்திரனை எல்லோரும் புகழ்ந்து வாழ்த்தினர்.

—(இராமாயணம்)

---

தந்தைக்கு இதந் தேடுவதே தனயனின் கடமை

## 1. தருமாங்கதன்

1. ருக்மாங்கதன் என்று ஓர் அரசனிருந்தான். அவன் நீதிமானாகவும் சிறந்த தெய்வபக்தி யுடையவனாகவும் விளங்கினான். பெரியோர்கள் அவனை ஏகாதசி விரதம் அனுஷ்டித்துவர உத்தரவிட்டனர். அப்படியே அவன் அந்த விரதத்தை அனுஷ்டித்து வந்தான்; தன்னைப் போலவே தன் குடிகளும் அந்த விரதம் அனுஷ்டித்து வர அவன் திட்டம் செய்திருந்தான்.

2. ருக்மாங்கதனுக்குத் தருமாங்கதன் என்று ஒரு மகன். அவன் நல்ல புத்திசாலி; ஒப்புயர்வற்ற வீரன்; தருமநெறி தவறாதவன். ருக்மாங்கதன் தன் அன்பு முழுவதையும் அவனிடமே வைத்திருந்தான். தருமாங்கதனுடைய தாயைத் தவிர வேறொரு தெய்வப் பெண்ணையும் அவன் மணந்திருந்தான். அவள் பெயர் மோகனாங்கி.

3. ருக்மாங்கதன் ஏகாதசியன்று ஒருவருடனும் பேசுவதில்லை; ஒரு துளி ஜலங்கூட வாயில் விடுவதில்லை; சதா தெய்வத் தியானம் செய்துகொண்டிருந்து, மறுநாள் துவா

தசியன்று பூஜை முடிந்தபின் போஜனம் செய்வான். ருக்மாங்கதன் நெடுங்காலமாக இதை அனுஷ்டித்து வந்தான். அப்பொழுது ஓர் ஏகாதசியன்று மோகனாங்கி, தன்னிடம் வந்து மற்ற தினங்களைப்போல் ஸந்தோஷமாகப் பேசிக் கொண்டிருக்கும்படி அரசனை அழைத்தாள். வேந்தன் காரணம் எடுத்துச் சொல்லி மறுத்தான். அவளை மணந்து கொள்ளும்போது அவள் அரசனை ஒரு வரம் கேட்டாள். அரசன் தருவதாக வாக்களித்திருந்தான். அவள் தான் அதைத் தனக்கு வேண்டும்போது கேட்டு வாங்கிக்கொள்ளுவதாகச் சொல்லியிருந்தாள்.

4. ருக்மாங்கதன் இப்பொழுது தன் விருப்பத்திற்கு இணங்காததினால், அவள் அந்த வரத்தைக் கேட்டாள். அரசன் "அது என்ன ; சொல் ; தருகிறேன்" என்றான். அவள், "நீர் இன்று என் இஷ்டப்படி என்னிடமே ஸந்தோஷமாகப் பேசிக்கொண் டிருக்கவேண்டும்" என்றாள். ருக்மாங்கதன், "அதைத் தவிர வேறு எதை வேண்டுமானாலும் கேள்; தருகிறேன்" என்றான். "அப்படிச் செய்ய இஷ்டமில்லாவிட்டால், உம்முடைய மைந்தன் தருமாங்கதனுடைய தலையை அவனுடைய தாயாரின் முன்பு வெட்டி எனக்குக் கொடும்" என்று அவள் கேட்டாள்.

5. ருக்மாங்கதன் இதைக் கேட்டதும், "அந்தோ, இது என்ன! இவள் காளியோ? பிள்ளை பலி கேட்கிறாளே" என்றெண்ணித் துணுக்குற்றான் ; "இவளை மணந்தது நமது மதியீனம்! இவள் மலடியானதால் இரக்கமில்லாமல் இப்படிக் கேட்கிறாள்! எப்படி என் அருமை மகனை வெட்டுவேன்? அவன் தான் எப்படி இதைக்கேட்டுத் தன் தலையைக் கொடுக்கத் துணிவான்? என் மனைவி தான் இதற்கு எப்படித் துணிவாள்? என்ன காலமிது? ஐயோ!

என் விரதத்தைக் கெடுக்கவந்த பிசாசோ இவள் ?''—என்று எண்ணி மூர்ச்சை அடைந்தான்.

6. தருமாங்கதன் அப்பொழுது அங்கே வந்தான் ; தந்தை மூர்ச்சித்துக் கிடப்பதையும் மோகனுங்கி கோபமா யிருப்பதையும் பார்த்து, “ஓடிச் சிற்றன்னையின் பாதத்திலே பணிந்து, “அம்மா, அடியேன் உமது புத்திரன், நானிருக்கும்போது உமக்கு என்ன குறை நேர்ந்தது ? நான் ஒரு பிழையும் என் மனமறியச் செய்ததில்லையே ! என் அன்னையாரும் செய்ததில்லையே ! அப்படியிருக்கத் தாம் ஒரு மாதிரியா யிருப்பதேன் ? தந்தை மூர்ச்சை போய்க் கிடப்பதேன் ?'' என்று கேட்டான்.

7. “தருமாங்கதா, நீங்கள் ஒருவரும் ஒரு பிழையும் எனக்குச் செய்யவில்லை. உன் தந்தை எனக்கு ஒரு வரம் தந்தார். அதை நிறைவேற்றித் தரும்படி நான் அவரைக் கேட்டேன். அதற்கு அவர் பின்வாங்குகிருர். தருகிறேன் என்று சொன்னபின் அந்தப்படி செய்யப் பின் வாங்கலாமா? அது ஸந்தியங் தவறுவதாகாதா ?'' என்று மோகனுங்கி கேட்டாள்.

8. தருமாங்கதன், “அம்மா, தந்தை ஸத்தியங் தவற மாட்டார், காரணமிருக்கவேண்டும். நான் அவரிடம் போய்க் கேட்டு உமது கவலையை மாற்றுகிறேன்'' என்ருன்; உடனே தந்தையிடம் போய் அவனை இருகரங்கொண்டு தூக்கியெடுத்தான். ருக்மாங்கதனும் கண் விழித்து மகனுடைய முகத்தைப் பார்த்தான். அவன் கண்களில் நீர் ததும்பியது. அதைப் பார்த்த தருமாங்கதன் “பிதாவே, என் இந்தத் துக்கம் ? புத்திரன் தருமாங்கதன் இருக்கும்போது கலக்கமேன் ?'' என்று கேட்டான்.

9. ருக்மாங்கதன், "அப்பா, நான் என்ன சொல்வேன்? உன்சிற்றன்னைக்கு நான் ஒருவரம் தந்தேன். அவள் அதை இன்று நிறைவேற்றும்படி பிடிவாதம் பிடிக்கிறாள். அவள் இஷ்டப்படி நடப்பதானால் விரதபங்கம் நேரிடுகிறது. நெடுங்காலமாக அநுஷ்டித்து வரும் விரதத்தைக் கெடுத்துக் கொள்ள என் மனந் துணியவில்லை. அதனால் நான் தயங்குகிறேன். அவள், 'உமது வாக்கையும் உமது விரதத்தையும் நீர் காப்பது உண்மையானால், உமதுமைந்தன் தருமாங்கதன் தலையை வெட்டி எனக்குக் கொடும்' என்றாள். அதுவும் உன் அன்னையின் முன்பு வெட்டித் தரவேண்டுமாம்? அப்பனே, என்ன சங்கடமிது பார்த்தாயா?" என்று சொல்லி மகனைத் தழுவிக்கொண்டு அழுதான்.

10. தருமாங்கதன், "பிதாவே, இதற்கு இப்படி விசனப் படுவானேன்? மைந்தன் நான் போனால் போகிறேன்; விரதத்தையும் சொன்ன வாக்கையும் காப்பதுதான் பெரிது! சரீரம் நிலையற்றதென்பதும், "ஆறிலேயும் சாவு, நூறிலேயும் சாவு, என்பதும் தாம் அறிந்தவைதானே? துக்கப்படவேண்டாம். இதோ சிற்றன்னையாருடைய எண்ணத்தை முடிப்போம். நான், என் அன்னையாரிடம் சென்று அவரை இவ்விடம் அழைத்து வருகிறேன். அவர்கள் கற்புக்கு அரசியாரல்லவா? அவர் தமது கணவனுக்கு வந்த சங்கடத்தை நீக்கப் பின்வாங்கார்; மகிழ்ந்து ஒப்புக்கொள்வார். என்னை இழப்பதைப் பற்றிச் சிந்தியார்" என்று சொல்லித் தேற்றித் தன் தாயாரிடம் போய்ப் பணிந்தான்.

11. தருமாங்கதன் போய்ப் பணிந்ததும் அவள் அவனைத் தழுவி முத்தமிட்டு, "நீ நீடூழி வாழக்கடவாய்!" என்று ஆசீர்வாதம் செய்தாள். தருமாங்கதன், தன் தந்தைக்கு நேர்ந்த சங்கடத்தைத் தெரிவித்து, "அம்மா, நான்

என் தலையைத் தந்து அவருடைய சங்கடத்தைத் தீர்க்கத் துணிந்து விட்டேன். தமது சம்மதமே வேண்டும்" என்ருன். தாயார் இதைக் கேட்டதும், "ஆ! மகனே, உன் தலை விதி இப்படியா முடிந்தது?" என்று கீழே விழுந்து மூர்ச்சையானுள். தருமாங்கதன் அன்னையைத் தூக்கியெடுத்து மூர்ச்சை தெளிவித்தான்; "அம்மா, பதிவிரதைகளின் கடமையைக் கவனியுங்கள். கணவனுக்கு வந்த சங்கடத்தைத் தீர்ப்பதன் பொருட்டு அவர்கள் எதை இழக்கத்தான் துணியமாட்டார்கள்? நான் போனுலென்ன? தருமத்தைக் கவனியுங்கள்! தைரியம் கொள்ளுங்கள்! எல்லாம் ஈசன் செயல் என்று துணியுங்கள்" என்ருன்.

12. தருமாங்கதன் தாய், உத்தமகுல மாது. ஆதலால் தன் கணவனுக்கு வந்த சங்கடத்தைத் தீர்ப்பதே தன் கடமையென்று அவள்தெரிந்துகொண்டாள்; உடனே "தருமாங்கதா, வா போவோம்! உன் தந்தையைச் சங்கடத்திலிருந்து விலக்குவோம்!" என்று துணிந்து அழைத்தாள். தருமாங்கதன், "அம்மா வந்தனம்! இப்பொழுதுதான் நான் தங்களைத் தருமாங்கதனுடைய தாய் என்று கண்டேன்! ருக்மாங்கத பூபதியின் மனைவியார் என்று துணிந்தேன்!" என்ருன்.

13. தருமாங்கதனுடைய இந்தப் பேச்சைக் கேட்டுத் தாயார் மனமுருகினுள். பிறகு இருவரும் ஸந்தோஷமாக அரசனிடம்போய் அடிபணிந்து நின்றனர். அரசன் அவர்களுடைய மனத்துணிவை அறிந்து தானும் துணிந்தான்; அவர்களை மோகனுங்கியின் முன் அழைத்துப்போய், மைந்தனை வெட்டுவதற்குக் கையில் கத்தியை எடுத்து ஓங்கினுன். மோகனுங்கி எழுந்து தடுத்தாள். தருமாங்கதன் தந்தையைப் பார்த்து "என்னுடைய மனம் குளிர்ந்திருக்

கிறது. என்னுடைய அன்பைக் காட்டச் சமயம் நேர்ந்த தல்லவா? என் கடமையைச் செலுத்தக் காலம் வந்த தல்லவா? தயங்காமல் சிற்றன்னையாரின் விருப்பத்தை நிறைவேற்றும்" என்றான்.

14. ருக்மாங்கதன், ஸ்ரீஹரி! ஸ்ரீஹரி! என்று பகவானுடைய பேரைச் சொல்லி மகனை வெட்டினான். அந்த வெட்டுத் தருமாங்கதனுடைய கழுத்தில் பூமாலையாக விழுந்தது! ருக்மாங்கதன் மறுபடியும் வெட்டக் கையை ஓங்கினான். பகவான், அசரீரியாய், "வேந்தே, நில்லு! உன் விரத உறுதியைக் கண்டு, மகிழ்ந்தேன்! உன் புத்திரன் தன்கடமை வழியிலே நின்றான்! உன் மனைவியும் அவ்வாறே செய்தாள்! நீங்கள் புண்யம் பெற்றீர்கள்! உங்களுக்காக விமானம் வந்திருக்கிறது! ஏறிக்கொள்ளுங்கள்! பரமபதத்திற்கு வாருங்கள்! மோகனாங்கி உன் விரதத்தைப் பரிசோதிக்கவந்த தேவமாது. அதனாலேதான் அவள் அப்படிச் செய்தாள். அவளும் குற்றமற்றவள்" என்றார். உடனே விமானம் தோன்றியது. ருக்மாங்கதன் முதல் மூவரும் அதிலேறிச் சென்றனர். மோகனாங்கியும் தேவலோகம் சென்றாள்.

---

தந்தைக்கு இதந்தேடுவதே தனயன் கடமை

## 2. பீஷ்மர்

1. சந்தனு என்று ஓர் அரசனிருந்தான். அவனுக்குக் கங்கையென்று ஒரு மனைவியிருந்தாள்; அவளுக்குக் காங்கேயன் என்று ஒரு மகன். காங்கேயன் மகா பலவானாகவும் சிறந்த புத்திசாலியாகவும் விளங்கினான். சந்தனு அவனிடம் தன் அன்பெல்லாம் வைத்திருந்தான். காங்கேயன் நல்ல நடவடிக்கை உடையவன். ஆகையினால் அவனிடம் குடிகளும் அன்புடையவர்களாய் இருந்தனர்.

2. சந்தனு ஸத்தியவதி என்கிற ஒரு பெண்ணை மணந்துகொள்ள இஷ்டப்பட்டான். அந்தப் பெண்ணின் தந்தையிடம் அவன் தானே நேரிலே போய்ப் பெண் கேட்டான். பெண்ணின் தந்தை, "மகாராஜாவே, என் பெண்ணுக்குப் பிறக்கும் பிள்ளைக்குப் பட்டங் கட்டுவதானால், நான் பெண் தருகிறேன்; இது என்னுடைய விருப்பம். நான் இப்படிக் கேட்பதுபற்றி என்னை மன்னிக்க வேண்டும்" என்று கேட்டான்.

3. சந்தனு, "நீ கேட்டது நியாயந்தான். தன் பெண்ணினுடைய சுகத்தைக் கவனிக்க வேண்டியது தந்தையின் கடமையல்லவா? ஆகையினால் நீ கேட்டாய். இருக்கட்டும்; நான் பிறகு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு அரண்மனைக்குப் போனான்.

4. சந்தனு என்ன செய்வான். தனக்குப் பிறகு தன் மகன் காங்கேயனுக்கல்லவா அவன் பட்டங்கட்ட வேண்டும்? குடிகளும் அவனைத்தானே விரும்புவார்கள்? அவன் சிறந்த புத்திமான்; மகா பலவான். இப்படி யிருக்கிற படியினால் சந்தனு என்ன செய்யலாம் இதற்கென்று நெடுந்தூரம் ஆலோசித்தான்; கடைசியில் "இது கூடாத காரியம், தகாதகாரியம்" என்று தீர்மானித்தான்; ஆனால் பெருங் கவலைகொண்டான்.

5. சந்தனு இப்படி மனக்கவலை கொண்டிருப்பது காங்கேயனுக்குத் தெரிந்தது. அவன், "ஓ என் தந்தை கவலை கொள்ள நான் பார்த்திருப்பேனா? அவர் மனக்கவலையை நீக்குவது பிள்ளையாகிய என் கடமையல்லவா? அப்படிச் செய்யாத பிள்ளை பிறந்தென்ன பிறவாமலிருந்தென்ன? எல்லாம் ஒன்றுதான்" என்று சொல்லிக்கொண்டு ஸத்தியவதியின் தந்தையிடம் போனான்.

6. சந்தனுமகாராஜனே வந்ததாக எண்ணி, அவன் காங்கேயனை மரியாதையாக வரவேற்றான். காங்கேயன் அவனைப் பார்த்து, "எனக்கு ராஜ்யம் வேண்டாம். உன் பெண்ணின் பிள்ளைக்கே அது சொந்தம். இது நிச்சயம். என் தந்தையின் இஷ்டத்தை நிறைவேற்ற வேண்டியது பிள்ளையாகிய என் கடமையல்லவா? ஆகையினால் நான் என் உரிமையை விட்டுவிடுகிறேன்" என்றான்.

7. சந்தனு மகாராஜா மகாநீதிமான்: பீஷ்மர் அவருடைய பிள்ளையல்லவா? ஆதலின் தம்முடைய கடமையைக் கவனிக்கிறார். இப்படிச் சொல்ல இந்த உலகில் எவன் துணிவான்?—என்று எண்ணிப் பெண்ணின் தந்தை ஸந்தோஷப்பட்டான்; காங்கேயனைப் பார்த்து, "ஐயா, நீர் உமக்குரிய அரசுரிமையை விட்டுவிட்டீர்! இனி வாக்குத் தவறமாட்டீர்! இதில் எனக்குத் திடமான நம்பிக்கையுண்டு. உமது பிள்ளை அல்லது பேரப்பிள்ளைகள் எப்படி இதை விட்டுவிடுவார்கள்?" என்று கேட்டான்.

8. காங்கேயன் என்ன செய்வான்? சற்றுநேரம் ஆலோசித்தான்; "தந்தையின் இஷ்டத்தை எப்பாடுபட்டாவது நிறைவேற்ற வேண்டும்; இல்லாவிட்டால் நான் நல்ல பிள்ளையாவதெப்படி?"—என்று எண்ணி, "நான் கல்யாணமே செய்துகொள்வதில்லை! என் ஆயுள் உள்ளவரையில் நான் பிரமசாரியாகவே இருப்பேன்! இது ஸத்தியம்! ஸத்தியம்!" என்று பிரதிக்ஞை செய்தான்.

9. காங்கேயனுடைய இந்தப் பிரதிக்ஞையைக் கேட்ட எல்லாரும் "காங்கேயன் மகாதீரன்! வீரன்!!" என்று புகழ்ந்து ஆச்சரியப்பட்டனர். சந்தனு "எவன் செய்வான் இப்படிப்பட்ட பிரதிக்ஞை? யாராலாகும்? இவனைப் பிள்ளையாகப் பெற்ற என் புண்ணியமே புண்ணியம்! இவன் புகழ்

உலகம் உள்ளவரையில் அழியாது. இவனுக்கு நான் என்ன செய்யப்போகிறேன்'' என்று எண்ணி, மகனிடம் போய் அவனைத் தழுவிக்கொண்டான்; "உன்னைப்போல் ஒரு பிள்ளை உலகத்தில் இருப்பானா? இனியாவது பிறப்பானா? உனக்கு எல்லா நன்மைகளுமுண்டாகும். நீ இஷ்டப்பட்ட போது உனக்கு மரணமுண்டாகும்! இது நான் உனக்குக் கொடுக்கும் வரம்'' என்று இந்த அரிய வார்த்தைப் பிள்ளைக்குத் தந்தான்.

10. காங்கேயன் தந்தையை வணங்கி, "நான் என்ன செய்துவிட்டேன். என் கடமையை நான் செய்தேன்'' என்று சொன்னான். காங்கேயன் ஒருவராலும் செய்ய முடியாத பிரதிக்ஞையைச் செய்தானல்லவா? அதனால் அவனுக்குப் பீஷ்மன் என்று பெயருண்டாயிற்று. பிறகு ஸத்தியவதியைச் சந்தனு மகாராஜன் மணந்துகொண்டான்.

—(பாரதம்)

---

தாயிற் சிறந்தோரு கோவிலில்லை

## பட்டினத்தார்

1. பட்டினத்துப் பிள்ளையார் காவிரிப்பூம் பட்டணத்திலே பிறந்தார். அவருடைய தந்தையின் பெயர் சிவநேசர்; தாயாரின் பெயர் ஞானகலை. இருவரும் உண்மையான சிவபக்தர்கள். இவர்கள் பட்டினத்துப் பிள்ளையார்க்குத் திருவெண்காடர் என்று பெயரிட்டனர். பின்னால் வயது வந்த பிறகே இவர் பட்டினத்துப் பிள்ளையாரென்று பேர் பெற்றுப் பிரபலமானார்.

2. பட்டினத்துப் பிள்ளையாருடைய ஐந்தாவது வயதிலேயே அவருடைய தந்தை இறந்தார். அவருடைய தாயார் நல்ல குணவதி; சிறந்த புத்திசாலி. ஆதலால் அந்த

உத்தமி தன் மகனை ஓர் உபாத்தியாயரிடம்விட்டு வாசிக்க வைத்தாள். "தந்தையோடு கல்வி போம்" என்று சொல்லு கிற சொல்லுக்கு அந்த உத்தமி இடம் வைத்துக்கொள்ள வில்லை. பட்டினத்துப் பிள்ளையார் படிக்கத் தொடங்கிக் கொஞ்சகாலத்திற்குள் தமிழில் நல்ல தேர்ச்சியடைந்தார்; எல்லாம் உணர்ந்த சிவபக்தரானார்; அடியாரிடத்தில் அன்புடையவரானார்; எல்லாரும் விரும்பும்படியாய் நல்ல நடவடிக்கைகளிலே மேன்மை பெற்றார்.

3. பட்டினத்துப் பிள்ளையார் தமது பதினாறுவது வயதில் சிவகலை என்று ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டார். அவருக்கு வெகுநாள் குழந்தை இல்லாமலிருந்தது. அதனால் அவர் கவலை கொண்டிருந்தார். சிவசர்மா என்னும் ஒரு சிவபக்தர் ஓர் ஆண்குழந்தையை அவரிடம் கொடுத்தார். பட்டினத்துப் பிள்ளையார் அதை வளர்த்து வந்தார். அவன் சிறுவயதிலேயே சகல சாஸ்திரங்களையும் படித்து ஸந்நியாஸியாய்விட்டான்.

4. பட்டினத்துப் பிள்ளையாரும் சிவபெருமானே துணை என்று எண்ணி ஸந்நியாஸியானார். ஸந்நியாஸி, தன் வீட்டில் பெண்டுபிள்ளைகளோடு இருத்தலாகாது; தன் பெண்டுபிள்ளை, தன் பணம், தன் வீடு என்கிற பற்றுவைத்தலாகாது. தன் இனத்தவர் இவர், அன்னியர் இவர் என்கிற பேதமும் கொள்வதாகாது; எல்லாரையும் ஒன்றாகவே எண்ணவேண்டும்; எப்போதும் கடவுளிடத்திலே அன்பு கொண்டு அவரைத் தியானம்செய்து வரவேண்டும்; கிடைத்ததைச் சாப்பிடவேண்டும்; தனக்கென்று ஒன்றையும் சேகரித்து வைத்துக்கொள்வதாகாது.

5. பட்டினத்துப் பிள்ளையாரும் இப்படிப்பட்ட ஒழுக்கங்களைக் கைக்கொண்டார்; ஒரு மடத்திலே போயிருந்து

எப்போதும் சிவபெருமானைத் தியானித்து வந்தார். அப்படியிருக்கையில் அவருடைய தாயார் இறந்துபோனாள். தாயிற் சிறந்தோரு கோவிலில்லை என்று சாஸ்திரத்திலே சொல்லியிருக்கிறது. ஆகையினால் பெற்ற தாயார் கடவுளுக்குச் சமானமாவர்.

6. பட்டினத்தார், கடவுளிடத்திலே அன்புகொண்டவரல்லவா? அந்த அன்பைக் கடவுளாகிய தாயாரிடமும் கொள்ளவேண்டியவரானார். ஆகையினால் அவர் தமது தாயார் இறந்த செய்தி கேட்டதும் பெருந் துயரமடைந்தார்; விரைவிலே போய்த் தாயாரைச் சுடுகாட்டிலே சேர்த்துத் தகனஞ் செய்தார். அப்பொழுது அன்பினால் வருந்தி அவர்,

> "வட்டிலிலுந் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
> கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து—முட்டச்
> சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
> விறகிலிட்டுத் தீமூட்டு வேன்"

என்று பாடி மனமுருகினார். ஆகையினால் தாயிற் சிறந்தோரு கோவிலில்லை என்பதை எல்லோரும் கண்டனர்.

---

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

## 1. புண்டரீகன்

1. வடதேசத்தில் பண்டரிபுரம் என்று ஒரு க்ஷேத்திரமிருக்கிறது. முன் காலத்தில் அதற்கு லோஹதண்டம் என்கிற பேர் இருந்தது. அந்த ஊரில் ஜத்வா என்று ஒரு பிராமணனிருந்தான். அவன் சிறந்த விஷ்ணுபக்தன். அவனுக்கு ஒரு பிள்ளை பிறந்தது. ஜத்வா அந்தப் பிள்ளைக்குப் புண்டரீகன் என்று பெயரிட்டுச் செல்வமாக வளர்த்து வந்தான்; பிறகு தக்க வயது வந்ததும் கல்யாணமும் செய்து வைத்தான்.

2. புண்டரீகன் தன் மனைவியின் பேச்சைக் கேட்டுக் கொண்டு தாய் தந்தையரைக் கவனியாமலிருந்தான்; சாப்பிட்டீர்களா, படுத்தீர்களா உங்களுக்கு என்ன வேண்டும்— என்று வாயினாலே கூடத் தாய் தந்தையரை விசாரிப்பதில்லை; பணத்தைத் தன் மனம் போனபடி செலவிட்டு வந்தான்.

3. புண்டரீகனுடைய தாய் தந்தையர், "நமக்கு நல்ல காலமில்லை; அதனால் அவன் அப்படியிருக்கிறான். நல்ல காலம் வந்தால் ஒழுங்காய் நடப்பான்" என்றெண்ணிப் புண்டரீகன் செய்யும் குற்றம் குறைகளைப் பாராட்டாமலிருந்தனர். அப்படியிருந்தும் வரவர அவன் அவர்களை வாயில் வந்தபடி திட்டவும் கைமிஞ்சிச் சில சமயம் அடிக்கவும் தொடங்கினான்.

4. புண்டரீகனிடம் அவர்கள் வெறுப்புக்கொண்டனர். "இனிமேல் இவன் திருந்தமாட்டான். இவனிடமிருந்து கஷ்டப்படுவதைவிடச் சாவதே நல்லது" என்று தீர்மானித்தனர். பிறகு ஒருநாள் அவர்கள் சிலரோடு சேர்ந்து கொண்டு காசி யாத்திரை செய்யப் புறப்பட்டுப் போய் விட்டனர்.

5. புண்டரீகன் ஒழிந்தன சனியன்கள் என்று ஸந்தோஷப்பட்டான். அவன் மனைவியும் ஒழிந்தன பீடைகள் என்று ஸந்தோஷப்பட்டாள். அப்பால் சில நாட்களுக்கெல்லாம் காசியாத்திரை செல்லும் சிலர் அந்த ஊருக்கு வந்திருந்தனர். அவர்களைக் கண்டதும் புண்டரீகனுக்கும் காசி யாத்திரை போக எண்ணமுண்டாயிற்று. ஆகையினால் அவனும் தன் மனைவியுடன் புறப்பட்டான்.

6. புண்டரீகன் ஒரு குதிரையில் ஏறிக்கொண்டான். அவன் மனைவியும் ஒரு குதிரையிலே ஏறிக்கொண்டாள்.

இருவரும் புறப்பட்டுப்போனார்கள். போகும் வழியில் தன் தாயுந் தந்தையும் கால்நடையாகப் போய்க்கொண் டிருப்ப தைப் புண்டரீகன் கண்டான். அவர்கள் தள்ளாத கிழவர்க ளாகையினால் வழியில் ஊர் ஊராகத் தங்கிப் போனார்கள்.

7. புண்டரீகன் அவர்களைக் கண்டும் காணாதவனைப் போல் போய்விட்டான். காசிக்குச் சமீபத்தில் குக்குடர் என்னும் ஒரு முனிவர் வசித்து வந்தார். அவர் தமது தாயையும் தந்தையையுமே தாம் தொழும் தெய்வமாகக் கொண்டிருந்தார்; அவர்களுக்கு எப்போதும் பணிவிடை செய்து வந்தார். அதைவிட மேலான புண்ணியமும் தவ மும் இருப்பதாக அவர் எண்ணவில்லை.

8. புண்டரீகன் அந்த ஆசிரமத்திலே போய்த் தங்கி னான். அன்றிரவு மூன்று வேலைக்காரிகள் வந்து அந்த ஆசிரமத்தைப் பெருக்கி நீர் தெளித்துக் கோலமிட்டார்கள். அவர்களைப் புண்டரீகன் பார்த்து யார் இவர்கள் என்று கவனித்துக்கொண்டிருந்தான். அவர்கள் வேலைகளைச் செய்த தும் தெய்வரூபமாகப் புறப்பட்டார்கள்.

9. புண்டரீகன் ஆச்சரியப்பட்டு அவர்களிடம் போய், "நீங்கள் யார்? இங்கே இந்நேரத்தில் பணிவிடை செய்ய வந்ததேன்? நீங்கள் தெய்வ ரூபிகளாய் இருக்கிறீர்களே!" என்று கேட்டான். அவர்கள் "அடே பாபி, கிட்டவராதே" என்றனர். புண்டரீகன் பயந்து அவர்களை வணங்கி, "நான் மூடன்! என்னைக் காப்பாற்றவேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

10. "புண்டரீகா, நீ இந்த ஆசிரமத்திற்கு வந்தபடி யால் உன் பாபம் நீங்கியது. இங்கே வசிக்கும் குக்குட முனிவர் புண்ணிய புருஷர்; பரமசாது; தமது தாய் தந் தையருடைய சேவையையே பெரிதாயெண்ணி யிருப்பவர்.

அவர்க்கு அவர்களே தெய்வம்; வேறு தெய்வம் அவர்க்குத் தெரியாது. இந்த உண்மை அறிந்த புண்ணியவான் அவர். ஆகையினுல் அவர்க்கு நாங்கள் பணிவிடை செய்கிறோம். நாங்கள் மூவரும் கங்கை, யமுனை, ஸரஸ்வதி என்பவர்கள் என்று அவர்கள் கூறினார்கள்.

11. புண்டரீகன் அவர்களை வணங்கி, "தேவிமார்களே! நான் தாய் தந்தையரை அவமதித்த பதிதனாய் விட்டேன். எனக்கு அவர்களுடைய பெருமை தெரியாமல் போயிற்று. இனி நான் கடைத்தேறும் வழியைப் போதிக்கவேண்டும்" என்று பணிந்தான். அவர்கள், "அப்பனே, தாய் தந்தையர் முன்னறி தெய்வம்; அவர்களை அவமதிப்பவன் நரகமடைவான். ஆகையினுல் உன்னுடைய தந்தையை ஸ்ரீ ஹரியைப் போல் எண்ணு; தாயை ஸ்ரீலக்ஷ்மி தேவியைப்போல் எண்ணு; இருவரையும் பூஜைபண்ணு. உனக்குக் கடவுளின் திருவருளுண்டாகும்" என்று சொல்லி மறைந்து விட்டனர்.

12. புண்டரீகன் மறுநாள் பொழுது விடிந்ததும் குக்குட முனிவரை வணங்கி அவ்விடமிருந்து தன் மனைவியுடன் புறப்பட்டான்; நெடுகலுந் தேடித் தாய் தந்தையரைக் கண்டு பிடித்தான்; அவர்களைக் குதிரைமீது வைத்துக் கொண்டு காசிக்கு அழைத்துப் போனான்; அங்கே செய்ய வேண்டியவைகளை யெல்லாம் தன் தாய் தந்தையர் ஸந்தோஷமும் திருப்தியுமடையும்படி செய்தான்.

13. புண்டரீகனிடத்தில் அவர்கள் பரம ஸந்தோஷங் கொண்டனர்; அவன் செய்த தவறுகளை யெல்லாம் மறந்து ஆசீர்வாதம் செய்தனர். புண்டரீகன் மனைவியும் அவர்களிடம் பணிவாய் நடந்து, ஆசீர்வாதம் பெற்றாள். பிறகு புண்டரீகன் அவர்களைத் தன் ஊருக்கு அழைத்துக்கொண்டு வந்தான்; ஊரில் அவர்களுக்கு ஆசிரமங்கட்டி அவர்களை

அதில் வைத்துக் குக்குட முனிவர் தமது பெற்றோரைப் பூஜித்து வந்ததுபோல் பூஜித்தான்.

14. புண்டரீகனிடத்தில் பகவான் ஸந்தோஷமடைந்தார். அதனால் அவர் அவனுடைய ஆசிரமத்திற்கு வந்தார். அவன் அந்த வேளையில் தாய் தந்தையர்க்குப் பணிவிடை செய்துகொண் டிருந்தான். பகவானுடைய காந்தி அவனுடைய கண்களைக் கவர்ந்தது. அதனால் அவன் திரும்பிப் பார்த்தான்; பகவான் வந்திருப்பதைக் கண்டு, இரண்டு செங்கல்களை அவர்முன் போட்டு "இதிலிருக்கவேண்டும்! வந்தேன்" என்று சொல்லி மனதினாலே அவரை வணங்கினான்; தாய் தந்தையர்க்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைக் குறைவில்லாமல் செய்தான்! பிறகு வெளி வந்து பகவானுக்கு நமஸ்காரம் செய்தான்.

15. புண்டரீகனிடம் இதனால் பகவான் ஸந்தோஷங் கொண்டார்; "புண்டரீகா, நீயே எனக்கு இனிய அன்பன்; நீ உன் தாய் தந்தையர்க்குச் செய்த பணிவிடையை எமக்குச் செய்ததாகக் கொண்டோம். உனக்குத் தரிசனந்தரவே நாம் இங்கே வந்தோம். உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்; தருகிறேன்" என்றார்.

16. புண்டரீகன், "ஸ்வாமி, தாம் என்றும் இந்த ஆசிரமத்தில் இப்படியே இருந்தருள வேண்டும். அன்பர்களுக்கு வேண்டிய வரங்களைக்கொடுத்து ஆதரிக்கவேண்டும்" என்று கேட்டான். பகவான் "நாம் அப்படியே யிருப்போம்" என்று வரங்கொடுத்தார்.

17. பிறகு அந்த ஊருக்குப் பண்டரிபுரம் என்கிற பெயர் உண்டாயிற்று. அப்பால் புண்டரீகன் உலகத்தில் பேரும் புகழும் பெருவாழ்வும் அடைந்தான்.—

(பக்தவிஜயம்)

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

## 2. கௌசிகன்

1. கௌசிகன் என்கிற ஒரு பிராமண வாலிபன் காட்டிலே போய்த் தவம் செய்தான். அவனுடைய ஆசிரமத்திற்குப் பக்கத்தில் ஒரு மாமிருந்தது. அதன்மேலிருந்த ஒரு பறவை எச்சமிட்டது. அது அவன் தலைமீது விழுந்தது. அதனால் அவன் கோபங்கொண்டு உயர நிமிர்ந்து பறவையைப் பார்த்தான். பார்த்ததும் அந்தப் பறவை எரிந்துவிட்டது.

2. கௌசிகன் அதனால் தனக்குத் தவம் கைகூடி வந்துவிட்டதாக எண்ணி மகிழ்ந்தான். தினந்தோறும் அவன் பக்கத்துக் கிராமத்தில் பிச்சையெடுத்து உண்பது வழக்கம். இன்றும் அப்படியே அவன் பிச்சை யெடுக்கப் போனான்; ஒரு வீட்டிலேபோய், 'பவதிபிக்ஷாந்தேகி' என்றான். அந்த வீட்டுக்காரி அப்பொழுது தன் புருஷனுக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தாள். ஆகையினால் அவள் "இதோ வந்தேன்" என்று குரல் கொடுத்தாள்.

3. கௌசிகன் கொஞ்சநேரம் காத்துக் கொண்டிருந்தான். அவள் வரவில்லை. அதனால் அவன் கோபங்கொண்டு "வரட்டும் அவள்" என்று சொல்லிக் கொண்டிருந்தான். தன் கணவனுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைச் செய்துவிட்டு அவள் பிச்சை கொண்டுவந்து போட்டாள்.

4. கௌசிகன் அந்தமாதை விழித்துப்பார்த்து, ஹூம் என்றான். அந்த மாது உடனே, "நான் பறவையல்ல!" என்றாள். இப்படிச் சொன்னதும் "காட்டிலே நடந்தது இவளுக்கு எப்படித் தெரிந்தது; என்று கௌசிகன் ஆச்சரியப்பட்டான்; அப்படியே மரம்போல் நின்றான். மாது, "உமது கோபம் என்னை என்ன செய்யும்? நான் தவறு செய்தவளா?

என் கடமையைச் செய்து முடித்துவிட்டு நான் வந்தேன்" என்றாள்.

5. கௌசிகன் அவளுடைய ஞானத்தைக் கண்டு கர்வ மடங்கி வணங்கி, "அம்மணி, இந்த ஞானம் உங்களுக்கு எப்படி வந்தது?" என்று கேட்டான். மாது, "நான் என்னுடைய கணவனைத் தெய்வமாக எண்ணி நடக்கின்றேன். அது தானே ஸ்திரீகளுடைய கடமை? அதன்படி நான் அவர்க்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தேன். நீர் வந்தீர். என் கடமையை முடித்துவிட்டு உம்மை நான் கவனித்தேன். ஸ்வாமி, பதி பூஜையின் பலன் தான் எனக்குப்பலம். அதைத் தவிர வேறொன்றுமில்லை" என்றாள்.

6. கௌசிகன், "தாயே, எனக்கு அந்த ஞானம் கிட்ட வில்லையே! நான் என்ன செய்யட்டும்" என்று கேட்டான். அந்த மாது, "ஸ்வாமி, மிதிலையில் ஒரு கசாய்க்கடைக்காரன் இருக்கிறான். அவன் தர்மவியாதன் என்கிற பெயர் கொண்டவன். அவனிடம் போனால் எவ்வளவோ தெரிந்துகொள்ளலாம்" என்றாள்.

7. கௌசிகன் அந்த மாதை வணங்கி விடைபெற்று மிதிலைக்குப் புறப்பட்டான். போகும்போது "ஒரு கசாய்க் கடைக்காரனிடமா நாம் ஞானத்தை அடையப்போகிறோம்? பார்ப்போம் இதை" என்று எண்ணிக்கொண்டே போனான்; மிதிலைபோய்த் தர்மவியாதன் இருக்குமிடத்தைத் தேடி அவனைக்கண்டான். தர்மவியாதன் அவனைப் பார்த்ததும், "வாரும், கௌசிகரே, உட்காரும்" என்றான்; பிறகு தன் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

8. கௌசிகன், "இது என்ன ஆச்சரியம்! இவனுக்கு நமது பெயர் எப்படித் தெரிந்தது? என்று எண்ணிக் கொண்டே உட்கார்ந்தான். தர்மவியாதன் தன் வேலையை

முடித்தபிறகு கௌசிகனை அழைத்துக்கொண்டு தன் வீட்டிற்குப் போனான்; வீட்டில் அவனை ஓரிடத்தில் உட்கார வைத்து, "இங்கேயே உட்கார்ந்திரும்; நீர் வந்திருக்கிற காரியம் எனக்குத் தெரியும். நான் செய்யவேண்டிய வேலை பாக்கியாயிருக்கிறது. செய்துவிட்டு வருகிறேன்" என்று சொல்லி வீட்டிற்குள்ளே போனான்.

9. கௌசிகன் பதிலொன்றும் பேசாமல் உட்கார்ந்து அவைகளைக் கவனித்துக்கொண் டிருந்தான். அவன் உள்ளே போனதும் கிழவர்களாயிருந்த தன் தாயையும் தந்தையையும் குளிப்பாட்டி உடம்பு துடைத்தான்; அவர்களுக்கு உலர்ந்த வஸ்திரம் உடுத்துவிட்டான்; பிறகு அவர்களுக்கு அன்போடு உணவிட்டான்; அவர்கள் உண்ட பிறகு அவர்களைத் தக்க இடத்தில் உட்கார வைத்தான்; அவர்களிடம் "அதிதி ஒருவர் வந்திருக்கிறார்; விசாரித்துவிட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு வெளியே வந்தான்.

10. கௌசிகன் அவனைக் கண்டதும் எழுந்தான். தர்மவியாதன், "உட்காரும்; நான் வணங்கும் தெய்வம் என்னுடைய தாயும் தந்தையுந்தான். அவர்களுக்குப் பணி செய்வது தான் நான் செய்யும் தவம். உமக்குத் தாய் தந்தையர்கள் இருக்கிறார்களல்லவா? அவர்களை ஆதரிக்க வேண்டிய கடமை உம்முடையதல்லவா? அதைச் செய்யாமல் நீர் தவம் செய்ய வந்துவிட்டீர்! அவர்களுடைய ஆசீர்வாதம் உமக்கில்லாமல் போயிற்று. அதனாலேதான் உமக்கு ஞானம் உண்டாகவில்லை. இப்பொழுதே வீட்டுக்குப் போய் அவர்களைக் கவனியும். அவர்களை வேண்டி அவர்களுக்குப் பிரியமானதைச் செய்யும். அதுதான் சிறந்த தவம்! அதுதான் புண்ணியம்! அதுதான் நீர் செய்ய வேண்டிய கடமைகளுள் முதன்மையானது! அதைச் செய்தால் உமக்கு எல்லாம் கைகூடும்!" என்றான்.

11. கௌசிகன் கேட்டு, "உண்மையான உபதேசம் பெற்றேன். அப்படியே நடக்கிறேன்" என்று சொல்லி அவ்விடமிருந்து புறப்பட்டுத் தன் ஊர்போய்த் தன் தாய் தந்தையரின் வழிபாடு செய்து சகல நன்மைகளையும் பெற்றான். —(பாரதம்.)

---

தந்தைசொல் காத்த தனயனடைந்த பெருமை

## நாபாகன்

1. நாபாகன், ஓர் அரசனுடைய நான்காவது பிள்ளை. அரசன் சிறந்த கல்விமான். ஆதலால் தன் பிள்ளைகள் நால்வரையும் கல்வி கற்றுக்கொள்ள ஒரு குருவினிடம் ஒப்புவித்தான். நாபாகனுக்கு வாசிப்பில் அதிகப் பிரியமுண்டாயிற்று. அதனால் அவன் தன் குருவின் மனம் கோணாமல் நடந்து வந்தான். குரு அவனிடத்தில் ஸந்தோஷங்கொண்டு அவனுக்கு நன்றாய்ப் போதித்து வந்தார்.

2. நாபாகன் இடைவிடாமல் படித்தான். ஓதுவதொழியேல் என்று ஔவையார் சொல்லியிருக்கிறாரல்லவா? அவன் சோம்பலின்றிச் சுறுசுறுப்பாய் ஓதி வந்தான். ஊக்கமதுகைவிடேல் என்பது ஔவையாரின் போதனையல்லவா ? மற்றவர்கள் கொஞ்சகாலம் படித்துவிட்டு நின்றுவிட்டனர். நாபாகன் வயதிலே பெரியவனானான். படிப்பிலே பெரியவனாக வேண்டுமென்கிற கருத்துடையவனாதலால் படிப்பை அப்பொழுதும் அவன் நிறுத்தவில்லை.

3. "நாபாகன் படிப்பிலேயே கவனமாயிருக்கிறான். ஆகையால் இனிமேல் அவன் வரமாட்டான்; ஞானியாய் விடுவான்" என்று அவனுடைய சகோதரர் மூவரும் தீர்மானித்தனர்; தங்களுக்கிருந்த சொத்துக்களை மூவருமாகப்

பங்கிட்டுக்கொண்டனர். சில வருஷங்களுக்குப் பிறகு நாபாகன் வீட்டிற்கு வந்தான்; தன் அண்ணன்மார்கள் பாகம் பிரித்துக்கொண்டு வாழ்வதைப் பார்த்து, 'எனக்கு என்ன பாகம் வைத்தீர்கள்?' என்று அவர்களைக் கேட்டான். மூவரும் சேர்ந்து ஆலோசித்து, "உனக்கு நமது தந்தையையே பாகமாகவைத்தோம்" என்றனர்.

4. நாபாகன் தன் தந்தையிடம் போய்த் தன் அண்ணன்மார்கள் சொன்னதைச் சொன்னான். தந்தை வஞ்சகர்களாகிய அவர்களை வெறுத்தார்; நாபாகனைப் பார்த்து, "அப்பா, நீ வருத்தப்படாதே; உன்னிடம் கல்விச் செல்வமிருக்கிறது. அது அழியாதது. கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி என்பார்களல்லவா? கவலைப்படாதே, நான் சொல்லுகிறபடி செய். ரிஷிகள் யாகம் செய்கிறார்கள். நீ அங்கே போய்ப் பார். அவர்கள் தவறுதலாக மந்திரம் சொல்லுகிறார்கள். அந்த மந்திரம் உனக்குத் தெரியும். நீ அதை அவர்களுக்குச் சொல்லிக் காட்டு. அவர்கள் உன் மீது ஸந்தோஷமடைவார்கள். யாகம் முடிந்ததும் அதில் மிச்சமாகும் பொருளை உனக்குக் கொடுப்பார்கள். நீ அதைப் பெற்றுக்கொண்டு சுகமாயிரு" என்றார்.

5. நாபாகன் தன் தந்தையின் சொற்படியே அந்த யாகத்துக்குப் போனான்; ரிஷிகளுக்குத் தெரியாமலிருந்த மந்திரத்தைச் சொன்னான். ரிஷிகள் சந்தோஷமடைந்து யாக முடிந்ததும் அதில் மிச்சமான பொருளை நாபாகனுக்குக் கொடுத்தனர். நாபாகன் அந்தப் பொருளைப் பெற்றுக் கொண்டு தன் ஊருக்குப்போனான். "வழியில் ஒருவன் வந்து யாகத்தில் மிஞ்சும்பொருள் என்னைச் சேர்ந்தது. அதை நீ எப்படி கொண்டுபோகிறாய்?" என்று அவனைக் கேட்டான்.

6. நாபாகன், "சரி; அப்படியானல் என் தந்தையைக் கேட்போம்; அவர் சொல்லுகிறபடி நடப்போம் வா" என்று சொல்லி அவனைத் தன் தந்தையிடம் அழைத்துக் கொண்டு போனன். அரசன் நடுநிலை தவருதவன். ஆதலால் அவன் அவர்கள் வழக்கைக்கேட்டு ஆலோசித்து, "பாகத்தில் மிஞ்சும் பொருள் ருத்திர மூர்த்தியைச் சேர்ந்தது. இவர் ருத்திர மூர்த்தியானல் இந்தப்பொருள் இவரைச் சேர்ந்தது தான்" என்றன். வந்த புருஷன் ருத்திர மூர்த்தியே யாகையினல், உடனே அவர் தமது சொரூபத்தைக் காட்டினர். நாபாகன் அவரை வணங்கி அவர் பாதத்திலே பொருளை வைத்தான்.

7. நாபாகனிடம் ருத்திரமூர்த்தி ஸந்தோஷங்கொண்டு அவனை வாரியெடுத்துத் தூக்கிவிட்டு, "அப்பா, நீ நன்ருய்ச் சாஸ்திரங்களைப் படித்தாய்; படித்தவன் என்பதற்கு அடையாளமாக உன் தந்தை சொல்வதை நம்பி நடந்தாய். அதனல் உன்னிடம் நான் ஸந்தோஷமடைகிறேன். நீ பாக்கியவான்; குற்றமற்றவன். உனக்கு ஒரு குறைவும் வாராது, என்னுடைய பொருளாகிய இதை உனக்கே கொடுத்தேன். நீ வைத்துக்கொண்டு சுகமாயிரு" என்று சொல்லி மறைந்தார். பிறகு நாபாகன் தன் அண்ணன்மார்களைவிட மேலான நிலைமையிலிருந்து சுகமாக வாழ்ந்து வந்தான்.—(பாகவதம்)

ஆஸ்திகமத உபாக்யானம்

முதற் பாகம் முற்றிற்று.

59624

P. R. Rama Iyar & Co., Printers, Madras.

O2
N27

# ஸ்ரீ கிருஷ்ண சரித்திரம்

(சித்திரப் படங்களுடன்)

சிறந்த கிரந்த கர்த்தாவைக் கொண்டு
சிறுவர்களுக் கென்றே வரைந்ததாகும்.

விலை அணா 6

---

# ஆஸ்திகமத : : : உபாக்யானம்

## (II-ம் பாகம்)

வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதியார் எழுதிய

விலை அணா 8.

(அச்சில்) சீக்கிரம் வெளிவரு...

# பால பாரதம்

சிறுவர்கள் எளிதில் உணருமாறு சுலபமான
சன நடையில் எழுதப்பட்டிருக்கிறது. பாலர்க்
கன்று பல நூல்கள் எழுதி உபகரித்திருக்கும்
ரகவி. திரு. அ. சுப்பிரமண்ய பாரதியாரால்
யற்றப்பட்டது.

மூன்று அழகிய சித்திரப்படங்கள் சேர்க்கப்
டிருக்கின்றன.

விலை அணா 8.

லிதா விலாச புஸ்தகசாலை,

திருவல்லிக்கேணி, சென்னை.

6A
1-77